# அஞ்சலி

நிர்வாக ஆசிரியர்
எ.எம்.செல்வராஜா



NOVEMBER
1971

விலை
-/45

THE TAMIL ILLUSTRATED MONTHLY OF CEYLON

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஆடவர், மகளிர், குழந்தைகளுக்கேற்ற நவரகமான பிடவைகள் ரெடிமேட் உடுப்புகள், குடைகள் ஆயிரக்கணக்கான தினுசுகளில் கிடைக்கும் இடம்....

★

நைலோன் பிடவைகள் மணிபுரி சாரிகள், தினசரி பாவனைக்குகந்த உயர்ந்த ரக சாரிகள் கிடைக்கும் இடம்....

✱ ✱ ✱

தரத்திற்கும் சேவைக்கும்
புகழ்பெற்ற இடம்...

**விஜயா கார்ப்பரேஷன்**

243, மேயின் வீதி,
கொழும்பு 11.

போன்: 27359

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரமானது சுவையானது.

நீங்கள் குடும்பத்துடன் குதூகலமாக

அருந்துவதற்கு

★ ரூபி பிராண்ட் பெல்ஜியம் மாசீனி

★ ஜெம் பிராண்ட் கற்கண்டு

★ ஓரியன்டஸ் ரூபி பிராண்ட் கற்கண்டு

★ ஜெம் பிராண்ட் மா சீனி

★ சர்க்கரைத் தூள்

★ ஓரியன்ட்ஸ் கிரீன்லேன் ரவை

★

ஆகிய தித்திப்புப் பண்டங்களையே வாங்குங்கள்!

தொடர்பு கொள்க

ஓரியன்ட் இன்டஸ்ரிஸ் அன்

கமர்ஷியல் கம்பெனி

"ஓரியன்ட்ஹவுஸ்"

190, நீர்கொழும்பு வீதி,

பேலியகொட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With*

*Best*

*Compliments*

*from*

# T. S. SILVEIRA & CO.,

COMMISSION AGENTS.

33, OLD BUTCHER STREET,

COLOMBO.

T'phone : **26146.** T'gram : **Mornington**

**Residence :** 9, St. Lucia's Square,
Kotahena,
COLOMBO-13.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர்கொழும்பில்

உங்களுக்குத் தேவையான

கேக் ஆடர்களுக்கும்

சுத்தமான

சாப்பாடு, தேநீர், சிற்றுண்டி

வகைகளுக்கும் சிறந்த இடம்

# டயஸ் பேக்கரி

எல்லா விருந்து வைபவங்களுக்கும்,
சிறந்த முறையில் உணவு தயாரிப்பவர்கள்

191, மெயின் வீதி,
நீர்கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

DISTRIBUTORS FOR :-

C. I. C. PAINTS & AGRO-CHEMICALS
S-LON PIPE & FITTINGS
AND
I. A. C. PRODUCTS

* * *

NATIONAL TRADING
CORPORATION

10, D. S. SENANAYAKE VIDIYA,
KANDY.

T'Phone : 7 1 5 8. T'Grams : NATRADCOR



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஞ்சலி

**மாத சஞ்சிகை**

விரோதிகிருது ஞு கார்த்திகை மீ * * * 1971 நவம்பர் மாதம்



நிர்வாக ஆசிரியர்:

ஏ. எம். செல்வராஜா


★


அலுவலகம்:

198, நீர்கொழும்பு வீதி,
வத்தளை.


★ ★


சந்தா விபரம்:

அரை வருடம் ரூ. 3-00

ஒரு வருடம் ரூ. 6-00


உள்ளே...


தலையங்கம் ... ... ... ... 7

**தொடர் கதை**

மாறுதல்கள் (தெளிவத்தை ஜோசப்) ... 54

**கதைகள்**

விடியும் வேளையில் அக்கரையூரன் ... 9

கறுப்பியைக் காணவில்லை செங்கை ஆழியான் ... 17

புதிய காற்று பீ. மரியதாஸ் ... 24

பொழுதுபோக்கு மார்டின் விக்ரமசிங்க ... 29

நியதி நீர்வை பொன்னையன் ... 39

**கவிதைகள்**

அவன் ஏது செய்கின்றான்? இருகலை செல்வு ... 38

திங்கள் மூன்றினும் மறந்திடுவாயோ? கலேவெல பி. எம். அன்வர் ... 51

துணை பலப்பிட்டி அரூஸ்... ... 60

வாழ்வு மு. கனகராசன் ... 35

கல்லறை ,, ... 58

**கட்டுரைகள்**

நாடோடி இலக்கியம் கே. அருள்பிரகாசம் ... 36

யாழ்கொடி பறந்த ஈழம் எம். ஏ. கிஸார் ... 52

பனை விளை கிராமம் எஸ். எம். ஜே. பைஸ்தீன் ... 61

தமிழ் பேசும் சிங்களப் படம் ஏ. ரகுநாதன் ... 63


இந்த இதழில் வெளிவரும் கதைகள், கவிதைகள் ஆகியவற்றில் உள்ள பெயர்கள் யாவும் கற்பனையே. படைப்புகளில் தெரிவிக்கப்பட்டிருக்கும் கருத்துக்களுக்கு அவற்றின் ஆசிரியர்களே பொறுப்பாளிகளாவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆயுட் காப்புறுதி போல்
## ஆதரவு தருவது வேறில்லை

**உங்கள் சேமிப்பு ?**

* உங்களுக்கும். உங்கள் குடும்பத்தாருக்கும் ஆயுட் காப்புறுதி உறுதியான சேமிப்பை ஏற்பாடு செய்கிறது. ஆயுட் காப்புறுதி நிதிகள் தேசிய அபிவிருத்தியில் முதலீடு செய்யப்படுகின்றன. இலங்கையின் கைத்தொழில் விருத்திக்கு அவை உறுதுணை புரிகின்றன.

* ஆயுட் காப்புறுதிச் சேமிப்புக்கள் உங்கள் குடும்பத்தைப் பாதுகாப்பதற்கு மட்டுமல்லாமல் நாட்டின் பொருளாதார முயற்சிகளை ஊக்குவிக்கவும் உதவுகின்றன என்பதை நினைவில் வைத்திருங்கள்.

விவரங்களுக்கு :

### இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்

**288, யூனியன் பிளேஸ்,**
**கொழும்பு—2.**

---

## எல்லாவித அச்சு வேலைகளும்

★ சிறந்த முறையில்

★ குறித்த நேரத்தில்

★ குறைந்த விலையில்

செய்து தரப்படும்.

## நெஷனல் பிரிண்டர்ஸ்

**241, கொழும்பு வீதி, கண்டி.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர்: 1

இதழ்: 9

அஞ்சலி

# கிழக்கிலங்கைச் சிறப்பு மலர்

மலையகச் சிறப்பிதழாக வெளிவந்த 'அஞ்சலி'யின் நான்காவது இதழுக்கும் வடபகுதிச் சிறப்பிதழாக வெளிவந்த ஏழாவது இதழுக்கும் நாடெங்கும் கிடைத்த பெரும் வரவேற்பு எமக்கு இப்பணியில் மேலும் உற்சாகமூட்டுவதாயிருக்கின்றது. ஆகவே ஏற்கனவே அறிவித்திருந்தபடி 'அஞ்சலி'யின் பத்தாவது (டிசம்பர் மாத) இதழ் கிழக்கிலங்கைச் சிறப்பிதழாக மலரவிருக்கும் நற்செய்தியை மகிழ்வுடன் நினைவூட்டுகிறோம்.

முன்னர் வெளிவந்த இரண்டு சிறப்பிதழ்களிலும் பார்க்கப் பல வழிகளிலும் சிறப்பானதாகக் கிழக்கிலங்கைச் சிறப்பிதழ் வெளிவருமென எதிர்பார்க்கிறோம். எமக்கு ஏற்கனவே கிடைத்துள்ள படைப்புகள் இதனை உறுதிப் படுத்துகின்றன. கிழக்கிலங்கை மக்களின் வாழ்க்கையை எல்லாக் கோணங்களிலும் முழுமையாகப் பிரதிபலிக்கக்கூடியதாக இதழ் அமையவேண்டுமென்பதே நம் எல்லோரினதும் ஏகோபித்த விருப்பமாகும். அதற்கமையச் சிறப்பிதழுக்குக் கிழக்கிலங்கை எழுத்தாளர்களிடமிருந்து விடயதானங்கள் வரவேற்கப்படுகின்றன.

மலரில் பிரசுரமாவதற்கென அனுப்பப்படும் சிறு கதைகள், கட்டுரைகள், கவிதைகள், துணுக்குகள் யாவும் இயன்றவரை கிழக்கிலங்கை மக்களின் வாழ்க்கையைப் பின்னணியாகக் கொண்டவையாயிருத்தல் அவசியம் என்பதை மீண்டும் வலியுறுத்துகிறோம். கிழக்கிலங்கை சம்பந்தப்பட்ட படங்களும் வரவேற்கப்படுகின்றன.

மலர் சிறந்த முறையில் வெளிவருவதற்கு உதவிபுரியும் வகையில் மலரில் பிரசுரிப்பதற்கு விளம்பரங்களும் வரவேற்கப்படுகின்றன. இத்துறையில் நமது வாசகர்கள், எழுத்தாளர்கள், விற்பனையாளர்கள் ஆகியோரின் ஒத்துழைப்பு பெரிதும் நாடப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

O அசனுலெவ்வை என்ற, அந்தச் செம்படவன், 'பால்க் கவர்ச்சி' என்ற பளபளப்பான ஆனுல் பலஹீனமான அந்தத் தூண்டிலில 'பல்க்கீஸ்' என்ற இரையைக் குத்திப் போட்ட போதெல்லாம் சுங்கான் மீனும், குறட்டைக் குஞ்சுகளுமே அகப்பட்டன? ஆனுலும், சமுதாயமென்ற அந்தக்குளத்தில் திரிந்த கயல் களும், வரால்களும் அந்தத் தூண்டில்களில் அகப்படாமலேயே அந்த இரையை 'முகர்ந்து' விட்டுச் சென்று கொண்டிருந்தன. அதேவேளையில் சில திருக்கைகளும், வாளைகளும் 'பொருள்' என்ற போதையை வீசி 'மேய்ந்து' கொண்டுபோய் விடவும் முயன்று கொண்டிருந்தன! அவற்றின் வருகைகளையெல்லாம் அந்தச் செம்படவன் மிகவும் சரியாகவே பயன் படுத்தக்கொண்டான்!, ஆயினும்... ?

O பல்கீசின் நெஞ்சமென்ற பொய்கையில், நினைவுகளென்ற காட்டெருமைகள் கிடந்து சேறும் சகதியுமாகக் கலக்கிக் கொண்டிருந்தன. அங்கு மலர்ந்து நின்ற அல்லியும், தாமரையும் அந்தக் கட்டெருமையின் கால்களுக்கீழ் அகப்பட்டு கசங்கிக்கொண்டிருந்தன.

O தந்தை, என்ற மகத்துவமான ஸ்தானத்திற்கே படுகுழி வெட்டுவதன் மூலம் சமூகத்தையே மூக்கில் விரல் வைத்து திகைக்கச் செய்யும் பல்கீசின் தந்தை—வாப்பா, அசனுலெப்பை, எத்தகைய அபூர்வமான—குணசித்திரப் பாத்திரம்?!


மருதூர்க்கனி, எழுதும் குறுநாவல்

# சிலந்தி வலை பின்னுகிறது

அஞ்சலி

கிழக்கிலங்கைச் சிறப்பிதழில் ஆரம்பமாகிறது




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




காதலின் களைத்துப்போகாத மென்மையான இனிமையைப்போல் அந்திச்செவ்வானின் அழகுக்கோலம் மனதுள் குதூகலத்தை மூட்டி இனிக்கவைத்துக் கொண்டிருந்தது. எத்தனையோ ஜீவன்களின் உணர்வுகளைக் கௌவி இழுத்து தன்னுடன் ஐக்கியமாகிவிடத் துடிக்கவைக்கும் அந்த மேற்கு அடிவான் அழகின் ஜீவிதத்தை நித்தியமற்றதாய்க் காட்ட பொறுமையில் வெந்து துடிக்கின்றன, இருளின் இலேசாய்த் துளிர்த்துக்கொண்டிருக்கும் கரங்கள்.

வாழ்க்கையை போராட்டமாக்கி எழுந்த 'பசி' யின் கூக்குரலை இயன்ற மட்டில் மழுங்கச்செய்துவிட்டு காக்கைகள் சில ஆயாசமாய்க் கத்திக்கொண்டு, கூடுகளுக்குப் பறந்து கொண்டிருந்தன. நாளை உதயத்திலே அவைகள் தொடரவிருக்கும் இந்தப் போராட்ட நினைவுகளில் எழுந்த துயர ஒலம் போல் இருந்தது அவற்றின் இரைச்சல்.

காகங்களுக்கு மட்டுமா இந்தத்துயர்?

நாளை என்ற பீதியிலே ஆத்மா துடிக்கக் கசிந்துருகும் வறுமை வாய்ப்பட்ட மனித ஜீவன்கள்தான் எத்தனை!

ஜெமீலா ஒரு கணம் சென்னியை உயர்த்தி மேலே பறந்து கொண்டிருந்த காக்கைகளை வெறிக்கப் பார்த்துவிட்டு மீண்டும் தன்னையும், தான் வாழும் சிதைந்து உருக்குலைந்த ஓலைக் குடிசையையும் வெளிக்குத் தெரியாது வருடக் கணக்கில் திரையிட்டு வரும் அந்தக் கிழடு தட்டிப்போன வேலியினூடே பார்வையைப் போக்கினாள்.

குன்றுங் குழியுமாய் சிதிலமடைந்து வெறுந்தரையாய் தன்னை இழந்து வரும் தாரின் சுவடு கூட மங்கிப்போன அந்த றோட்டில் மேய்ந்து கொண்டிருந்த அவள் கண்கள், வெகு நேரமாகியும் சலிப்போ களைப்போ அடையவில்லை.

வாத்சல்யமான சிரிப்பும் கதைப்புமாய் நாங்கள் ஆத்மாவாலேயே நிரந்தரத்துவமாய் பிணைக்கப்பட்டவர்கள் என்பதுபோல், அற்புதமாய் உடுத்துக்கொண்டு வந்த ஒரு இளம் ஜோடியின்மேல் ஜெமீலாவின் திருஷ்டி பாய்ந்தபோது, தன் கதிமோக்ஷமற்ற வரண்ட வாழ்வு விமோசன மற்று தான் நசுங்கிப் போகும் துர்ப்பாக்யத்தில் மனம் வீழ்ந்து பெருமூச்சுவிட்டாள். விசார நினைவுகள் பாய்ந்த இதயத்தின் ஏக்கத்தில் நீர் தழும்பி நின்றது அவள் கண்களில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாரோ வருவது போன்ற அரவத்தில் தன் நினைவுகளில் அமிழ்ந்து கிடந்த மனம் திடுக்குற ஜெமீலா பார்வையை பின்புறம் மீட்டுக் கொண்டபோது, உள் விழுந்த கண்களில் சினம் தெறிக்க தன்னைக் குரூரமாய்க் கிழித்து விடுபவள்போல் வரும் தாயின் வேகத்தில் அவள் வதனம் சாக்களை யுற்றது.

'ஆண்டவனே இண்டைக் காலும் என்னக் காப்பாத்த மாட்டாயா?' ஜெமீலாவின் நடுங்கிய உள்ளம் இரந்து கொண்டது ஆசைப்பட்டவற்றுக் கெல்லாம் பிரார்த்தித்துச் சலித்துப்போன ஆண்டவனிடம்.

பாவம் ஜெமீலா. அனேகரின் பிரார்த்தனைபோல் அவள் கேட்டுக் கொண்டதும் வெறும் சூன்யத்தில் வீசப்பட்டதுபோலாயிற்று.

தாயின் அசங்கியமான திட்டு மாரியில் ஜெமீலா குன்றிப்போய் கண்களில் பயம் வடிய நின்றாள்.

'அடியேய் கள்ள நாய் வேச! எத்தனை நாளைக்கித்தான்டி வேலிப் பக்கம் போகாத போகாத எண்டு ஒனக்கு ஆக்கின பண்றது. ஒண்டத் தான் ஹறுமில பெத்தாயெண்டு இன்னமொண்டுக்கு ஆள் தேடுற யாடி?' ஜெமீலாவின் தாய் ஆயிஸா தொண்டை வெடிக்கக் கத்திக் கொண்டே, இந்த மாதிரி வெறி பிடித்த சமயங்களில் ஊறும் கைவலுவில் ஜெமீலாவின் தலையைப் பற்றி அவளைத் தரையில் தள்ளி தோள்பட்டையில் இரண்டைப் போட்டு, தன் ஆவேசத்தைத் திருப்தியுடன் தீர்த்துக்கொண்டு, ஏதோ புரிய முடியாத வார்த்தைகளைப் பிதற்றிக் கொண்டு வெளி வாசலுக்குச் சென்றாள்.

குடிசையைச் சுற்றி ஊரில் வம்பு சேர்த்து இராப்பகலாய் 'வளவள' வென்று கொட்டி அதில் சுகமும் திருப்தியும் காணும் கூட்டம் நிற்பதைக் கண்ட, அழுது கொண்டிருந்த ஜெமீலா 'என்னடி ஓங்களுக்கிஞ்ச வேலே' என்று ஆத்திரத்துடன் அழுகையும் கலக்கக் கத்தினாள்.

அவளது சினத்திற்கு அஞ்சியோ அல்லது அவளது பரிதாப கோலத்தில் இளகியோ நகர்ந்து விட்டது அந்தக் கூட்டம். ஜெமீலா கண்களை மூடிக் குந்திக்கொண்டு விசித்து விசித்து அழுதாள். அவளுக்கொரு நாள் நிச்சயம் கண்ணீர் வற்றித்தான் போய்விடும்.

இரவின் கரிய சொரூபம், கதிரவனாட்சியின் சுவடாய் மிஞ்சிக் கிடந்த ஒளியின் சிறு துளியையும் விழுங்கி, தன்னை பிரபஞ்சமெங்கும் நிறைத்துக் கொண்டபோது. ஆயிஸா விளக்கேற்றுவதையே மறந்து குடிசைக்கு வெளியே நின்று அமைதியாய்க் கிடந்த சூன்ய வெளிக் கப்பால் தெரியும் வானை நோக்கி பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்தாள். துன்பக் கேணியில் வீழ்ந்து அழுகிப்போன அவள் அவல வாழ்க்கை பெருமூச்சைத் தவிர வேறு எதைத்தான் தரப் போகிறது

வேதனையின் சுமையில் குந்தி இருந்து விசித்துக்கொண்டிருந்த ஜெமீலா, எதிரே கிடந்த பழம் பாயில் விசாரம் தீர அழ வேண்டும் போல் குப்புற வீழ்ந்து தேம்பினாள் இப்படியே காலமெல்லாம் நசுங்கிக்கசிந்து கண்ணீர்விட்டு வதைபட விதிக்கப்பட்ட தன் வாழ்வுக்காய் அவளால் அழாமலிருக்க முடியுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெமீலா பெரிய மனுஷியாகிய சொற்ப தினங்களுக்குள் அவள் தந்தை மனைவி மக்களையெல்லாம் நிர்க்கதியாய்த் தவிக்கவிட்டு ஓர் இரவில் திடீரெனக் கண்களை மூடி விட்டபோது, ஆயிஸா ஜெமீலா வையும் பத்து வயது ஆண் குழந்தை யையும் கட்டிக் கொண்டழுது புரண்டாள். பிள்ளைகளும் 'இனி ஒரு பொழுதும் வாப்பாவைக்காண முடியாதே' என்ற விசாரத்தின் இதயக்குமுறலில் அடித்துக்கொண் டழுதனர்.

இனி எப்படித்தான் வயிற்றைக் கழுவிக் கொள்வது? அவர்தான் போய்விட்டாரே ஆயி ஸாவை வாட்டி வதைத்து துயர் மூட்டிய காரணமே இதுதான். அவளுக்குக் கணவனின் மறைவை விட அவன் சம்பாத்யப் பிரிவுதான் தாங்கொணு வேதனையாய் நெஞ்சை நிறைத்தது.

பிரிவுகளின்போது வடிக்கும் கண்ணீரில் தொனிக்கும் அர்த்தங் களே இந்த வகையில்தானே!

தனி ஜீவனையே பிழைக்க வைக்க இயலாது எத்தனையோ ஆண் பிறவிகளே திண்டாடி மாய்ந்து போகும்போது, எந்தத் தொழிலுமே அறிந்திராத ஆயிஸா ஜெமீலாவின் தொழில் மூன்று ஜீவன்களையும் காப்பாற்றத் தவருது என்ற வக்ர நம்பிக்கையில் வாழலாம் என்பதில் தைரியமுற்ருள்

பீடி சுற்றுவதில் பிரமாத தேர்ச்சியுள்ள ஜெமீலா, யாரோ இழுக்கவேண்டிய குடும்பப்பழுவை தன் தம்பியை உதவிக்கு வைத்துக் கொண்டு மூச்சிரைக்க இழுத்தாள். கால தேவனின் ஸ்தம்பிதமற்ற இயக்கம்போல் அவள் சுற்றிச் சுழன் ருலும் அவள் படைத்ததெல்லாம் மண் சோற்றுக்கு சாம்பற்கறிதான். எத்தனையோ நாட்கள் அவர் கட்கு இந்த மண்ணும் சாம்பலும் கூட கிடைக்க முடியாது போய் விட்டது.

காலம் வருடக்கணக்காய் உருண்டு மடிந்தாலும், ஆயிஸாவின் குடிசையை நிர்த்தாட்சண்யமாய் பீடித்து ஜீவவதை செய்துகொண் டிருந்த வறுமை மடிந்து வாழ்வு இலேசாய் இருப்பது மிக அரிதாகிக் கொண்டு சென்றபோது, தன்னை முற்றுக்கையிட்டுத் தீய்க்கும்கொடிய வறுமை நெருப்பிலிருந்து தன்னைத் தப்புவித்து, வாழ்க்கையின் சுகந்தம் தேடியோ என்னவோ மகன் ஊரை விட்டு ஓடிப்போன துயரில் சதா காலமும் பைத்தியம் பிடித்தவள் போல் அவள் அழுது புலம்பிக் கொண்டிருந்தாள்.

தங்களுக்கு வசந்தம் வீசும் எதிர்காலமொன்றில் அவளூற்ற வலுவான நம்பிக்கையே தன் மகனின் எண்ணத்தில் ஊன்றித்தானே. அவளது கனவுகளை யெல்லாம் மணல் வீடாக்கி மறைந்த அவன் பிரிவை அவளால் எப்படித் தாள முடியும்?

ஜெமீலா தன் தம்பியின் பிரிவில் தன் எதிர்கால சுகக்கனவு களெல்லாம் மூழ்கடிக்கப்பட்ட வருத்தத்தில் அழுந்திப்போய் இனி யொரு நம்பிக்கை தான் விழைந்த வாழ்க்கையில் கொள்ள யார் இருக்கிருர்கள் என்ற மனே விசாரத்தில் அவளுக்கு உலகமே இருண்டது

பருவமடைந்து பத்தாண்டு களைத் தாண்டிய இத்தனை காலத் துக்குள் ஜெமீலா எத்தனை பெண் களின் இனிமையான மணவாழ்க் கையைக் கண்டு ஏங்கிப் பெருமூச்சு விட்டு, அந்தப் பாக்கியம் பெருமலே தன் ஆத்மா அழிந்து விடுமோ என்று விம்மியிருக்கிருள். மனித மனங்களின் இருட்டறையில், ரகசி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யத்தில் அழுத்திக் கொண்டிருக்கும் உணர்வுகளில் அவள் வெந்து கனவுகளாக சுகித்துக்கொண்டிருந்தாள். அதன் சுகங்களே, அந்த பருவத்தின் உணர்வுகளில் பின்னிக்கிடந்த இச்சைகளை அனுபவிக்க சீதனமே சட்டபூர்வமாய் வழிசெய்யும் என்ற பரம்பரையாய் வரும் உண்மை, தன் அபிலாஷைகளுக்கு 'முக்தி' கிடையாதென்பதை நிதர்சனமாக்கிய போது, எந்த ஆணாவது தனக்கு நன்மைக்காவது வாழ்வளிக்க இரங்கமாட்டானா? என்று தனக்குள்ளாகவே பரிதாபமாய்க் கேட்டுக்கொண்டிருந்தாள்.

அவள் வாழ்க்கையின் சுகிப்பைக்காண ஓடிய எண்ணங்கள் அடிவானத்தைத் தொட ஓடுவதுபோல் இருந்தன.

அன்று ஜெமீலாவின் செயற்கையற்ற அழகின் ஜாஜ்வல்யம் தான் அந்த வெளியூர் மீன் வியாபாரியின் கண்களைப் போதை முட்ட பார்க்க வைத்துக் கொண்டிருந்தன. அவளும் குளிர்ச்சிப் பார்வையால் அவனை அபிஷேகித்துப் புன்னகைத்தாள் ஆண் வாசத்தில் அவளுள் ஏதோ சுகமான உணர்வுகள் கிளர்ந்து கொண்டிருந்தன

அதீத கம்பீர அழகு இல்லாவிட்டாலும், இளமை குன்றாத வாட்டசாட்டமாய் அவள் ஆசைப்படுகிற அந்தஸ்து வரை இருந்தது அவன் லட்சணம்.

இருவரும் விழிமொழியால் ஸ்தாபித்த 'காதலாய்' தொனிக்கும் அந்தத் தொடர்பின் நீட்சி ஜெமீலாவுக்கு தான் கண்டு ஏங்கிய வாழ்வு நிச்சயம் தனக்குக் கிடைக்கும் என்பதில் நம்பிக்கையூட்டியது.

ஒருநாள், அவன் அவளைச் சந்தித்தான். அவள் தன் நிராசையுற்ற தாபங்களைக் கொட்டிக் குமுறி கண்ணீர் விட்டு அவனிடம் 'சுபீட்சம்' கேட்டாள். அவன் மௌனமாய்ச் சிரித்துக் கொணடே, கூறினான். '' ஜெமீலா, என்னதவிர யாரையுமே ஒனக்குத்தாலி கட்ட விட மாட்டன். சத்தியமா இத நீ நம்பு''

அவன் வார்த்தைகளின் வக்கிரமான நம்பிக்கையில், தன் பொறுமைக்கு ஆண்டவனுப் ஏதோ பெரிய வாழ்வொன்றை அருளி விட்டது போல் அவள் நெஞ்சு பெருமிதத்தால் புடைத்தபோது தன் பிடி சுற்றிக் காய்த்துப்போன விரல்களை ஆதாரமாய் வருடிக் கொண்டே அவன் கணகள் அவளிடம் எதையோ கேட்டன. அவளுக்கு அந்தப் பார்வையின் அர்த்தம் துலாம்பரமாய்ப் புரிந்த கணம், திடுக்குற்றுத் தயங்கினாலும் 'அவன் கைவிடமாட்டான் என்ற காரணமற்ற உறுதியில் அவனுக்கு மஞ்சமாக்கினாள். தன் உடலை, அவன் பெற்ற முன்னைப் போதுமே பெற்றறியாத ஆழ்ந்த இன்பத்தில்தான் ஜெமீலாவும் திளைத்தாள்

அவள் கற்பனையில் கண்ட சுகம் எவ்வளவு அல்பம்

தன்னை வாழ்க்கையின் ஒரு புதிய பீடத்தில் அமர்த்த வைக்கப் போகும் அவன் கேட்டதை மறுக்க மனமின்றி தன்னைத் தாராளமாய் ஈந்த அன்றைய தினத்திற்குப்பின் ஒருமுறை கூட அவனைச் சந்திக்க முடியாமல், வியாகூலத்தில் தான் அழிந்து போவது சாத்தியமாகப் போகிறது என்பதில் ஆழப்பதிந்தது ஜெமீலாவின் மனம் அவன் இனி ஒருபொழுதும் வரமாட்டான் என்பதில் அவளுற்ற பலமான நம்பிக்கையில் அவன் வருவான் என்ற எதிர்பார்ப்பு துளிகூட இல்லாது வரண்டது

உடற்பசியால் புழுங்கிக் குமைந்த ஒரு பெண்ணின் அசட்டுத் தனமான மனோவேகத்தை சாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுமாக்கி, தன் கற்பொன்றில் மட்டும் மானமாய் வாழ்ந்த அவளை, வஞ்சித்து வாழ்க்கையின் நரகக் குழிக்கே தள்ளி விட்டான் அவன்.

ஜெமீலா கருவுற்ற நிலையறிந்த ஆயிஸா, வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு கதறித் திட்டினாள் ஜெமீலாவை மானஹீன மாய் ஏசி தாய் தன் காய்ந்து போன கைகளால் ஆவேசம் கக்க அவளை அடித்துக்கொண்டிருப்பதைக் காண ஊரே கூடி நின்றது.

"என்ன காரியத்தடி நீ பார்த்து என்ர மானத்த சந்தியில் போட்டிருக்காய். என்ர குடுப்பத்தில் ஒருத்தி கூட இப்படி மானங்கெட்டு வேசையாக இல்லேடி. இப்ப நீ புள்ளய உண்டாகி இரிக்கிய நாளக்கி ஆருடி ஒன்ன நன்மைக்காலும் கட்டப் போறான்?' ஆயிஸாவின் ஒப்பாரி ஒலத்திலே ஜெமீலாவுக்கு நேர்ந்த கதியின் உண்மை புதிய வார்ப் படங்களில் எங்கும் பரவி விட்டது.

அவள் அந்தக்கணமே வேசை யாக பிரகடனப் படுத்தப்பட்டு, இத்தனை காலமும் மானசீகத்தில் தெரிந்த அவள் உருவம் சமூகத்தால் இளக்காரமாய் காறி உமிழப்பட்டது.

கணவன்மாருக்கும், மனைவி மாருக்கும் ரகசியத்தில் இழைக்கப் படும் துரோகங்களையே மறைத்து, தாம் புனிதம் கெடாதவர்கள் என்ற வேஷத்தில் வாழும் சமூகம் அவளைப் பார்ப்பதையே பாபமாகக் காட்டி ஒதுங்கிக்கொண்ட நிலைக்காய் அவள் வருந்திக் கொள்ளவில்லை.

தாயின் உக்கிரமான ஹிம்சை யில் அவள் வதைபட்டாலும் தன்னைப் பாழ்படுத்திப் பறந்தவனைக் காட்டிக்கொடுக்க மறுத்ததில் பெற்ற வெற்றியில் அதை அவள் கருதியது அவனுக்குச் செய்த நன்றியாகவே.

தன்னுள் வேர்பாய்ச்சி அழுத்திக் கொண்டிருந்த அந்த 'பசி' யால் உருகிப்போன அவள், அவன் போட்ட தீனிக்காய் நன்றி செலுத்த வேண்டாமா?

ஜெமீலாவுக்கே தன் செயல் ஈனத்தனமாய் சதா உறுத்திக் கொண்டிருந்த அவளது வயிற்றுச் சுமை இறங்கியது. ஆனாலும் அவள் சோரம் போனதை நித்திய வடுவாய் கற்பித்துக்கொள்ள ஏதுவான அந்தச் 'சிசு' தான் பிறந்த சில நிமிடங் களுக்குள்ளே, இந்த அழுகிப்போன உலகம் தன்னை நடத்தை கெட்டுப் பிறந்தவன், எனத் தூற்றிப் பழித்து விடுமென்றுதானோ என்னவோ கண்களை மூடிக்கொண்டது.

காலம் தன்பாட்டில் விரைந்தது

இப்போது ஜெமீலா உற்ற பழி யின் விளைவால், தாயின் கருணையற்ற நிஷ்டூரங்களால் சிதைக்கப்பட்டு வருந்தினாள். அந்த இன்னல்களுக் குள்ளே அவள் பீடிசுற்றி தன்னையும் தாயையும் வாழ்வித்து வந்தாலும், குடிசைக்கு அப்பால் அவள் பார்வை பாய ஆயிஸா அனுமதிக்கவில்லை. ஆயினும் ஜெமீலா தாயில்லாது குடிசை வெறுமையுற்ற பொழுதில், அவர்களுக்குத் திரையாய்க்கிடக்கும் அந்த கிழம் விழுந்த வேலியை அண்டி அதனூடேதான் பார்த்தாள், தான் பார்க்காது நிர்ப்பந்திக்கப்பட்ட தன்னைப் பிடித்துத்தள்ளி விலகிக் கொண்ட அந்த உலகத்தை.

அவளது திருட்டுத்தனமான திருஷ்டியில்,— உற்சாகத்தில் — சுறு சுறுப்பாய் இயங்கும் மனிதர்களின் இந்த போலித்தனமான இயக்கம், உலகம் வெகு மகிழ்ச்சியில்தான் திளைத்துக் கொண்டிருக்கிறது என்ற பிரமையை அவளுள் ஊற வைத்தது.

வாழ்க்கையின் ஆனந்தசுகங்கள் அவளை வாழ்வதற்காய் தள்ளிக் கொண்டபோது அவள் சபலங்களால் நிறைக்கப்பட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையின் சுகந்தங்கள் எத்தனை ரூபங்களில்.

அவளை, அவன் அனுபவித்ததில் தாக்குண்டு மழுங்கிப்போன அந்த 'வேட்கை' மீண்டும் கூராகி அறுக்கத் தொடங்கியது அவள் இதயத்தை ஆனால் அதற்காய் மீண்டும் பழிபட அவள் சித்தமாயிருக்கவில்லை.

அழகும், பண்பும் கெடாத எத்தனையோ கன்னிப் பெண்கள் வாழ்விழந்து தவிக்கும்போது இந்த இரண்டுமே மாசாகி, சமுகத்தால் இளக்காரமாய் ஒதுக்கப்பட்ட ஜெமீலாவுக்கா சுத்தமான தாம்பத்ய வாழ்க்கைமீது ஆசை?

ஜெமீலாவின் இதயத்திலும் இந்த அர்த்தத்தில் தான் கேள்வி யெழுந்து தன் அசட்டுத் தனமான அப்பாவி ஆசையில் நகைத்துக் கொண்டாலும், உலகின் கல கலப்பான மாயையில் வீழ்ந்து அதன் மேல் ப்ரீதியுற்ற மனத்தை மீட்டுக் கொள்வதில் அவள் வெற்றி பெற வில்லை

அன்றும் வேலியூடே ரோட்டைப் பார்த்துக் கொண்டிருந்த ஜெமீலாவின் ஏக்க நித்தியத்துவம் பெற்ற கண்களுக்கு, அடிக்கடி அவள் மனத்துள் ஒரு தாபத்தை உயிர்ப்பிக்கும் அவன், திடீரெனக் கொட்டிய மழைக்காக அவள் நின்றிருந்த வேலிக்கு ஆதார கட்டையாய் எழும்பி நின்ற வேப்ப மரத்தின் கீழே ஒதுங்கி நின்ற போது, அவளுள் ஏதோ அவனுடன் பேசிவிட எழுந்த துணிச்சல் புன்னகையாய் மாறியபோது அவனும் பதிலாய் அதையே வழங்கினான்.

ஜெமீலா தன் புன்னகை வெற்றியில் தன்னுள் ஒரு வசந்தம் வீசுவதையே உணர்ந்தாள்.

அவள் வீட்டுக்கு சற்றுத் தொலைவிலுள்ள மோட்டார் வாகனம் பழுது பார்க்கும் நிலையத்தில் தான் அவன் வேலை செய்தான். வெளியூர்க்காரனான அவனை ரஹீம் என்றுதான் எல்லோரும் அழைத்தார்கள்

ஜெமீலாவுடன் ஏற்பட்ட புன்னகைச் சந்திப்புக்கு முன்னரே, அவள் வாழும் உடைந்து சின்னா பின்னமாகி அழிந்து கொண்டு போகும் அவளது அவல வாழ்க்கை அவனுக்குத் தெரியும். அவளுக்காய் அவன் வருந்தி மானசீகக் கண்ணீர் விட்டபோது, 'ஏன் இப்படி நான் உருக என் இதயம் ஆகிவிட்டது?' என்று அவனுக்கே புரியாதிருந்தது.

ஜெமீலாவுடனான எதேச் சையில் பிறந்த சந்திப்புக்குப் பின்னர் அவன் இரகசியத்தில் கொண்ட வலுவான உறவில், அவள் அடிமனத்தில் புதைந்து புகைந்து கிடைந்த வாழ்க்கையிலுற்ற மோக வெறியைக் கண்டு, மோட்ச ராஜ்யத்துக்கு அழைத்துச் செல்லும் ரட்சகனாய் அவளுக்கு வாழ்க்கையை வழங்க அரித்துக் கொண்டிருந்தது அவனது ஈர உள்ளம்.

வழக்கம்போல் அவன் வேலை முடிந்து வரும் இரவுப் பொழுதிலே தான் அன்றும் அவள், ஆசை அலைகள் இதயப்பரப்பில் முட்டி மோத நின்றிருந்தாள். சோர்ந்து போய் வந்திருந்த அவன் அவளைக் கண்ட கணமே, உற்சாகத்தில் பூத்துக் குலுங்கி அவள் 'மெத்' தென்ற கரங்களை பற்றித் தடவிக் கொண்டே, "ஜெமீலா, இன்றைய இரவோடு உன்னப்பிடிச்ச தோசமெல்லாம் கழியப் போகுது. நீ, விரும்பி வாடுற அந்த வாழ்க்கைய நாளைக்கு அனுபவிக்கப் போறாய். ஏனெண்டா நாம் இந்த இரவைக்கு ஊரை விட்டுப் போகத் திட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டிருக்கேன். இதில நீ சந்தேகப்பட்டா எனக்குச் செய்ர பெரிய பாவம் தான் இது. நீ என்னோட வந்த பிறகு ஆண்டவன் சாட்சியாச் சொல்றன் நான் உன்ன ஒரு பொழுதுமே கைவிடமாட்டேன்'' அவன் இதயத்தில் அவளுக்காய் இரங்கி சதா அழுந்திக் கிடந்த கருணை உணர்வுகளில் கசிந்து கூறியபோது, நீர் தழும்பி நின்றது அவன் கண்களில்

ஜெமீலாவும் அவன் வார்த்தைகளில் தொனித்த, தான் பெற்ற விமோசனத்தின் ஆனந்தத்தில் விம்மி விம்மி அழுதாள். அவள் நினைவோடைக்குள் நின்றபோது அவன், 'ஜெமீலா, ஏன் பேசாமறிக்கிறாய்? உனக்கு வர விருப்பமில்லையா? என்றான் கலங்கிச் சோர்ந்த தன் முகத்தை சொறிந்து கொண்டே. அவன் கேள்விப் பாவத்தில் தெரிந்த உறக்கத்தில் அதிர்ந்து போன ஜெமீலா, வரண்டுபோன சிரிப்புடன், 'இந்த ஓடிப்போற நம்பிக்கையுர தைரியத்திலதான் உங்களோட தொடர்பு வச்சேன். நான் விரும்பாமவிட என்ன நியாயமிருக்கு?' என்றாள்.

தன்னுடன் ஓடிப்போக விருக்கும் அவளது வக்ரமான உறுதியில் அவன் நிம்மதியுற்றான்.

அப்போ நான் போய் ஆயத்தமாய் நடுஜாமத்திலே வந்து லேசா வெளிப்பக்கம் சத்தம் போடுவன் அப்ப நீ வந்திரணும்'' அவன் அவளிடம் இருந்து எந்த வார்த்தையையும் எதிர்பாராதவனாய் அமைதியாகப் போய் விட்டான்.

ஓடிப்போகும் நினைவுகளில் அழுந்திப்பிறந்த எதிர்கால எண்ணங்களின் சுகமான சுகிப்பில் லயித்திருந்தாள் ஜெமீலா.

இருளோடு இருளாய் பாயில் கிடந்தாள் தாய். ஜெமீலா எதிர்பார்க்காத சிந்தனை அலைகள் அவளை நெரித்து ஆக்ரமித்துக் கொண்டிருந்தன.

தான் ஓடிப் போனபின், தன்னை நாக்கு வழித்துப் பார்க்கும் இந்த உலகத்தில் தனிமையாகிப் போகும் தன் தாய், நாதியற்ற அவளது நிலையில் எந்த ஆதரவுமின்றி 'பசிபசி' என்று கதறி கருணையற்ற மனிதப் பசாசுகளின் கால்களில் விழுந்து கெஞ்சி மாண்டு போகும் நிலைமை மீண்டும் அவள் நெஞ்சில் நிதர்சனமாய் எழுந்து அவளை எரித்துக் கொண்டிருந்தது

அவளுக்குள் எதுவோ அழுகையாய் கேட்டுக் கொண்டிருந்தது. தாயின் பரிதாப ஓலங்களா அவை?

ஆண்டவனே, என்னப் பெத்தவள இப்புடியாக்கிப்போற பாவத்த செய்ய எனக்கி விதிச்சிப் போட்டாயா?' மானசீகத்தில் அழுது குமைந்த அவள், தூக்கத்தை எட்டி நின்ற தன் சோர்ந்து போன கண்களில் தழும்பி கன்னங்களில் வழிந்தோடிய நீரை விம்மிக் கொண்டே துடைத்து மீண்டும் தாயின் விசார நினைவுச் சஞ்சாரத்தில் பின்னிக் கொண்டு தூக்கமின்றிப் புரண்டாள்.

திடீரென அந்த ஜாமத்தில் வேலிக்கப்பால் எழுந்த அவள், நினைவு வைத்திருந்த அரவத்தில், அவன் வந்து நிற்பதை அறிந்து, அவள் நெற்றிப் பொட்டெல்லாம் வியர்க்க, கண்களில் ஏக்கமும் வருத்தமும் நிரம்பி வழிய ஒரு குழந்தை போல் தூங்கும் ஆயிஸாவின் வற்றிப்போன தோற்றத்தை உற்றுப் பார்த்தாள்.

தன்னை மீறிய கனிவோடு அந்தப் பார்வையிலே ஒரு தாயின் ஆத்மா, எவ்வளவு வலிமையாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் ஈன்ற இதயங்களை ரகசியத்தில் பின்னிப் பிடித்திருக்கிறதென்பது தொனித்தது.

ஜெமீலா, சந்தடியின்றி எந்தப் பேரிடியையோ தாங்கி மாய்ந்து விடப் போவதுபோல் வேலிப்பக்கம் சென்றபோது, அவன் அந்த வேலிக்கப்பால் எதையோ இழந்து பரிதவிப்பவன் போல், கண்களைச் சுழல விட்டு அவளை ஏறிட்டு நோக்கினான். அந்தப் பார்வையில்தான் எவ்வளவு ஆர்வம். ஜெமீலா, தொண்டைக்குள் அடைத்த நீரை விழுங்கிக் கொண்டே

"ரஹீம், நான் ..... ஓங்கள ..... ஏமாத்திப் போட்டான். ஆண்டவனுக்காகப் பொறுத்துக் கொங்கோ. நான் ..... வாரத்துக்குச் சம்மதிக்கல்ல." ஜெமீலா, இருட்டில் தடவி நடப்பதுபோல் வார்த்தைகளைச் சிரமத்துடன் பிரசவித்து நீர் கசிந்த கண்களைத் துடைத்துக்கொண்டு குடிசைக்குத் திரும்பி நடந்தாள்.

"பைத்தியம் பிடிச்சவள், இவளெங்கே வாழப் போகிறாள்" அவன் ஏமாற்றத்தில் புளுங்கிப் போய் அவளின் பரிதாப நினைவில் முணு முணுத்துக் கொண்டு இருளில் நடந்து கொண்டிருந்தான்.

---

# தமிழும் நவீன இலக்கியமும்

'......தமிழை இன்றைய பண்டிதர்கள் காக்க முடியாது. குறிப்பாகச் சொல்லப்போனால் அதிக முதிர்ச்சி பெறுதவர்களையே மனதிற்கொண்டு தற்போது மிகவும் செல்வாக்குப் பெற்றிருக்கும் மாய சரித்திரம் (PSEUDO HISTORIES மற்றும் நப்பாசை தீர்க்கும் சமூகக் கதைகளும் (WISHFUL-FILLMENT STORIES) படைக்கும் எழுத்தாளர்களாலும் தமிழைக் காக்க முடியாது. இருபதாம் நூற்றுண்டின் தகவல் பரிமாற்றல் நிலைமையாலும் (COMMUNICATIONS SITUATION), தமிழர்களிடையே படித்தவர்களிடமும் தலைமைப் பதவிகள் உடையோரிடமும் காணும் ஆங்கில மோகத்தாலும் தமிழ் மொழிக்கும் கலாசாரத்திற்கும் ஏற்பட்டிருக்கும் இருமுனை ஆபத்தை இந்த நவீன காலத்தில் உயிர்த்துடிப்பு கொண்டதாயும், தமிழின் பாரம்பரிய திண்மையுடையதாயும், சிந்தனையாளர்களும் நுணுக்க உணர்வுடைய தமிழர்களின் கற்பனை வீச்சு, நகைச்சுவைக்கு ஈடுகொடுப்பதாயுமுள்ள இலக்கியத்தினலன்றி வேறு வழிகளில் காக்க முடியாது ......'

—டாக்டர் ஆர்பர்ட்
**பி. ஃபிராங்லின்**
( நன்றி 'கலையாழி' )

---

அக்டோபர் 'அஞ்சலி'
யில் ஒரு தவறு!

கடந்த அக்டோபர் இதழில் காந்திக் கவிதைகள் மாறி அச்சாகிவிட்டன. 46-ஆம் பக்கத்திலுள்ளது திமிலைக் கண்ணனின் 'வாழ்விக்க வந்த மகான்' 47 ஆம் பக்கத்திலுள்ளது பரிபூரணனின் 'அவர் வழி தொடர்வோம். தவறுக்கு வருந்துகிறோம்.
ஆ—ர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




விடிந்ததும் விடியாததுமான வேளை. மாணிக்கப் பெத்தாச்சி சுருட்டைப் புகைத்தபடி கறுப்பியைக் கூப்பிட்டுப் பார்த்தாள். பெத்தாச்சியின் ஒரு குரலிற்கே ஓடி வந்துவிடும் கறுப்பியைக் காணவில்லை.

'எங்கோ போயிட்டுது.' என்று முதலில் தனக்குச் சமாதானம் கூறிக்கொண்ட பெத்தாச்சியால். நேரம் செல்லச் செல்லப் பொறுக்க முடியவில்லை. மீண்டும் மீண்டும் கூப்பிட்டுப் பார்த்தாள்.

கறுப்பியைக் காணவில்லை.

சுருக்கம் விழுந்த பெத்தாச்சியின் முகத்தில் கவலை குடிகொண்டது. வளவு முழுவதும் கறுப்பியைத் தேடிப் பார்த்தாள். கிணற்றுக்குள்ளும் எட்டிப் பார்த்தாள். வேலிகளின் பொட்டுகள் ஊடாகப் பக்கத்து வீடுகளையும் நோட்டம் விட்டாள்.

'கறுப்பியைக் காணேல்லை .. எங்கை போச்சுதோ.....! காலுக்கை கையுக்கையே சுற்றிச் சுற்றி நிக்கும்...

நேரம் போய்க் கொண்டே இருந்தது; சிறகடித்துப் பறந்தது.

மாணிக்கப் பெத்தாச்சிக்குக் கையும் ஓடவில்லை; காலும் ஓடவில்லை. காலைத் தேநீர் குடியாத களைப்பு ஒரு பக்கம்; கறுப்பியைத் தேடிய இளைப்பு ஒரு பக்கம். திண்ணைக் குந்தில் தலையில் கையை வைத்தபடி அமர்ந்துவிட்டாள்.

''என்ரை மோனுக்கு நான் என்ன பதில் சொல்லப் போறன்...... நான் ஆசைப்பட்டிட்டன் எண்டதுக்காக என்னட்டை வளர்க்கத் தந்தவள். எனக்குத் துணையும் அது தானே? எப்படி வளர்த்தனான் இனி இராசத்துக்கு என்ன பதில் சொல்லப் போறன்..!'' என்று பெத்தாச்சி கலங்கினாள்.

,'என்ன மாணிக்கம், உன்ரைபாட்டுச்குப் புறு புறுக்கிறாய்...?''

வேலியோரம் நின்று பக்கத்து வீட்டுச் செல்லம்மா கேட்டாள்.

''என்ரை வயிற்றெரிச்சலை ஏண்டி கேட்கிறாய், செல்லம்மா! என்ரை கறுப்பியைக் காணவில்லை... எல்லா இடமும் தேடிப் பார்த்திட்டன்... நீ கண்டனியே?''

''கறுப்பியைக் காணேல்லையோ... எங்கை போறது இங்கினேக்கைதான் நிக்கும்... வடிவாப்பார் !'' என்றுகூறி விட்டுச் செல்லம்மா நடந்தாள்

''உனக்குக் கறுப்பியைக் காணேல்லை என்று வலு சந்தோஷம்... பொரிஞ்சு போவாள்.. ...'

மீண்டும் மீண்டும் கூப்பிட்டுத் தேடிப்பார்த்தாள் பெத்தாச்சி கறுப்பியைக் காணவில்லை.

'ஆராவது இருந்தாலும் எங்கையாவது விட்டுத் தேடிப் பார்க்கலாம்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று பிள்ளையள் இருந்தும் என்ன பயன்? அனாதைப்போலக் கிடக்கிறன்...

"ஏனோய்...... அக்கா ...! ...— ஏனோய் !" படலையடியில் நின்று யாரோ கூப்பிடுகின்றார்கள். குரலிலிருந்தே கூப்பிட்டவர்யார் என்பது பெத்தாச்சிக்கு விளங்கிவிட்டது.

"யார்... சுப்பரப்பாவே ? வா... வா உன்னைத்தான் பார்த்துக்கொண்டிருக்கிறன்..."

படலையைத் திறந்தபடி சுப்பரப்பா வந்தார். அறுபது வயது மதிக்கலாம்' இடுப்பில் பழுப் பேறிய செம்மண் வேட்டியும் சால்வையும். முன் பக்கத் தலையில் முகம்பார்க்கலாம்.

"என்ன அக்கை, விஷயம் ! அப்படி அவசரமாகத் தேடினனீ?... கூப்பன் எடுக்க வேணுமே...?'?

"இல்லை யடா,..." என்று பெத்தாச்சி அக்கை பெருமூச்சு விட்டாள். "என்ரை கறுப்பிபைர் காணேல்லை... தேடிப்பார்த்திட்டன்... இன்னும் மோங் கழுவி ஒரு சொட்டுத் தண்ணி குடிக்கவில்லை..."

'என்ன... கருப் பியை... காணவில்லையோ ..?"

"ஓமோம்— கையுக்கை நிண்டது..."

"ஆரோ... இண்டைக்குச் சனிக்கிழமையல்லே... சட்டிக்கை வைச்சிட்டினம்..."

"ஆங்..." என்று பெத்தாச்சி விரிட்டாள்: "இருக்கும் அப்படியும் இருக்கும் கள்ளக் கோழி பிடிச்சுத் தின்னியள் அயலுக்கை இருக்குதுகள்...! உவளவை நல்லா இருப்பாளவையே...! என்ரை கோழியைப் பிடிச்சவளவை குடிகெட்டுப் போவாளவை ! கண் கெட்டுப் போவாளவை... முழுக்குக்குப் பதமா, பல்லுக்கு ருசியாக் கள்ளக் கோழி திரிகியளவையின்ரை கழுத்துக்குக் கேடுவரும்...முனியப்பரே. நீ தான் கேள்! என்ரை வயிறு பத்தி எரியுது நீ தான்கேள்! தோறையள்... பொறுக்கியள்...! இண்டைக்கு உதுக்கு நான் ஒரு முடிவு கட்டாமல் விடப்போவதில்லை! இதைக் கட்டிக் கறுப்பியைத் திண்டவளவையின்ரை கழுத்தை நெரிவிக்காமல் விடப்போவதில்லை " என்று பெத்தாச்சி முற்றத்து மண்ணை யள்ளிக் காற்றிலே தூவித் திட்டினாள்; பெத்தாச்சி அக்கையின் நர்த்தனத்தைக் கண்ட சுப்பரப்பா அசந்து போனார்.

"அக்கை சத்தாதை...! இஞ்சை வந்து திண்ணையிலை குந்து... நான் சொல்லுறதை வடிவாக் கேள் "

"எட தம்பி. கறுப்பியைத் திண்டவளவையை ஒருக்காக் கண்டுபிடிக்க வேணும்... நீ வா, தலையாளிச் செல்லப்பரிட்டை போய் மை போட்டுப் பார்க்க வேணும்... அந்தாள் மையிலை பார்த்துச் சரியாச் சொல்லிவிடும் "

"உன்ரை ஆசையையும் ஏன் கெடுப்பான். பின்னை வா..." என்று சுப்பரப்பா புறப்பட்டார்.



தலையாளிச் செல்லப்பர் மை பார்ப்பதில் பிரசித்தி பெற்றார். வெற்றிலையில் ஏதோ மையைத் தடவி விளக்கில் பிடித்து வெகு நேரம் பார்த்தார். அவருடைய முகத்தையே பெத்தாச்சி கவலையோடு பார்த்தாள்.

"ஏதாவது மையிலை தெரியுதே?"

ஆ... இதோ ஒரு மரம்... என்ன மரம்...?" என்று நிறுத்தினார், செல்லப்பர்.

"முருங்கை மரம் அதிலைதான் கறுப்பி இரவிலை படுக்கிறது...!" என்றாள் பெத்தாச்சி.

"இதோ கோழி கீழே குதிக்கிறது தென்புறமாகப் போகிறது... ஒரு நாய் துரத்துகிறது..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''கோதாரி விழுவான்ரை நாய் ! உது கனகன்ரை நாய்தான்... அது தான் கோழியளைத் துரத்துறது...,' என்று பெத்தாச்சி கூவினுள்.

''நாய் துரத்த...'' என்று செல்லப்பர் தொடர்ந்தார்' ''கோழி வேலிப் பொட்டுகளால் வேகமாக ஓடுது. ஒரு வேலி... இரண்டு வேலி... இதோ மூன்று நாலு... ஐந்து... ஆறு ஆ இதோ ஒரு வீடு—தலை வாசலிலை ஒரு கிழவி இருக்கிரு...''

''வடிவாப் பாருங்கோ வடிவாப் பாருங்கோ ஆ ரெண்டு தெரியுதே...''? என்று ஆவலோடு பெத்தாச்சி கேட்டாள்.

''சீ... தெரியவில்லை .. அடுப்படிக்குள் கோழி பயந்து நுழையுது .. 'லபக்' .. அடுப்படிக்குள் இருந்த ஆரோ கோழியைப் பிடிக்கினம் . அவ்வளவுதான் என்ருர், செல்லப்பர்.

''ஆரெண்டு தெரியேல்லையே ?''
—சுப்பரப்பா.

''தெரியேல்லை அங்காலை மை இருண்டு போச்சுது! தெற்குப் பக்கமா யாரோ பிடிச்சிருக்கினம் ''

''இவ்வளவும் போதும் நான் ஆரெண்டு கண்டு பிடிக்கிறன் நீ கிளம்பு அக்கை...!'' என்ருர் சுப்பரப்பா.

செல்லப்பருக்கு மை பார்த்த உழைப்பு. இரண்டு ரூபா.

வீடு திரும்பும் வழியில் சுப்பரப்பா கேட்டார்.

''அக்கை உனக்கு ஆரிலையாவது சந்தேகம் இருக்கே...' உன்ரை வீட்டிற்குத் தெற்கலை ஒழுங்கை' ஒழுங்கையிலை முதல் வீடு கனகற்றை என்ன?''

''கனகற்றை நாய் தான் துரத்தினதாம் !''

''நாய் துரத்த அது வேலிப்பொட்டுக்குள்ளாலை ஓடினது அடுத்த வீடு நம்மடை மாஸ்ரர் வீடு .''

''அதுகள் நல்ல சனம். அண்டைக்கும் அவையின்ரை வைக்கல் பட்டறையிலை கறுப்பி புட்டையிட கொண்டு வந்து தந்தவை ! எனக்கு உவன் செல்லம்மாவிலும் சீனியற்றை தங்காத்தையிலும் தான் சந்தேகம் ! உவள்தையல் முத்துவும் கள்ளக் கோழி பிடிக்கிறவன்......! நீ ஒருக்கா இந்த வீடுகளிப ஒரு நோட்டம் பார்.. ! தம்பி சுப்பரப்பா, நீ மட்டும் ஆர் கறுப்பியைப் பிடிச்சது எண்டு கண்டு பிடிச்சியெண்டால் !''

''எனக்கு விளங்கும். அக்கை! ஒரு போத்திலுக்கு நீ வழி பண்ணுவாய்.. நீ கவலைப்படாதை, எப்படியாவது இண்டைக்கு நான் கண்டுபிடிச்சிடுவன்.. உது பெரிய வேலையே..? சிம்பிளு '' என்ருர், சுப்பரப்பா.



சுப்பரப்பா புறப்பட்டுவிட்டார். இவரைப 'பெட்டைச் சுப்பரப்பா' என்று ஊரார் கூறுவார்கள். ஒரு முறை ஒருவன் சுப்பரப்பாவை அடித்து நொறுக்குவதற்காகப் பொல்லைப் பிடித்தபடி. துரத்தி வந்தான். பயந்துபோன சுப்பரப்பா ஓட்டமாய் ஓடி தன் வீட்டிற்குள் நுழைந்து பனிக்குப் பின்னுல் ஒளிந்துகொண்டாராம். அதில் இருந்து இந்தப் பெயர் அவருக்கு. எல்லா விஷயத்திலும் தலையிடுவார்; எல்லாருக்கும் 'அரைப் போத்திலு'க்காக உதவுவார்.

கறுப்பியை எப்படியாவது கண்டு பிடிப்பது என்று சுப்பரப்பா புறப்பட்டு விட்டார். கோழியைப் பிடித்தவர்கள் இப்போது பதம் பார்த்திருப்பார்கள் என்பதும் அவருக்குத் தெரியும். யார் பிடித்தார்கள் என்று தெரிந்தால் போதும்.

கனகரின் வீட்டு வேலிக்கு மேலால் எட்டிப் பார்த்தார், சுப்பரப்பா; 'உங்கைதான கறுப்பியை நாய் துரத்தினது .''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கோதாரியிலே போவான்... ஆரடா அது? வேலிக்கு மேலாலே எட்டிப் பார்க்கிறது? வீடு வாசலிலே பெண் புரசுகள் இருக்க முடியாமல் இருக்குது" என்று கனகரின் தாய்க் கிழவி கூச்சல் போட்டாள் "நான் உவனுக்குப் படிச்சுப் படிச்சுச் சொன்னனான். கேட்டானே? வேலியிலே நல்லா உயர்த்தியும் இழை நல்லாப் பதிச்சும் அடை எண்டு..! கேட்டானே? உதார் உவன்...திரும்பவும் எட்டிப் பார்க்கிறது...?

"அது நான், அக்கை...!"

"நான் எண்டால் ஆர்?.."

'சுப்பரப்பா! நாய் படுத்திருக்கோ எண்டு எட்டிப் பார்த்தனான்!'

"நீயே! வா...இஞ்சை நாயில்லை. வலு காவலா நிண்டது... அது நிக்கு மட்டும் ஒருத்தர் வளவுக்கை வரமாட்டினம்.." என்றாள் கனகரின் தாய்க் கிழவி.

"ஓமோம்... நாய் வீட்டிற்குத் தேவைதான்...! கள்ளர் காடையர் இப்ப அதிகம் கண்டியோ? உங்கடை நாய் ஒரு கோழியைக் கூட வர விடாது என்ன?" என்று கேட்டார், சுப்பரப்பா.

"ஓமோம்...! எனக்குக் கோழியளைப் பிடிக்காது! திண்ணை முத்தத்தை அசிங்கப்படுத்திப் போடுங்கள்"

"இப்ப உங்கடை நாய் எங்கை?"

"அதை தான் மூன்று நாளைக்கு முதல், போன புதன்கிழமை குறுக்காலை போவான் ஒருத்தன் காராலை அடிச்சுப் போட்டான்..."

"குறுக்காலை போயிருக்கும்...! போன புதன்கிழமையே? அப்போ கறுப்பியைத் துரத்தினது ஆற்றை நாய்?"

ஆரைத் துரத்தினது...?" என்று கேட்டாள் கனகரின் தாய்.

"ஆச்சி, இஞ்சை ஒருக்கா வாணை..." என்று பேத்தி ஒருத்தி கிழவியைக் கூப்பிட்டாள்.

"அப்ப, நான் வாறன் அக்கை.." என்றார் சுப்பரப்பா.

'கறுப்பியைத் துரத்தினது ஆற்றை நாய்— வேற நாயா இருக்கும்...எதுக்கும் சினியற்றை தங்காத்தை வீட்டை ஒருக்காப் பாப்பம்..!



தங்கம்மா தான் தங்காத்தையாக மாறிவிட்டது.

"என்னடா, சுப்பரப்பா, கனகாலமா இந்தப் பக்கம் காணேல்லை...? இண்டைக்கு மழைதான் வரப்போகுது... மத்தியான நேரத்திலை வந்திருக்கிறாய்...?" என்று திண்ணையில் இருந்தபடி தங்காத்தை சுப்பரப்பாவை வரவேற்றாள்; திண்ணையின் கீழ், முருக்க மரத்தடியில் படுத்திருந்த பெட்டை நாயொன்று தலையை நிமிர்த்தி இவரைப் பார்த்து உறுமியது.

"சீ" என்றார் சுப்பரப்பா "அக்கை...எங்கை நேரம்? இண்டைக்குச் சனிக்கிழமை அது தான் இப்படி வந்தன்...! முந்திப்போயா பிறிப்போயாவிலை காணும் தெரியாது. கிழமையும் தெரியாது!" என்றபடி திண்ணையில் இருந்தார். இருந்தவருடைய கண்களில் திண்ணையின் மூலையில் ஒரு கடகம் மெதுவாக அசைவது தெரிந்தது.

"உதென்னணை அக்கா!...கடகம் அசையுது...? கோழியை அடைச்சு வைச்சிருக்கிறியளே?..."

"ஓமோம்...! முட்டையிடக் சேரித் திரிஞ்சுது பிடிச்சு அடைச்சு வைச்சிருக்கிறன்..!"

"உது கறுப்புக் கோழியோ, வெள்ளைக் கோழியோ?" என்று சுப்பரப்பா கேட்டார்; பெத்தாச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யின் கறுப்பி இங்கைதான் இருக்க வேண்டும் என்று மனம் கூறியது.

''ஏன் கேட்கிறுய்? விடுப்பு விண்ணுனமா...?'' என்றுன் தங்காத்தை.

''உப்ப இந்த லெக்கோன் கோழி முட்டைகளைத்தானே கடைகளிலை விக்கினம். வெள்ளைக் கோழிமுட்டை ...சத்தில்லை! கறுப்புக் கோழிமுட்டை நல்ல சத்தாம்...'' என்றுர் சுப்பரப்ப.

தங்காத்தை எதுவும் பேசவில்லை; சுப்பரப்பாவிற்கு மகிழ்ச்சி தாங்கவில்லை. கிழவி முழிக்கிற முழியிலை

''அடைக்கோழியே?'' இன்னமும் முட்டையிடாமல்கிடக்குது..?''என்று கேட்டார் சுப்பரப்பா.

''சீச்சி...'' என்றுள், தங்காத்தை.

வெகு நேரத்துக்குப் பிறகு கோழி கொக்கரித்தது.

'அறுவான் போகாமல் இருக்கிறுன் உவன்ரை கண்பட்டால் முட்டையும் இடாது' என்று தங்காத்தை தனக்குள் எண்ணிக்கொண்டாள்.

''திறந்து விடனை...'' என்றுர் சுப்பரப்பா.



தெரியுது விஷயம்! கடகத்துக்கை கறுப்பிதான்...இரக்கு மட்டும் இருந்து பாக்கத்தான் வேணும்...!

பல விஷயங்களையும் பேசித்தீர்த்தார்கள். சோமற்றை பெட்டை ஓடின கதை...ணியம் சுத்தியாலை தம்பிராதனைக் குத்தின கதை...பார்வதியக்கை பொலிடோல் குடிச்ச கதை ...உம்...கோழி முட்டையிட்டுவிட்டுக் கொக்கரிப்பதாகத் தெரியவில்லை! இறுதியில்—

வேண்டா வெறுப்பாக எழுந்து போய்க் கடகத்தைத் திறந்தாள். கோழி கொக்கரித்தபடி முற்றத்திலை தாவியது. சுப்பரப்பா கோழியைப் பார்த்தார். பேயலைந்தவர் போலானுர்.

—அது ஒரு சிவப்புக் கோழி!

'ஞ் யல் முத்து அக்கை வீட்டை.. ஒருக்காப் போய்ப்பார்க்கவேண்டியது தான்' என்று முடிவு செய்தபடி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தையல்முத்து வீட்டிற்குள் சுப்பரப்பா நுழைந்தார்.

தலைவாசலில் தையல் முத்துவின் மகன் நடராசா, உடம்பெல்லாம் முழுக்கிற்காக எண்ணெய் வழிய வழிய வைத்துக்கொண்டு இருந்தான். வாங்கிற்குக் கீழே இரண்டு போத்தல் பனங்கள் மணம் வீசியபடி இருப்பதைச் சுப்பரப்பா பார்த்தார்.

''எங்கை, அம்மான்! உந்த வெயிலுக்கை வந்தியள் '' என்றான் நடராசா.

அவனது கேள்வி இந்த நேரத்தில் அவர் அங்கு வந்ததை விரும்பவில்லை என்பதைத் தெளிவு படுத்தியது.

''சும்மாதான்!... இண்டைக்கு என்ன முழுக்கே ? இறைச்சி பங்கு எடுத்தனியே!.. செல்லன் ஆடொன்று அடிச்சவன்...'' என்று கூறியபடி வாங்கில் சுப்பரப்பா அமர்ந்தார். அடுக்களையில் தையல்முத்து பெருஞ்சீரக வாசனையோடு இறைச்சி சமைப்பது மூக்கிலேறி, நாக்கில் சுரந்தது.

'இல்லை அம்மான் கோழி ஒன்று காய்ச்சினனான் ' என்றான் நடராசா.

'உதார், சுப்பரப்பாவே? கோழி ஒண்டு ஒரு மாதிரி துங்கிச்சுது பின்னை மண்ணுக்கை ஏன் வைப்பான் எண்டு சமைச்சனுங்கள் '' என்றபடி தையல்முத்து வெளியே வந்தாள். கெதியிலை உவரை அனுப்பவேணும். என்று உள்மனம் கூறுகிறது.

'நாயாலை துரத்தின கோழி சோர்ந்து துரங்கித்தான் நிக்கும் ! உவையள் கறுப்பியைத் தான் முடிச்சிருக்கினம். தையல் அக்கை கள்ளக் கோழி பிடிச்சு மோனுக்கு புழுக்குச்சுக் காய்ச்சுரு..! உதை எப்படி அறிகிறது?...' என்று எண்ணினர்.

'உதென்ன லெக்கோன் கோழியோ?...'

'இல்லை...! லெக்கோன் கோழியிலை எங்கை இறைச்சி இருக்கும்?' என்றான் நடராசா.

கிணற்றடியில் காகங்கள் கரைகின்ற சத்தம் கேட்டது, பல காகங்கள் கூட்டமாகக் கரைந்தன.

'நீ கோழியை உரிச்சுப் போட்டு வடிவாத் தாக்கவில்லைப்போல இருக்குது...கோதாரி நாயள் கிளரி இருக்கும்! .. அதுதான் செட்டையளைப் பாத்



திட்டு காகங்கள் சத்தம்போடுதுகள் .. முந்தநாள் பூனை விழுந்து இறைச்ச கிணறு ! குடலைச் கிடலைக் காகங்கள் கிணற்றிலை போட்டிடும !' என்றான் தையல் முத்து.

நடராசா எழுந்தான்.

நீ இரு தம்பி! எண்ணெய் வச்சிட்டு மண் கொத்தக்கூடாது...அக்கை எங்கை மண் வெட்டி...நான் ஆழமாத் தாட்டுவிடுறன் என்றபடி சுப்பரப்பா எழுந்தார்.

'நீ பாவம்'...என்றாள், அக்கை.

சுப்பரப்பா கிணற்றடிக்கு மண் வெட்டியுடன் போனார். அவர் முகம் மகிழ்ச்சியால் மலர்ந்தது. கறுத்தக் கோழி ஒன்றின் செட்டைகள் கிடங்கு ஒன்றைச் சுற்றிக் கிடந்தன. இவரைக் கண்ட நாய் ஒன்று ஓட, காகங்கள் கரைந்தன.

அக்கை...அக்கை...இரு, இரு... கோழி இறைச்சி தின்னுறதுக்கை மாணிக்கப் பெத்தாச்சியை இங்கை அனுப்பி வைக்கிறன்...!

விரைந்து, வேர்த்து விறு விறுக்க மாணிக்கப் பெத்தாச்சியின் வீட்டிற்கு ஓடி வந்தார் சுப்பரப்பா.

அக்கை.. கறுப்பியைப் பிடிச்சவையைக் கண்டுபிடிச்சிட்டன் !

என்ன 'விஷர் கதை பேசுறாய் ?' என்றாள் பெத்தாச்சி 'மாஸ்ரர் வீட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைக்கல் பட்டறையிலே முட்டை யிட்டுது என்று மாஸ்ரர் பொடியன் கோழியையும் முட்டையையும் கொண்டுவந்து தந்திட்டுப் போறுன் உங்கை பார், உந்தச் சீமைக்கிளு வயிலே கறுப்பியைக் கட்டி வைக்சிருக் கிறன்.

சுப்பரப்பா சீமைக்கிளுவ மரத் தைப் பார்த்தார். க[illegible]ப்பி நிலத்தைக் கிளறி எதையோ கொத்தித்தின்றபடி நின்றது.

சுப்பரப்பாவின் கண்கள் இருள ஆயிரம் மின்னல்கள் மின்னின.

"போயிடதை இரு களைச்சுப் போனுய் தேத்தண்ணி கொண்டு வாறன்.' என்ருள் பெத்தாச்சி.

## ஒலிம்பிக் விழா

ஒலிம்பிக் போட்டிகள் அடுத்த வருடம் மேற்கு ஜெர்ம னியிலுள்ள 'மூனிச்ல் நடக்க விருக்கிறது அது 20 வது ஒலிம் பிக் போட்டியாகும்.

ஒலிம்பிக் கிரேக்க திருவிழா வின் ஒரு பகுதியாக கி. மு, 1370 ல் ஆரம்பிக்கப்பட்டது. இப்போது நான்கு ஆண்டுகளுக் கொருதடவை நடக்கிறது, அந் நாட்களில் கிரேக்கர் மட்டுமே ஒலிம்பிக் போட்டிகளிற் பங்குபற் றலாம.

போட்டிகள் நான்கு தினங் களுக்கு நடக்கும். முதல் நாளில் வைபவங்கள் நடக்கும், விளை யாட்டு வீரர்களும், பயிற்சியா ளர்களும், நீதிபதிகளும் ஸீயஷ் (ZEUS) தேவதையின் பிரமாண்ட மான சிலையின் முன்னின்று போட்டிகளில் வெற்றிபெற எவ் வித தவருன வழிகளையும் கைக் கொள்வதில்லை எனச் சத்தியப் பிரமாணம் செய்வர்.

அடுத்த நாளிலேயே விளை யாட்டுகள் ஆரம்பமாகும். பிர சித்திபெற்ற வண்டிச் சவாரி (Charit Race) ஒன்பது மைல் களைக் கடக்க வேண்டும் ஒடுங் கிய அந்த (Tracks)ல் ஓடி வெல் வது மிகவும் அரிது.

நான்காவது நாளில் மரதன் ஓட்டம் நடக்கும்.

எல்லோரும் கூடி கடவுளைப் பிரார்த்தித்து, விருந்துபசா ரத்தோடு விழா முடிவடையும்.

—எம். கே. ராஜா

## அமெரிக்காவில் இராமாயணம் மகாபாரதம் ஏழு லட்சம்

கடந்த ஆண்டில் மட்டும் ராஜாஜீ எழுதிய 'இராமாயணம்' 'மகா பாரதம்' ஆகிய நூல்களில் ஏழு இலட்சம் பிரதிகளுக்கு மதிக மாக அமெரிக்காவுக் ஏற்றுமதி யாகியுள்ளது.

அமெரிக்கர்கள் இன்று இந் திய பண்பாட்டு நூல்களை விரும்பிப் படிக்கின்றனர்.

—எம். ம. ராஜா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயங்கலந்த இரகசியமான மகிழ்ச்சி
இப்போது வெளிப்படையான மகிழ்ச்சியாக...!

# புதிய காற்று



● டீ.மரியதாஸ்

"சாதாரண மக்களின் உள்ளம் எழுதப்படாத பேப்பரைப் போன்றது. அவர்களிடம் வர்க்க உணர்வேற்பட்டு, வர்க்க எதிரியின் செயல்களை அறிந்து கொண்டால்...! சிறு பொறி காட்டுத் தீயாகப் பரவும். உழைப்போர் விழித்தெழுந்தால்......"

பத்துப் பதினைந்து நிமிடங்களாக இதே வரிகளை மீண்டும் மீண்டும் வாசித்துக் கொண்டிருக்கிறேன். ஒவ்வொரு வரியும் பெண்ணம் பெரிய தத்துவமாக வாமனுவதாரம் எடுக்கின்றன. சட்டென்று விளங்கிக் கொள்ள முடியாது. சிந்திக்க வேண்டியதாக இருக்கின்றது. என்றாலும் விட்டு விட மனமில்லை புதிய உலகை விரிதது வைத்தாற் போன்று தொடுவானின் ஒளியாக விரிவடைந்து. படிப்பதற்கும், அதனைப் பற்றி யோசிப்பதற்கும் ஆர்வம் மேலிடுகிறது. கணக்குச் செய்து விடை தேடுபவனைப் போல சிக்கலான போராட்டமாக, போராடிப் பார்ப்பதே இதமாக மீண்டும் தொடர உந்துகிறது. இத்தகைய மோனத்திற்கும், மோனத்திலிருந்து குதித்து விழக்கூடிய விழிப்பிற்குமிடையில் மனம் ஃபேக்டரி ரோலராய் வட்டமிட்டுக் கொண்டிருந்தபோதுதான் அந்தச் சத்தம் கேட்டது.

வழக்கமாக இப்படி நடப்பதில்லை தான். ஆனால் வழக்கத்திற்கு மாறான சேவற் கோழி முட்டையிடும் ஆர்வமுமல்ல, யாரோ சும்மா இருக்க முடியாத இளைஞன் எப்போதோ, எதற்காகவோ வாயில் விரல்களை வைத்து விசிலடிப்பது தோட்டங்களில் நடக்கக் கூடியது. இதனால் இதனைப் பற்றி அக்கறைப்படும் நிலையை மனம் வரித்துக் கொள்ளச் சோம்பி அசட்டையாக ஒதுக்கியது.

மீண்டும் அதே போன்ற விசில்! ஒரு முறையல்ல பல முறைகள்! தொடர்ச்சியாகப் பலர் விசிலடிக்கிறார்கள்! ஒரே நேரத்தில் பல பேர்!

செயலின் தன்மை அதில் முக்கியத்துவம் இருப்பதாக உணர்த்தியபோது வீட்டிற்கு வெளியே பரபரப்பு தெரிந்தது. புத்தகத்தை வைத்து விட்டு வெளியில் வந்தேன்.

எல்லோருடைய பார்வையும் ராணுவத்தைத் தோட்டத்தின் பக்கமாக இருந்தது.

இருபது இருபத்தைந்து பேர் இருக்கும். கைகளில் ஏதேதோ ஆயுதங்களைத் தூக்கிக் கொண்டு மேமலைத் தோட்டத்தை நோக்கி ஓடி வருகின்றார்கள். பசிய மலைக் குன்றில் பாறைகள் உருண்டு வருவதைப் போன்று விரைந்து வருகின்றனர். சினிமாவில் வருவதைப் போன்று அபூர்வமான சம்பவம், எதிரியைத் தாக்கவரும் படை வீரர்களைப் போல மலைச் சரிவில் விரைந்து வந்து கொண்டிருக்கின்றனர். வீட்டிற்கு முன்னாலிருக்கும் வேலி பார்வையை மறைக்கின்றது. வேலியோரமாக இருக்கும் பாறைமேல் ஏறி நின்று எட்டிப் பார்க்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராணுவத்தைக்கும் மேமலைக்கும் எல்லைக் கோடாக வளைந்து நெளியும் ஆறு அமைதியாக ஓடிக்கொண்டிருக்கிறது. ஆற்றின் ஓரமாக அக்கரையில் சிறிய பற்றைக் காடு. அதற்கு விளிம்பு கட்டியதைப் போன்று ஒற்றையடிப் பாதை வளைந்து வளைந்து செல்கிறது. ஒற்றையடிப் பாதை வழியாகச் சுற்றி வளைந்து சென்றுதான் மேமலை லயன்களுக்கு வர முடியும். மேயிலை மலையையே வாழ்களமாகக்கொண்ட அவர்கள் தேயிலை நிரைகளையே பாதைகளாகக் கொண்டு அதன் வழியாக விரைந்து வந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வருவதையே பார்த்துக் கொண்டிருந்த மக்களில் சிலர் லயத்தை ஒட்டி ஒதுங்கி நிற்கும் வேலியோரமாகப்போய் நிற்கிறார்கள்.

''யார் தலைவரை அடிச்சது?'' இரண்டு மூன்றுபேர் ஒன்றாகக் கேட்பது உறுமலாக வருகிறது.

''இங்க ஒருத்தரும் இல்ல தோழர். ஸ்டோர் லயத்துப் பக்கம் உள்ளவன்கள்தான் அடிச்சுப்புட்டான்கள்''

ஒரு பெண்மணி பதில் கொடுக்கின்றார்.

''நீங்கள்ளாம் எந்த சங்கம்?'' ''தோட்டம்தான் வேற. ஆனால் வர்க்கமும் சங்கமும் ஒன்றுதான் ஒங்க சங்கம்தான்.''

அதே பெண்மணி மீண்டும் பதிலிருக்கிறார்.

''இங்க சில பந்தக்காரன்கள் இருக்கிறான்கள். அவன்களை அடிச்சிக் கொன்னு வீடுகளுக்கு நெருப்பு வைக்கனும்.''

வந்தவர்களில் ஒரிளைஞன் கூறிக் கொண்டே மேலே ஏறி வருகிறான்.

''ஐயோ வேண்டாம் தோழர். அப்படி ஒன்னும் செய்யாதீங்க''

பலரின் குரல்கள் கெஞ்சுகின்றன.

''அவன்களை வெட்டிக் கூறு போட்டாத்தான் என் மனசு ஆறும்.''

வெஞ்சினமாக வார்த்தைகள் ஒலிக்கின்றன.

மேமலை மக்கள் அவர்களின் செயலை மறுப்பவர்கள் போல அவர்களை மறித்து நின்று கெஞ்சுகிறார்

நான் ஒதுங்கி நின்று பார்த்துக் கொண்டிருக்கின்றேன் அவர்கள் கேட்டபாடாயில்லை. சிலர் என்னிடம் வந்து அவர்களைச் சமாதானப்படுத்தும்படி கேட்கிறார்கள்.

எப்படிப் பேச்சைத் தொடங்குவதென்று தெரியவில்லை. எல்லோரையும் ஒருமுறை நன்றாகப் பார்க்கிறேன். தொழிலாளர் வர்க்கத்தின் பாதுகாவலராய், புதிய படை வீரர்களைப் போன்று நின்று கொண்டிருக்கிறார்கள். எல்லோரும் இருபது இருபத்தைந்து வயது மதிக்கத் தக்க இளைஞர்கள். ஒவ்வொருவர் கையிலும் கத்தி, கைக் கோடரி வாள், இரும்புக் கம்பி, இரும்புச் சங்கிலி போன்ற ஆயுதங்கள் இருக்கின்றன. புதிய உலகைப் படைக்க விரும்பும் புது யுக வீரர்களைப் போன்று காட்சியளிக்கின்றனர்,

அவர்கள் எல்லோருக்கும் என்னை நன்றாகத் தெரியும். தொழிலாளர்கள் உங்கள் பகைவர்களா என்று கேட்கிறேன்.

''பகைவங்க இல்லதான் தோழர். ஆனால் இவங்க இல்லியா பகைவன் சார்பில் வந்து மோதுராங்க.?'

ஒருவர் பதில்சொல்கிறார்.

''உண்மைதான். ஒங்க மாதிரி அவுங்களுக்கு வர்க்க உணர்வு இன்னும் வரல்ல. நீங்க வேற தோட்டத்த ஆள்களாக இருந்தும் வர்க்க உணர்வு இருக்கிறதால ஓடி வந்திருக்கிறீங்க. ஒங்க மாதிரி வர்க்க உணர்வு வந்திட்டா அவுங்க இப்படியெல்லாம் செய்ய மாட்டாங்க. தொழிலாளி தொழிலாளிதான். இன்னைக் கில்லாவிட்டாலும் ஒரு நாளைக்கு அவுங்களுக்கு வர்க்க உணர்வு வந்துதான் தீரும். அதனால் இப்ப அவுங்களை மன்னிக்கனும். திருந்திருவாங்க.''

சிறிது நேரம் மௌனமாக நிற்கிறார்கள். காரியம் தடைப்பட்டுவிட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தன் சோர்வு படபடப்பாகத் தெரிகிறது.

“இவ்ன்க இருந்த மாட்டம்ங்க தோழர். இருந்தாலும் உங்க பேச்சுக் காட்விடுறோம்”

விட்டு விட்டுப் போக மனமில்லாதவர்களாக நின்ற இடத்திலேயே நின்று கொண்டிருந்தார்கள்.

“அங்க ஸ்டோர் பக்கம் என்ன நடக்குதோ தெரியவில்லே.”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டத்திலிருந்தவர்களில் யாரோ ஒருவர் முணுமுணுக்கிறார்

''அந்தப் பயலே ஒழிச்சுக் கட்டுகிறோம்.''

மௌனமாக நின்று கொண்டிருந்தவர்கள் சின்ன ரோட்டு வழியாக வேகமாக விரைகிறார்கள்.

நான் மீண்டும் வந்து புத்தகத்தைக் கையில் எடுத்துக் கொண்டு படுக்கையில் சாய்கிறேன். படிப்பதற்கு மனமில்லை. கருத்துக்களை மனதில் தேங்க வைக்காது படிப்பதிலும் பயனில்லை. புத்தகத்தைக் கையில் வைத்துக் கொண்டே யோசிக்கிறேன். மனம் திக் திக்கென்று அடித்துக் கொள்கிறது.

கொஞ்சக் காலமாக இப்படித்தான், தோட்டத்தில் அடிக்கடி ஏதாவது சம்பவங்கள் நடந்துகொண்டே இருக்கின்றன ஒவ்வொரு நாளும் வேலைத் தளத்தில் ஏதேனும் ஒன்று நிகழ்கிறது. வேலைவிட்டு எல்லோரும் வந்த பிறகும் ஏதேதோ நடக்கின்றன. ஒவ்வொரு சம்பவங்களாக, நினைத்துப் பார்க்கையில் நிகழ்ச்சிகளெல்லாம் மனத்திரைக்கு ஓடிவருகின்றன.

சிலபேர் தொழிற் சங்கத்தில் சேர்ந்து விட்டார்கள என்ற இரகசியம் வெளிவந்த நாளன்று தான் முதற் சம்பவம் நடந்தது. தொழிலாளர்களை

அடிப்பதற்கு ஆட்கள் திரட்டப்படுவதும், அவர்கள் பயமுறுத்தப்படுவதுமாக பல சம்பவங்கள் விரைவாக நடந்தன. தொழிற் சங்கத்தில் யாராவது சேர்ந்தால் அவருடைமையோடு பொருட்களை நடுவீதியில் இழுத்து வீசிக் கதவைப் பூட்டும் நிலைமையின் தொடர்ச்சியில் முறிவு ஒன்று நிச்சயமாக ஏற்பட்டுவிட்டது. ஐம்பது அறுபது தொழிலாளர்கள் இரகசியமாகச் சேர்ந்துவிட்டார்கள். இதனை உடைப்பது சிரமம் தான். ஆனால் இதனை நிலைக்க விடுவதாலேற்படக் கூடிய நட்டத்தை உணர்ந்தோருக்கு அதனை எப்படியாவது உடைப்பதுதான் முக்கிய வேலையாக இருந்தது. பாரம்பரையாக இத்தகைய வேலைகளைச் செய்து தழும்பேறிய உள்ளம் சுறு சுறுப்பாக இயங்கியது. எல்லாம் தன்வசமாக, தனக்காகவே என்று இருக்கும் போது எதனைத் தான செய்ய முடியாது?

பலர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர் ஏன் என்பது யாருக்கும் தெரியாத புதிர். பலர் பல விடங்களில் தாக்கப்பட்டனர். ஏன், யாரால என்பதற்கெல்லாம் விடை கிடையாது. தொழிலாளரைப் பொருத்தமட்டும் எல்லோருக்கும் பயம். ஆனால் அதே நேரத்தில மனதில் மகிழ்ச்சியும் கூட. ஆனால் அவர்களின் எதாந்தரவான வாழ்க்கை, அதனைச் சிருஷ்டித்தவர்களால், அவர்களின் நலன் காக்க, அவர்களைக் கருவியாக இயங்க வைக்க நிர்ப்பந்தித்தது. சிலர் பாதை மாறி விடிவெள்ளியை மண்ணிற் புதைக்கப் பாவிக்கப்பட்டனர். இந் நேரத்தில் தான் கீழ் வானின் செம்மைக் கீற்றின் ஒளிக் கதிர்களின் பிரதிபலிப்பு அங்கு விரியத் தொடங்கியது. தொழிலாளர்களைத் தாக்குவதற்கு நகரங்களில் அமர்த்தப்பட்ட காடையர்கள் அடித்து நொறுக்கப்பட்ட சம்பவத்தோடு இதிலொரு திருப்பம் ஏற்பட்டது. உழைப்பால் முறுக்கேறிய கரங்கள் எதிர்த்துச் சமர் செய்யத் தொடங்கிய போது பல காடையர்களும், சண்டியர்களும் கதிகலங்கிக் கண்காணுது ஓடிவிட்டதாகக் கூறினார்கள் ஆயுதந் தரித்த காவலர்களைத் தவிர. உத்தியோக பூர்வமற்ற அடியாட்கள் அவர்களை அணுக அஞ்சினர். தோட்டத்தில் ஒரு புதிய துடி துடிப்பு தென்பட்டது. பயங்கலந்த இரகசியமான மகிழ்ச்சி இப்போது வெளிப்படையான மகிழ்ச்சியாக விரிந்தது.

•

அக்கம் பக்கத்துத் தோட்டத் தொழிலாளர்கள் எல்லோரும் இதற்கு ஆதரவு. வேறு வேறு சங்கங்களைச் சேர்ந்த மற்ற தோட்டத் தொழிலாளர்களை இதனை ஆதரிக்கச் செய்த உணர்வை நினைத்துப் பார்த்தபொழுது எனக்குப் புத்தகங்களில் படித்த உண்மை விளங்கத் தொடங்கியது. எனது இத்தனை வருட வாழ்க்கையில் யாருடைய தூண்டுதல் முயற்சியுமின்றி அவர்களாகவே ஒன்றுபட்டு நிற்பதை யதார்த்தமாக இப்பொழுது தான் பார்க்கிறேன்.

இப்படிச் சம்பவங்கள் மாறி நடக்கத் தொடங்கிய வேளையில்தான் இந்தச் சம்பவத்திற்குக் காரணமான சம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவம் நடந்தது. வேலை முடித்துப் போனவர்கள் மாலை ஐந்து மணியைப் போல 'பேர் போடுவதற்கு' ஸ்டோருக்குப் போயிருக்கிறார்கள் அதிகமான ஆட்கள் அங்கு இல்லாத நேரம். ஒருவன் வந்து தலைவரைக் கற்களால் அடித்திருக்கிறான். அவர் மயங்க முற்றும் கீழே விழுந்துவிட்டார். அவ்வளவுதான் உடனே விஷயம் பற்றவர்களுக்கு எட்டி ஒரே களபரமாகத் தொடங்கி விட்டது. லயத்திலிருந்து சில இளைஞர்கள் ஓடிவந்து தாக்கியவனை அடிக்க, அவனது ஆட்கள் எதிர்த்துத் தாக்க முற்பட, கத்தி. இரும்புக் கம்பி போன்ற ஆயுதங்கள் வந்து சேர்ந்திருக்கின்றன. இருவருக்கு வெட்டு. இருவரும் கருங்காலிகள் என்பதில் மக்களுக்கு மகிழ்ச்சி. சண்டையைப் பார்த்துக் கொண்டிருந்தவர்கள் வந்து வர்ணித்து, வர்ணித்துச் சொன்னார்கள். வயதுபோன தொழிலாளி ஒருவர் எப்படி ஒருவனைத் தலை கீழாகத் தூக்கியடித்தார் என்பதைக் கூறி எல்லோரும் வியந்தனர். நட்டம் கருங்காலிகளுக்கு. நியாயமான செயல் மக்கள் எல்லோரினதும் ஆதரவைப் பெற்றது

மேமலையில் இவைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் மற்றத் தோட்டங்களில் தலைவர் தாக்கப்பட்ட சம்பவம் மட்டும் பரவியிருக்கிறது. அதனைக் கேள்விப்பட்டு வந்தவர்கள் தான் ராணுவத்தைத் தொழிலாள இளைஞர்கள்,

இவர்களின் வர்க்க உணர்வை நினைத்துப் பார்க்க எனது உடல் சிலிர்க்கிறது.

''சீட்டிச் சத்தம் கேக்குது''

எனது அம்மா கூறுகிறார்.

நான் நனவுலகிற்கு வருகிறேன். மீண்டும் தொடர்ச்சியாகப் பல முறை விசில் சத்தம் கேட்கிறது வெளியில் வருகின்றேன். வானம் கருங் கும்மென்று இருக்கிறது, இருட்டில் எதுவும் தெரியவில்லை. தூரத்தில் நாலைந்து தீப்பந்தங்கள் அசைந்து வருகின்றன. லயத்து மக்கள் எல்லொரும் ஆவலோடு போய்ப்பார்க்கிறார்கள்.

''அங்க ஒன்னும் இல்ல தோழர்.'' எல்லாரும் வந்தவர்களில் ஒருவர் கூறுகிறார்.

''நாங்கள் பொயிட்டு வர்ரோம். எதாச்சும் நடந்தா ஒரு ஆள் அனுப்புங்க. ஓடி வந்திர்ரோம். நாங்க தூங்க மாட்டோம்.''

சொல்லி விட்டுப் போகிறார்கள். தீப்பந்தங்கள் அசைந்து அசைந்து மலைச் சரிவில் கருமையை அகற்றிக் கொண்டே போகின்றன. மௌனமாக நின்று மக்கள் ஒளியையே பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

## வியட்னாமிலிருந்து அமெரிக்கா வெளியேற

சில நண்பர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள். பேச்சு சுற்றியலைந்து அரசியலைத் தழுவி வியட்னாமுக்குள் நுழைந்தது. வியட்னாமை விட்டு அமெரிக்கா வெளியேற என்ன செய்யலாமென அபிப்பிராயங்கள் காரசாரமாக வெளியிடப்பட்டன.

திடீரென ஒரு நண்பர் 'என்னிடம் மட்டும் ஆட்சியைத் தந்தால் ஒரே நாளில் அமெரிக்கர்களை விரட்டியடிப்பேன்' என்று சவால்விட்டார்.

'எப்படி அதைச் செய்யமுடியும்?'

'மிகச் சிம்பிள் விஷயம் எல்லா அமெரிக்க இராணுவத்தினர்க்கும் இரண்டே இரண்டு தமிழ் சினிமாப் படங்களைத் திரையிட்டு காட்டுவேன். அந்தக் கொடுமை தாங்காமல் அவர்கள் ஓடியே போய்விடுவார்கள்?

நண்பர்கள் எப்படி மறுப்பார்கள்?

நடிகர். விஸ்வநாதராஜா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சிங்கள மூலம்: மார்ட்டின் விக்கிரமசிங்க * தமிழில்: எம். ஏ. நுஃமான்

ஜெற்றியை நோக்கிச் செல்லும் பாதையோரமாகப் போய்க்கொண்டிருந்தேன். வழியில் உயர்தரமான ஒரு ஹோட்டலின் வாசலால் வெளியில் இறங்கிய ஒரு பெண்ணைக் கண்டதும் எனது நடையின் வேகம் குறைந்தது. வாயிற் படிகளில் இறங்கிய அவள் அங்கும் இங்கும் பார்த்தாள். சுவை நிறைந்த உணவு வகைகளை உண்டு, வெது வெதுப்பும், மிருதுவும் கொடுக்கின்ற மெத்தையில் படுத்து சுகம் அனுபவிப்பதனுலோ என்னவோ அவளது உடம்பும் முகமும் வீங்கியது போல் ஊதி இருந்தன. அவளுக்கு நடு வயது இருக்கும். புது நிறமானவள்.

முகத்தில் இளமை தெரிந்தாலும் தலையில் நரைமயிர்களும் காணப்பட்டன. நான் அவளை நெருங்கினேன். எனது கடைவாயில் ஒரு புன்னகையை எழுப்ப முயன்றேன். அறிமுகம் இல்லாத ஒருவனைப் பார்ப்பதுபோன்று அவள் என்னைப் பார்த்தாள்.

"என்னைத் தெரியவில்லையா?" என்று கேட்டவாறே நான் சிரிப்பை அடக்கிக்கொண்டேன். அவள் சிறிது நேரம் யோசித்தாள்.

"ஓ—அந்த சிங்கள ஆசிரியர்!" என்று சொல்லிக்கொண்டே அவள் வேறு புறம் பார்த்தாள்.

மீண்டும் ஜெற்றியை நோக்கி நடக்கத் தொடங்கினேன். போகும் போது "ஆயுபோவன்" என்ற வார்த்தை எனது வாயில் இருந்து வெளிப்பட்டபோதிலும் எனது மனதில் வேறு ஒரு நினைவு தோன்றியது.

அவளை ஒருமுறை அவளது சகோதரிதான் எனக்கு அறிமுகப்படுத்தினுள். அவளுடைய சகோதரியின் மகளுக்குக் கொஞ்சக்காலம் நான் சிங்களம் படிப்பித்தேன். ஆங்கிலேய ஆட்சியாளர்களுடனும் பெரும் பெரும் வெள்ளைக்காரப் பிரமுகர்களுடனும் பழகிய அவளுடைய பெற்ருேர்கள் தங்களுக்கு உபயோகமில்லாத சிங்களத்தை ஒதுக்கி இருந்தார்கள். பெண் மக்கள் இருவரும் கூட சிங்களத்தை ஒதுக்கி விட்டார்கள்.

ஒருத்தி இப்பொது கவலையுடன் தனது மகளுக்கும் மகனுக்கும் சிங்களத்தைப் படிப்பிப்பதற்கு முயற்சி செய்கிருள். இன்னும் வெள்ளைக்காரர்களுடன் மட்டுமே பழகுகின்ற மற்றவள் உயர்தரமான ஹோட்டலில் சீவிக்கிருள். இங்கு இல்லாவிட்டால் இங்கிலாந்து அவுஸ்திரேலியா போன்ற வெளி நாடுகளுக்குப் போவாள். அங்கு ஆறுமாதமோ, ஒரு வருடமோ இருந்து விட்டுத் திரும்பவும் இலங்கைக்கு வருவாள். வந்து கொழும்பில் அல்லது நுவரேலியாவில் உயர்தரமான ஹோட்டல் ஒன்றில் தங்குவாள்.

அவளது உறவுமுறைப் பெண் ஒருத்தி இரவுணவுக்கு அவளை அழைத்திருந்தாள்.

"இன்றைக்கு நாங்கள் கையினுல் சோறு சாப்பிடுவோம்." என்று பகடி போல அவள் சொன்னுள்.

"எனக்குக் கையினுல் சாப்பிட விருப்பம் இல்லை".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஏன்? இப்போது இலங்கையை ஆட்சி செய்வது நமது சிங்களவர்கள் தானே. அவர்கள் எங்களை ஆளுவது சிங்களத்தில்தான்...''

''கையினால் சாப்பிட்டால் ஒரு மாதம் வரைக்கும் புலால் நாற்றம் போகாது''. என்று அவன் சொன்னான்.

ஆங்கிலேய ஆட்சியாளர்களும், அவர்களது மனைவிமாரும், பிற வெள்ளை அதிகாரிகளும், அவர்களது மனைவிமாரும் தாங்களும் சமமானவர்கள் என்பதுபோன்று பழகிய உயர் சமூகத்தினருள் அவளும் ஒருத்தி. எங்களது சமூகத்திற்கு மட்டுமன்றி உலகின் எல்லா சமூகங்களுக்கும் பொதுவான ஒரு நோயினால் அவளும் தாக்கப்பட்டிருந்தாள். வெள்ளை ஆட்சியாளர்களையும் அதிகாரிகளையும் பெரிதாக மதிக்கும் அவளது பரம்பரையில் உள்ள பெண்கள் கீழ் மட்டத்தில விழுந்த போது சிங்கள அமைச்சர்களையும், அதிகாரிகளையும்பெரிதாக மதிக்கும்நடுத்தர வர்க்கத்துப் பெண்களுக்கு அவர்களது இடம் உரிமையாகியது.

இருபுறமும் வரிசையாக நிறுத்தி வைத்திருந்த விசாலமான கார்களின் இடையே நான் சென்றேன். ஜெற்றிக்குள் நுழைந்தவுடன் மத்தியதர' உயர் மத்தியதரப் பெண்களும், ஆண்களும், அவர்களின் குழந்தைகளும் திரளாக நிற்பதைக் கண்டேன் அவர்களில் பலர் கறுத்தப் பட்டியில் தங்கப் பதக்கம் தொங்கவிட்ட வெள்ளை நிறக் கோட் அணிந்த ஒரு வெள்ளை அதிகாரியிடம் எதையோ கேட்டவாறு ஜெற்றியின் இரண்டாவது மாடியில் இறங்கிக்கொண்டிருந்தார்கள். சிலர் வலது பக்கத்துச் சுவரில் அமைந்திருந்த அறிவிப்புப் பலகையில் இருந்த எழுத்துக்களை வாசித்தவாறு நின்றார்கள்.

'ஹிமாலயா', 'கார்தேஜ்' ஆகிய இரண்டு பெயர்கள் சிலரின் வாயில் அடிபடுவது எனக்குக் கேட்டது. ஜெற்றியின் கீழ்த்தளத்திற்கு நான் இறங்கிக் கொண்டிருந்தேன். எனக்கு முன்னால் செல்கின்ற பெண்களின் தளம்புகின்ற பிருஷ்டங்களும், ஆடி அசையும் கூந்தலும், சப்பாத்தின் அடியும் எனக்குத் தெரிந்தன. கட்டைக் கவுண் அணிந்த யுவதிகளின் கவர்ச்சிகரமான அசைவுகளும் எனக்குத் தெரிந்தன. இரண்டாவது மாடிக்கு இறங்கிவருகின்ற ஆண்களும் பெண்களும் அந்த மாடி முற்றத்தைச் சுற்றி எழுப்பியுள்ள அடைப்புக்குப் பக்கத்தில் நின்றார்கள். சிலர் அந்த அடைப்பில் சாய்ந்துகொண்டு அங்கும் இங்கும் பார்த்தார்கள். இன்னும் சிலர் துறைமுகத்தில் போய்க்கொண்டிருக்கும் படகுகளையும் தோணிகளையும் ஆர்வத்துடன் பார்த்தவாறு நின்றார்கள். துறைமுகத்தில் நிறுத்தி இருக்கின்ற சில கப்பல்களின் புகைக்குழாய்களில் இருந்து எழுகின்ற புகை கருமுகில் போல் பரந்து மறைந்தது. துறைமுகத்தின் வெகு தொலைவில் நிற்கும் கப்பல் ஒன்றின் மேல் தளத்தில் இரும்புப் பட்டங்களில் தொங்கிக் கொண்டிருந்த படகுகள் ஜெற்றியில் நிற்பவர்களுக்கு வெள்ளைப் பாலைகள் போல் தோன்றின. சமீபத்தில் வருகின்ற ஒரு படகில் இருந்து வெளிப்பட்ட சங்கூதலைக் கேட்ட சிறுவர்கள் அந்தப் படகைப் பார்ப்பதற்கு ஓடினார்கள்.

ஒரே இடத்தில் நிறுத்தி வைத்திருப்பதனால் எழுகின்ற கோபத்தை வெளிப்படுத்துவதுபோல் கப்பல் ஒன்று 'பூம் பூம் ' என்ற பெருங்குரலில் அலறியது. மறித்துக் கட்டப்பட்டிருந்த கடல் நீர், வெளியேறிச் செல்லக் கூடிய வழியைத் தேடி, மனம் வெறுத்துப்போன பெருமூச்சை எழுப்பியவாறு, நெளிந்து திரியும் பாம்புகளைப்போன்ற அலைகளை அணைக் கட்டில் மோதி, இறக்கியது.

அடைப்பு ஓரமாக நின்ற ஒரு சிறுவன் சீட்டியை ஊதினான். அழகிய பூக்கள் நிறைந்த சீலையால் செய்யபபட்ட குடை ஒன்றை விரித்துப் பிடித்தவாறு ஓசை எழுப்பிக் கொண்டு ஒரு சிறுமி கேடித் தளத்தில் ஓடினாள். சிறுவர்களும், சிறுமிகளும் கூட்டம் கூட்டமாக நின்று ஓயாது பேசிச் சிரித்துக்கொண்டிருந்தார்கள்.

சில பெண்கள் 'ஹிமாலயாவில்' வரும் தங்களது கணவர்களைப் பற்றியும் மக்களைப்பற்றியும், உறவினர்கள் நண்பர்கள் பற்றியும் பேசிக்கொண்டு நின்றார்கள். அவர்களது சேலை முந்தானைகள் காற்றில் எழுந்து இறக்கைகள் போல் பறந்துகொண்டிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களது ஆடைகளிலும் கூந்தலிலும், பௌடர் தடவப்பட்ட முகங்களிலும் இருந்து எழுகின்ற மணம் கடல் நீரைத் தழுவி வருகின்ற காற்றுடன் கலந்து வந்து எனது நாசியில் பட்டு மறைந்தது.

அழுக்கடைந்த கால்ச்சட்டை அணிந்த ஒரு பையன் அந்தச் சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருந்த இடத்துக்கு வந்தான். கடல் நீரில் குளித்து விட்டு உடம்பைத் துடைக்காததனாலோ என்னவோ அவனது மேனி உடுப்பின் பார்புப் பகுதிபோல் தோன்றியது. பயிர்க்கற்றை நெற்றியை மறைத்தது. இவைகளால் அவனது முகம் அவலட்சணமாகத் தோன்றியது. அவன் தாங்கள் நிற்கும் இடத்துக்கு வருவதைக் கண்ட சில சிறுவர்கள் அவனை வியப்புடன் பார்த்தார்கள். சிலர் ஓடிச் சென்று தாயை அணைத்துக்கொண்டு அப்பையனை வியப்புடன் பார்த்தார்கள்.

''ஓடு இங்க வரவேணும்'' என்று ஒரு சிறுவன் சொன்னான்.

தனது மகன் அந்தப் பையனுடன் எதையோ கதைப்பதைக் கண்ட அவனது தாய் அவனைக் கோபத்துடன் கூப்பிட்டாள்

''பியல் இங்கே வா; அங்கே என்ன செய்கிறாய்?''

அச்சிறுவனது அக்கா ஓடிப்போய் தம்பியைக் கையில் பிடித்துக்கொண்டு அந்தப் பையனை முறைத்துப் பார்த்து விட்டுத் திரும்பினாள்.

''அவனை இந்த ஜெற்றிக்குள்ளே வரவிட்டதுதான் ஆச்சரியம்'' என்று சேலை அணிந்த ஒருத்தி சொன்னாள்.

''அவன் துறைமுகத்தில் படகுகளில் வேலை செய்கிறவனாக இருக்கக் கூடும்'' அவளது கணவன் இப்படிச் சொன்னான்

அவர்கள் கோபத்தோடு கூறிய வார்த்தைகள் காதில் படாதவன் போன்று அவன் நடந்துகொண்டான். நான் அப்பையனின் முகத்தை ஆர்வத்தோடு சில முறை பார்த்தேன். நன்றாக அலங்காரம் செய்துகொண்டிருந்த பெண்களையோ ஆண்களையோ அவன் பார்க்கவில்லை. விளையாட்டில் உற்சாகமாக இருந்த சிறுவர், சிறுமிகளையே அவன் ஆர்வத்தோடு பார்த்துக் கொண்டிருந்தான், அவர்களின் ஆடை அலங்காரங்களையும் அழகிய முகங்களையும் அவர்கள் எழுப்புகின்ற சிரிப்பையும் அவன கண்டான், 'நானும் விளையாட வரட்டா?'' என்று கேட்பவனைப் போல் மகிழ்ச்சியுடன் அவனும் சிரித்தான். அழுக்கடைந்த கிழிந்த கால்ச் சட்டை ஒன்றை அவன் அணிந்திருந்தான். அந்தச் சிறுவர்களைக் காண்பதனால் அவனது மனதில் துவேசத்துக்குப் பதிலாக பிரியமே உண்டாகியதுபோல் தோன்றியது. ஒரு சிறுவனின் அழகிய உடுப்பைத் தொட்டுப் பார்ப்பதற்கும், அவனது கை கால்களைப் பிடித்துப் பார்ப்பதற்கும், அவர்களுள் ஒருவனுடன் சிநேகமாவதற்கும் அவன் விரும்புவதாக நான் நினைத்தேன். அவன் மற்றச் சிறுவர்களைப் போலப் பெருங் குரலில் சிரிக்கவில்லை. பெரிய இடத்துப் பெண்களும், ஆண்களும் தனக்கு ஏசுவார்கள் என்று அவன் நினைத்தது அதற்குக் காரணமாக இருக்கலாம்.

ஜெற்றியில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்களில் சிறு பையன் ஒருவனைத் தவிர மற்றவர்கள் தங்கள் தங்கள் தாய்மாரையோ சகோதரிகளையோ தேடிச் சென்றார்கள். அந்தப் பையின் தனிமையில் தன்னைப் பார்த்துக் கொண்டு நிற்கும் அச்சிறுவனை நோக்கிச்சென்றான். அவன் சிரிப்பதற்கு முயன்றான். அச் சிறுவனின் முகத்தில் அழத் தொடங்கும் பாவனையைக் கண்டதும் இவனது சிரிப்பும் அடங்கிப் போயிற்று. தன்னை நோக்கி வரும் பையனைப் பார்த்துக் கொண்டிருந்த அச்சிறுவன் தாயிடம் ஓடினான்.

தூரத்தில் நிற்கும்போது தன்னைப் பார்த்துச் சிரித்த அப் பையன் தான் நெருங்கிவருவதை கண்டு பயப்படுவான் என்று அவன் நினைக்கவில்லை. அவனுள் வெட்கமும் சோகமும் உண்டாயிற்று.

தனது சின்ன மகனை அணைத்துக் கொண்ட தாயின் கண்களில் கோபம் உண்டாகியது.

''அவனைக் கண்டு யாரும் பயப்படுவாங்களா மகன்? அவன் ஒரு நரகல் புடிச்சவன்.'' என்று சொல்லியவாறே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் அவனை முறைத்துப் பார்த்தாள். "போடா இந்த இடத்தை விட்டு... இந்தச் சின்னத் துரைமாரைப் பயப் படுத்தாமல்..."

"போடா...... போடா" என்று இன்னும் ஒருத்தி சொன்னாள்.

திருப்பிச் சென்ற அப் பையன், சிரித்த முகத்துடன் எங்களை நோக்கி வந்த ஒரு நடுத்தர வயதுடைய மனிதனைக் கண்டதும் நின்றான்,

"மஹத்தயா .. பத்துச் சதம் தாருங்கோ மஹத்தயா,"

"போடா போடா குரங்கு."

பையனை முறைத்துப் பார்த்து ஏசிய அப் பெண்ணை நோக்கிச் சிரித்த வாறு தொப்பியைக் கழற்றி அந்த மனிதன் தலை தாழ்த்தினான்.

"அவன் இங்கிருந்து கொண்டு பிள்ளைகளைப் பயப்படுத்துகிறான்" என்று அவன் சொன்னான்.

"கப்பல் இன்னும் வரவில்லையா?"

"இப்பத்தான் கப்பல் துறைமுகத் துக்குள்ளே வந்தது."

அந்தப் பையன் ஜெற்றியின் கடைசித் தளத்துக்கு இறங்கிச் சென்றான். அவனுக்குப் பின்னால் நானும் இறங்கினேன்.

"ஏய் சோமதாச, நீ இன்றைக்கு இங்கே நிற்க வேணும்" என்று கீழ்த் தளத்துக்கு இறங்கிச் செல்லும் படிக் கட்டு ஓரமாக நின்ற பொலிஸ்காரன் சொன்னான், "இன்றைக்குப் பெரிய துரைமார்களும் துரைச்சாளிகளும் வந்து நிற்கிறாங்கள் நீ எதுக்கடா மேல் தட்டுக்குப் போனாய் ?"

நீரில் விழுகின்ற சோற்றுப் பருக் கைகளுக்காகப் பாய்ந்து போராடு கின்றன மீன்களைப் போல நான்கு இளைஞர்கள் நீரில் விழுகின்ற நாணயங் களைப் பொறுக்குவதற்காகச் சண்டை யிட்டுக்கொண்டு மூழ்கினார்கள். மேல் தளத்தில் நின்ற சில பெண்களும் பொழுது போக்குக்காக இடைக்கிடை நீரில் நாணயங்களை வீசினார்ச்ள்,

ஒரு வாலிபன் "இந்த இருபத் தைந்து சதம்" என்று சொல்லியவாறு இருபத்தைந்து சத நாணயம் ஒன்றை வீசினான். சிறிது நேரத்தில் ஒரு சதம், ஐந்து சத நாணயங்கள் மழைத் துளி விழுவது போல் நீ ல் விழத் தொடங் கின. சில நாணயங்கள் நீரில் மூழ்கு பவர்களின் கையில் அகப்படாமல் ஆழ்ந்தன. அவர்களின் கையில் அகப் படும் காசுகளை விரல் நுனியில் பிடித்து உயர்த்திக் காட்டினார்கள்.

சிறுவர்களும் தாய்மாரிடம் காசு கேட்டு வாங்கி நீரில் போட்டார்கள். ஒரு சிறுவன் வீசிய நாணயம் நீரில் விழாமல் படிகையில் விழுந்தது. தூணில் சாய்ந்தவாறு நின்ற சோம தாச உடனே பாய்ந்து சென்று அதைப் பொறுக்கினான்.

"ஏய்... தண்ணீரில் போடடா "

"போடடா... போடடா தண் ணீரில் போடடா." என்று மேல் தளத் தில் நின்ற பெண்களில் சிலர் ஒரே குர லில் சொன்னார்கள்.

"அவன் சும்மா நின்று கொண்டு காசு பொறுக்கப் பார்க்கிறான்...... ... கள்ளன்...!"

"ஏன் உனக்குத் தண்ணீரில் பாய ஏலாதே . ? சோம்பேறி..."

கீழ்த் தளத்தில் நின்ற ஒரு இளை ஞன் அந்த பையனின் கையில் இருந்த ஐந்து சதத்தைப் பறித்து நீரில் எறிந் தான்.

மேல் தளத்தில் நின்ற பெண்கள் சிரிப்பது எனக்குக் கேட்டது.

"நல்லா வேணும்"

மழை போல நீரில் விழுகின்ற நாணயங்களில் பாதிதான் இப்போது பையன்களுக்கு அகப்பட்டது. ஏனை யவை நீரில் மூழ்கி உலோபியின் பையில் மறைந்து போகின்ற தங்க நாணயங்கள் போல நிலத்தில் மறைந் தன.

"அநியாயமாகக் காசை வீசுகிறார் கள் .." கீழ்த் தளத்தில் நின்ற பருத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெண்மணி சொன்னாள். ஒரு முறையில் ஒன்றை மட்டும் வீசினால் அவைகள் எல்லாவற்றையும் பொறுக்கிக் கொள்வானுகள்.''

''விளையாட்டுத்தானே'' என்று வேறு ஒருத்தி சொன்னாள்.

இப்பெழுது நாணயங்கள் விழுவது குறைந்து போயிற்று. நீரில் மூழ்கிய இளைஞர்கள் ஓய்வெடுத்தார்கள். நீரில் மூழ்குவதில் மிகுந்த கெட்டிக்காரனான ஒருவன் தான் பொறுக்கிய நாணயங்களை எண்ணி உள்ளங்கையில் வைத்துக் காட்டினான். மேல் தளத்தில் நின்றவர்கள் அந்தத் தொகையை அறியமுயன்றார்கள்.

''எவ்வளவு?'' என்று ஒருத்தி கேட்டாள்.

''சொல்ல மாட்டேன்'' அழகிய முகத் தோற்றமும், அகன்ற நெஞ்சும் வலிமையான கைகால்களும் உடைய அந்த இளைஞன் சொன்னான். அவனைப் பார்த்து எல்லோரும் சிரித்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைப்புக்குப் பக்கத்தில் நின்ற ஒரு இளைஞன் ஐம்பது சத நாணயம் ஒன்றைக் காட்டினான்!

"ஏய் இந்தா ஐம்பது சதம் இந்த முறை இதைத்தான் தண்ணீரில் போடப் போறேன்" அவன் அடுத்த தூணில் சாய்ந்து நின்ற டீசாமதாசா வைப் பார்த்தான்.

"ஏய்... நீ என்னிடம் பத்து சதம் கேட்டாய் அல்லவா? ? இந்தா ஐம்பது சதம். பாய்ந்து பொறுக்கி எடு...",

"அவன் ஒரு நாளும் நீரில் பாய மாட்டான்." என்று அவனுக்குப் பக்கத்தில் நின்ற பெண் சொன்னாள்.

அவன் வீசி எறிந்த ஐம்பது சதம், மேலே பார்த்துக் கொண்டிருந்த சோமதாசாவுக்குப் பக்கத்திலேயே நீரில் விழுந்தது. அவன் உடனே நீரில் பாய்ந்தான். மற்றப் பையன்களும் நீரில் மூழ்கி குழப்படிப்பட்டார்கள். சுழியோடுவதில் கெட்டிக்காரனான பையன் மேல் தட்டத்துக்கு வந்து உள்ளங் கையைக் காட்டினான். அரசனின் தலை பொறித்த ஐம்பது சத நாணயத்தைக் கண்ட சிலர் கைதட்டினார்கள்.

இதன் பின்னர் நீரில் விழும் ஐந்து சத நாணயங்களைப் பொறுக்குவதற்காக நீரில் மூழ்கும் பையன்களின் தொகை குறைந்தது. கால்மணி நேரத்துக்கு நீரில் காசு விழுவது நின்றது.

"எங்கே சோமதாசா?" என்று கேட்டவாறு தோணியில் ஏறிய ஒரு பையன் அங்கும் இங்கும் பார்த்தான்.

"எங்கே ஆள்... காணவில்லையே!",

நானும் இப்பொழுதுதான் சோமதாசாவை நினைத்தேன். சோமதாசாவை அந்தப் பக்கத்திலேயே காணவில்லை.

"சோமதாசாவுக்கு நீந்தத் தெரியுமா?" என்று நான் கவலையுடன் கேட்டேன்.

"கொஞ்சம் தெரியும்." சுழியோடுவதில் கெட்டிக்காரனான அந்த இளைஞன் சொன்னான்.

"தண்ணீருக்குள் காலில் எதுவோ மோதிச்சு. நான் உதைத்து விட்டேன்." என்று இன்னுமோர் இளைஞன் சொன்னான். நீரில் மூழ்கி மூழ்கி சிவந்துபோன கண்களால் பையன்கள் அங்கும் இங்கும் பார்த்தார்கள்.

போலிஸ்காரன் ஓடி வந்து விசிலை ஊதினான்.

"இதோ, கப்பல் வந்துவிட்டது. ஆட்கள் இறங்குகிறார்கள்." என்று சொல்லியவாறு ஜெற்றியின் இன்னுமோர் பகுதியை நோக்கி வருகின்ற படகைநோக்கி ஒரு இளைஞன் ஓடினான். நானும் அவனுக்குப் பின்னால் சென்றேன்.

"பாவம் ஏழைப் பையன்." இரண்டாம் தளத்தில் இருந்து கீழ்த் தளத்துக்கு இறங்கி வந்துகொண்டிருந்த ஒரு பெண் இவ்வாறு சொன்னாள்.

"நீந்தத் தெரியாமல் அவன் ஏன் தண்ணீரில் பாயவேணும்?" என்று இன்னுமொரு பெண் கேட்டாள்.

"பாவம் அம்மா அந்தப் பையன் நீரில் மூழ்கிப் போனான்..." என்று ஒரு சிறுமி சொன்னாள்,

"ஐந்து வருசத்துக்குப் பிறகு, இன்றைக்கு அண்ணன் வாறார், வேறு எதையும் ஞாபகப்படுத்தாதே! நாங்க நீரில் காசு எறியவில்லை."

## பாதி டிக்கெட்டின் பயன்!

பெங்களூரில் சினிமா பார்க்கும் ரசிகர்கள் பாதி டிக்கெட்டையும் நன்கு பயன்படுத்துகிறார்கள்! எப்படி? குஷன் சேரின் மேல் விளிம்பில் டிக்கெட்டை ராக்கெட்போல் கூர்மையாகச் சுருட்டிச் செருகி வைத்து விட்டு வெளியே சென்று விட்டுப் படம் ஆரம்பிப்பதற்கு சில நிமிடங்கள் முன்பாக வந்து தங்கள் ஆசனத்தில் அமருகிறார்கள்! எப்படி இந்த பாதி டிக்கெட் ரிசர்வேஷன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்பலில் வந்து இறங்கிய உறவினர்களை வரவேற்ற ஆண்களும் பெண்களும் மகிழ்ச்சியுடன் உரையாடினுர்கள். அந்தக் கறுப்பு இங்கிலிஸ்காரியும் அவர்களுள் நின்ருள். தனது உறவினர்களை வரவேற்பதற்காக அவள் ஜெற்றிக்கு வரவில்லை; அவளுக்குத் தெரிந்த யாரேனும் ஒரு வெள்ளைக்காரன் கப்பலில் இருந்து இறங்கிஞல் அவனுடன் உரையாடியவாறு திரும்பிச் செல்லும் நோக்குடன்தான் அவள் வந்திருக்க வேண்டும் என்று நான் நினைத்தேன். அவளுக்குத் தெரிந்த ஒரு வெள்ளைக்காரனையும் காணுமையாலோ என்னவோ அவள் சில சிங்களச் சீமாட்டிகளுடன் உரையாடிக்கொண்டு நின்ருள்.

''இங்கிலாந்தில் என்ருல் இப்படி ஒரு காரியம் நடக்க மாட்டாது.'' என்று அவள் சொன்னுள். ''நீரில் காசை எறிவதனுல் பையன்களுக்கு ஆர்வம் உண்டாகிறது. இங்கிலாந்து மக்கள் என்ருல் ஒருபோதும் இப்படியான காரியம் செய்யமாட்டார்கள்.''

''ஜெற்றியின் பாலத்துக்கு அருகில் நீரில் விளையாடுகின்ற பையன்களுக்கு முதல் முதல் காசை வீசி எறியத் தொடங்கினதே வெளிநாட்டில் இருந்து வந்த வெள்ளைக்காரர்கள் தான்'' என்று வேறு ஒரு பெண் சொன்னுள்

''அப்படியென்ருல் அவர்கள் பிரான்சுக்காரர்களாக இருக்கும்.''

''நான் அவர்களை முகர்ந்து பார்க்கவில்லை''

## கல்லறை

அவள்,
பத்தாண்டுக் கனவுகள்
தித்திக்கும்
மூத்த நினைவுகள்
பித்தாக்கும்
அணைப்பின் சுகம்
பிணைக்கும்
முனைப்பின் மோகம்
சினைக்கும்
இல்லறத் தேடல்
எல்லாம்,
மெல்லப் புதைத்த
கல்லறை
நான்!

-மு. கனகராசன்

## இலக்கிய அதிசயம்

எழுத்தாளர் Desmond Coke தன் கற்பனையிலுதித்த 'Beauty From Ashes' என்ற நாவலை 1910 ல் வெளியிட்டார்.

அதைக் கண்டு சோமசெற் மோம் திகைத்துப் போனுர். ஏனெனில் அதே தலைப்பு அவரின் கற்பனையிலும் உதித்திருந்தது. எனவே அவர் தனது நாவலின் அத்தலைப்பை மாற்றி வைத்தார். அது தான் 'Of Human Bondage' மோமின் புத்தகத்தின் இத் தலைப்பே மிகப் பொருத்தமானதாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

எம். கே. ராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சினிமாப்
பாடல்கள்
வருமுன்னிருந்த

# நயமிக்க நாடோடி இலக்கியம்

இன்று நாட்டைப் பொறுத்த மட்டில் இலக்கியங்கள் இரண்டு வகையாகின்றன. ஒன்று படித்தவர்கள் இலக்கியம். மற்றது படியாதார் இலக்கியம். இந்தப் படியாதார் இலக்கியம் தான் பாமரர்கள் இலக்கியம், கிராமிய இலக்கியம், நாடோடி இலக்கியம் என வழங்கப்படுகின்றது.

படித்தவர்கள் பொன் பெற, புகழ் பெற, தங்கள் வேண்டுகோளினை நிறைவு செய்யப் பாடினார்கள். ஆனால் படியாதவர்களோ பொதுவாக விவசாயிகள். தங்கள் வேலைத் துன்பத்தைப் போக்கப் பாடியவைதான் இன்று நாடோடி இலக்கியமாகத் திகழ்கின்றது.

வயல்களிலேயும், தொழில் நிலையங்களிலேயும் தொழிலாளிகள் இப்பாடல்களைப் பாடுவதை இன்றும் நாங்கள் அவதானிக்கலாம்.

வயல்களிலே சூடு போடும்போதும், 'பொலி' தூற்றும் போதும் எற்படும் களைப்பையும், அலுப்பையும் களைந்தெறியும் வண்ணம் அவர்களின் வாயிலே வரும் இந் நாட்டுப் பாடல்கள் கேட்பதற்கு மிகவும் இனிமையாகவும், கருத்துள்ளதாகவும் இருக்கும். கிராமப்புற வீடுகளை நோக்கின், பாட்டிமார்கள் பேத்திமார்களை பக்கத்தில் வைத்துக் கொண்டு இந் நாட்டுப் பாடல்களைப் பாடிக்காட்டத் துவங்கினால் பக்கத்து வீட்டுக்காரர்களும் வந்து கூடி விடுவார்கள். இவ்வாறான நிகழ்ச்சிகளை இன்றும் கிழக்கு மாகாணத்திலே உள்ள சில கிராமப் புறங்களில் காணக் கூடியதாக இருக்கின்றது. இந்த நாட்டுப் பாடலாகப் பாடும் பாடல்களைத்தான் ''கவி'' பாடுதல் என்றும் சொல்வார்கள். பெரும்பாலும் முஸ்லிம் கிராமங்களில்தான் இக் கவி பாடுதல் ஒரு பொழுது போக்கு நிகழ்ச்சியாக இருந்து வருகின்றது.

நிலாக் காலத்திலே நித்திரைக்குப் போகு முன்னம் இருவர் கவி பாடத் தொடங்குவர். ஒருவர் ஆண் பாத்திரம் ஏற்றுக் கொள்வார். மற்றவர் பெண் பாத்திரம் ஏற்றுக்கொள்வார். மச்சான், மாமன் மகள், முறைப் பெண் ஆக மாறிக்கொண்டு பாடத் தொடங்கும் இந் நாடோடிப் பாடல்களில் யார்தான் பிழை கூற முன் வருவார்கள்.

இவ்வாறு கூட்டமாகக் கூடிக் கொண்டு பாடத் துவங்கும் இடங்களில், மச்சான்—

சுற்றி வர வேலி,

சுடர வர முள் வேலி

எங்கும் ஒரே வேலி — என்றால்

நான் எங்கால வந்திடட்டும்.

என்று பாட, அதற்கு மச்சாள் வாயிலேயிருக்கும் வெற்றிலையைத் துப்பி எறிந்த வாறே...

காவல் அரணோ,

கள்ளனுக்கு முள் அரணோ

வேலி அரணோ — மச்சான்,

வேணு மென்ற கள்ளனுக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று பாடும் போது இக் கவிதையிலே சுவை, நயம், சிறப்பு, ஓசை எத்தனை அழகாக இருக்கின்றது. ஆனாலும்!... இந் நிகழ்ச்சிகள் இன்று பெருமளவில் குறைந்துவிட்டன.

என்றாலும், ஈழத்துப் பிரபல எழுத்தாளர் திரு. அருள் செல்வநாயகம் அவர்களும், வட்டுக்கோட்டை மு. இராமலிங்கம் (மக்கள் கவிமணி)யுமே கிராமியப் பாடல்களைச் சுவை பட மக்கள் முன்னிலையில் நிலை நிறுத்தி வருகின்றனர். அவர்களின் இவ் விலக்கியச் சேவை நாடோடி இலக்கியம் புதுமெருகு பெறும் வகையில் அமைந்துள்ளது.

நாட்டுப் பாடல்கள்—கிராமியப் பாடல்கள் பாடும் இடங்களிலே இன்று சினிமாப் பாடல்கள் பாடப்படுவதைக் கேட்கும்போது வேதனை! வேதனை!...

இன்று வயல்களிலேயும், வீடுகளிலேயும் தெருத் திண்ணைகளிலேயும் பாட்டுப் பாடப்படுமேயானால் அது நிச்சயமாகச் சினிமாப் பாடலாகத்தான் இருக்கும். அவைகளால் ஏற்படும் தீமைகள் சொல்வதற்கில்லை. அப்படியான பாடல்களை பொழுது போக்காகப் பாடக் கூடாது. கேட்பதற்கு இனிமையும், நயமும், பொருளும், சுவையும் மிக்க நாடோடிப் பாடல்களைப் பாடி, மறைந்து கொண்டு போகும் இந்த இலக்கியத்துக்கு முக்கியத்துவம் கொடுத்துப் பாதுகாக்க ஒவ்வொருவரும் முன் வர வேண்டும்.

கே. அருள்பிராகசம்

## புராதன அனுராதபுரம்



ஈழத்தின் முதலாவது பௌத்த தலைநகரம் அனுராதபுரமாகும். தொடர்ந்து பதினொரு நூற்றாண்டுகளாக அனுராதபுரத்தையே தலைநகராகக் கொண்டு நூற்றுப்பத்தொன்பது அரசர்கள் ஆட்சி புரிந்திருக்கிறார்கள்.

ஏதென்ஸிலுள்ள பார்தினோன் (Parthenon) கட்டப்படும்போதே கி. மு. 37ல் அனுராதபுரம் தோற்றுவிக்கப்பட்டாலும் ஈழத்தின் நான்காவது மன்னனான பாண்டுகாபயனின் பின்னரே பிரசித்திபெற்றது. அதன்பின் அது பௌத்த தலைநகராயிற்று.

அனுரதபுர நகரம் அந்நாட்களில் 2566 சதுர மைல்விஸ்தீரணத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. இங்குதான் சங்கமித்தை கி. மு. 288ல் கொணர்ந்து நாட்டிய வெள்ளரச மரம் உலகின் தொன்மையான மரங்களிலொன்றாக இன்றுமிருக்கிறது.

475 சதுர அடி விஸ்தீரணமும், 178 அடி உயரமுமான 'ருவான்வெளி சேய' என்ற டகோபாவை இங்கு காணலாம். இதைத் துட்டகைமுனு (கி. மு. 161-137) கட்டுவித்தான். இதன் சுவர் தூண்கள் நூற்றுக் கணக்கான (யானை உயர) துதிக்கையுருவிலானவை. இதன் சுவர்களில் புத்த பெருமானின் வாழ்க்கை நிகழ்ச்சி ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன.

இன்று அனுராதபுர புதிய நகரம் மிக அழகாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

எம் கே. ராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவள் ஏது செய்கின்றாள்?

அதோ வந்த மலைச்சரிவில்
எங்கோ வொரு மூலையினில்
அவளும் தளிர் கொய்துகொண்டு
ஆளோடு ஆளாகச் செல்கிறாளோ?
இல்லை, ஆழப் பதிந்துவுள்ள
எந்தம் ஆறாத காதலினை
நெஞ்ச மதில் மீளவிட்டு
நினைவுக் கடலதனில் மிதக்கிறாளோ?
இல்லை, நாட்டு வளந்தனையே
நெஞ்ச மதில் நிறுத்திவைத்
உக்கிர மாய்த் தளிர்களினை
ஓடித் தொடித் தாய்கிறாளோ?
இல்லை, ஆயும் ஸ்பரிசத்தில்
கிளர்ந்து வரும் உணர்வுகளைக்
கொட்டி விடும் [illegible] ளை எப்போ
விளையும் மனத் தனிக்கிறாளோ?
இல்லை, சுரண்டும் பேர்களுக்கு
சுடுகாடு சமைக்கும் நினைவில்
வெற்றிலையை நன்றாய் மென்று
சிவப்பாக்கி உமிழ் கின்றாளோ?

இருகலை செல்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




'கனகம்!'

'என்ன?'

'என்ரை பொல்லையும்சால்வையையும் எடுத்துவா.'

சாய்மனைக் கதிரையில் சரிந்திருந்த தனது தொந்தி வயிற்றை, கதிரைச் சட்டங்களில் இருகைகளையும் ஊன்றி நிறுத்திக்கொண்டு, கனகம்மா கொடுத்த தேனீரை வாங்கியபடியே கூறுகின்றார் சிறப்பர் கனகசபை.

''இப்ப எங்கை போகப் போறியள்.?'

'ஏன் உனக்கு சொல்லவேணுமே?'

'என்ன, எனக்கு சொல்லாமல் வேறை ஆருக்கு சொல்லப் போறீர்? உன்ரை களைப்பெண்டாட்டிமாருக்கு சொல்லப்போறியா?'

கனகம்மா கர்ச்சிக்கின்றாள்.

கோபத்தில் அவளுடைய முகம் விகாரமாகின்றது.

சிறப்பருடைய உடலில் நடுக்கம்.

அவர் ஒடுங்குகின்றார்.

'இல்லை, கனகம் '

'என்ன இல்லை?'

வெட்டிப் பேசுகின்றாள் கனகம்.

'கனகம் இஞ்சை வாரும்'

கனிவாக அவர் அழைக்கின்றார்.

கனகம் அசையாமல் நிற்கின்றாள்.

கனகர் மெல்ல எழுந்து சென்று கனகம்மாவின் கையைப் பிடித்து அவளைத் தன்னுடன் அணைத்துக் கொண்டு வந்து சாய்மனைக் கதிரையின் சட்டத்தில் இருத்திவிட்டு, கதிரையில் தான் உட்கார்ந்து அவளுடைய முதுகைத் தடவிக் கொடுக்கின்றார்.

கனகம் கல்லாக இருக்கின்றாள்.

'கனகம் ..'

'என்ன?'

என்னோடை கோவமா?'

'கோவிக்காமல் என்ன செய்ய? எங்கை போறியள் எண்டு நான் கேட்க, உனக்கு சொல்லவேணுமோ எண்டு நீர் சீறி விழுந்தால் நான் வேறை என்ன செய்ய?'

'இல்லை கனகம், ஒரு மனிசன் வெளிக்கிடேக்கை சின்னப்பிள்ளை மாதிரி எங்கை போறாய் எண்டு கேக்கிறது சகுனத் தடையெண்டு உனக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குத் தெரியாதோ? இதை நான் உனக்கு எத்தினை நாள் சொல்லியிருக்கிறன்?'

'சரி இனி சொல்லுங்கோவன்'

'நான் ஒருக்கால் வயல் பக்கம் போட்டு வாறன்.'

'இப்ப ஏன் அங்கை?'

'நாலஞ்சு மாதத்துக்கு முந்தி அந்த கோயில் காணிய ளுக்கை அந்த மர மேறியளின்ரை முப்பது குடும்பங்கள் வலோற்காரமாய் போய் வீடுகட்டினது உனக்கும் தெரியும் தானே. அதுக்கு என்னாலையும் ஒண்டும் செய்யேலாமல் போச்சு. நான் பொலிசிலை முறைப்பாடு செய்ய அவங்களும் கையை விரிச்சுப்போட்டாங்கள்.'

'அதுக்கு வயலுக்கு இப்ப என்னத்துக்குப் போறியள்?'

'அவங்கள் நெல்லு வெட்டப் போறுங்களாம். இன்னும் ஒருதனும் குத்தகைக் காசு தரேல்லை. அது தான் .'

'நீங்கள் முந்தி ஒருதனையும் காணேல்லையோ? என்னவாம் அவங்கள்?'

'அவங்கள் ஒருதனும் குத்தகைக் காசு தர முடியாதாம். அவங்கள் எல்லாரையும் தூண்டி விடுகிறவன் அந்த கல்லான் தான்.'

'அவன் முந்தநாளைப் பொடியன் தானே? அவன்ரை சொல்லை ஆர் கேப்பினை?'

'இல்லை கனகம். அவன் தான் இந்தக் குழப்பமெல்லாத்துக்கும் காரணம் அவன் கொம்யூனிஸ்ட் காறரோடை சேந்து தேத்தண்ணீக் கடையளை தங்களுக்கு துறந்து விடவேணுமெண்டு முந்தி சாதிக் கலவரத்தைத் துவக்கினான். இப்ப குத்தகைக் காசை ஒருதரும் குடுக்கக்கூடாதெண்டு மறிக்கிறான்.'

'அந்த நாயை அடிச்சு முறிச்சு விட்டால் எல்லாம் சரிவரும்'.

'அவனை இப்பொண்டும் செய்யேலாமை இடக்கு. எந்த நேரமும் அவனோடை பதினைஞ்சு இருவது இளசுகள் திரியுதுகள்.'

'அப்ப துவக்கத்திலையே நீங்கள் அவனைத் துலைத்துக்கட்டியிருக்க வேணும்.'

'அதுதான் முந்தி சாதிக்கலவரம் நடக்கேக்கை அவனை வெடிவைச்சுத் துலைக்கவேணுமெண்டு எங்கடை ஆக்களிட்டை நான் எத்தினைதரம் சொன்னன். அவங்கள் கேட்டாங்களே? இப்ப அவன் இந்த ஆட்டமெல்லாம் ஆடுறான். ஒண்டுக்கும் அவன் பயப்பிடுகிறானில்லை. பொலிசோடை கூட சட்டம் பேசிறான். இப்பென்ன செய்ய?'

'அப்ப தந்திரமாய்த் தான் அலுவல் பாக்கவேணும். அவங்களோடை நேரடியாய் மோதக் கூடாது. இப்ப காலம் மாறிப் போச்சு.'

பெருமூச்சு விட்டுக்கொண்டு கூறுகின்றாள் கனகம்

'நான் என்ன அப்பிடி முட்டாளே? சாதிக்கலவரத்திலை நான் பட்டது காணாதே? அடியைத்தைத் தடவித்தான் அலுவல் பாக்கவேணும்.'

'அப்பென்ன செய்யப்போறியள்?'

அவன் ஜே. பி. சுந்தரன் அவங்கடை ஆள் தானே? அவனை நான் கையுக்கை வைச்சிருக்கிறன். அவனைக் கொண்டுதான் இவங்களை மடக்க வேணும்.''

'அது தான் சரியான வழி. ஆனால் சுந்தரன் செய்வானோ எண்டது தான் கேள்வி '

'செய்யாமலென்ன? நான் எங்கடை கிராமச் சபை சேர்மனைப் பிடிச்சு அந்தக் கிழக்கு ரோட்டு போடுற கொந்தறாத்து வேலையை எடுத்துத்தாறனெண்டு சுந்தரனுக்கு சொல்லியிருக்கிறன். இப்ப நான் காலாலிட்டதை அவன் தலையாலை செய்வான்'

'அப்ப நல்லாய்ப்போச்சு'.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அந்த மரமேறியன் தான் குத்தகைக் காசு தரேல்லையெண்டு பாத்தால், எங்கடை ஆக்களும் இன்னும் தரேல்லை. நன்றிகெட்ட நாயள்.'

'இதுக்கு என்ன செய்யப் போறியன்?'

'சேர்மனைக் கொண்டுதான் எங்கடை ஆக்களைச் சரிப்பண்ண வேணும்.'

'இனி நீர் கவனமாய்த்தான் அலுவல் பாக்கவேணும். அவசரப்பட்டு சாதிக்கலவரத்திலை வீணாய் போய் மாட்டுப்பட்டு அநியாயமாய் ஆயிரக் கணக்கிலை காசைச் சிலவளிச்சது தான் மிச்சம்.'

'கனகம் நீ என்ன விசர்க்கதை பேசிறாய்? எனக்கு மானம் தான் பெரிசு. இந்த கீழ்சாதியள் எங்களை மிஞ்ச நான் விடுவனே? எங்கடை பரம்பரையாய் வந்த சாதிக்கட்டுப்பாட்டை அவங்கள் உடைக்கேக்கை நான் சும்மா இருப்பனே? அப்பிடியெண்டால் என்ரை மானம் மரியாதை? நான் இந்த ஊரிலை சீவிக்கிறேல்லையே?'

''கடைசியாய் இப்பென்னத்தைக் கண்டியள்? அவங்களுக்கு தேத்தண்ணிக் கடையளைத் துறந்து விட்டாச்சு தானே? உங்கடை மானத்தைக் காப்பாத்திப் போட்டியளோ? இந்த ஊரை விட்டிட்டு ஓடிவிட்டீங்களோ?

'இதெல்லாம் அந்த கொம்யூனிஸ்ட்காறராலும் அவன் நல்லானாலும் வந்தது. அதோடை எங்கடை ஆக்களிலும் சில பேர் அவங்களோடை சேந்ததாலை வந்தவினை.'

'இனிமலாவது நீங்கள் முன்னெச்சரிக்கையாயிருக்க வேணும்'.

'சரி போனதுபோகட்டும். இனி வாறதைப்பாப்பம்'.

'உவன் செல்லையன் எங்கை?'

'ஆட்டுக்குக் குழைவெட்டிக் கொண்டு நிண்டான்.'

'செல்லையா எடே செல்லையா..'

கனகம்மா கதிரைச் சட்டத்திலிருந்து எழுகின்றாள்.

'என்ன ஐயா!'

செல்லையன் குரல் கொடுத்துக் கொண்டு ஓடி வருகின்றான்.

'நீ கெதியாய் ஓடிப்போய் எங்கடை சேர்மன் மார்க்கண்டரையும் அவன் அந்த ஜே. பி. சுந்தரனையும் வயல் பக்கம் நான் உடனை வரட்டாமெண்டு சொல்லி கையோடை கூட்டிக் கொண்டா.'

செல்லையன் ஓடுகின்றான்.

'அப்பனே, சிதம்பர நடராசா'

கூறிக்கொண்டு எழுந்து புறப்படுகின்றார் சிறுப்பர் கனகசபை.

கையில் வெள்ளிப் பூண் போட்ட பொல்லு. மார்பில் நெடுங்குறுக்காக உத்தரியமாய் பரமாஸ் சால்வை. நெற்றியில் திருநீற்றுப்பட்டைக்கு மத்தியில் பெரிய சந்தனப் பொட்டு. செருப்பு கிரீச்சிட்டு ஒலியைக் கிளப்ப சிறுப்பர் கனகசபை வயலை நோக்கி ராசநடை போட்டுச் சென்று கொண்டிருக்கின்றார்.

சிறுப்பருக்கு அறுபது வயதுக்குமேலிருக்கும் இப்பொழுதும், தான் இருபத்தைந்து வயதுக் குமரனென்ற நினைப்பு அவருக்கு.

அவர் அந்தப் பகுதியில் பெரும் புள்ளி. சிறுப்பரில்லாமல் எந்த ஒரு விசயமும் நடக்காது.

அந்த ஊரிலுள்ள கோயில் மணியகாரரும் சிறுப்பர் தான்.

சிறுப்பர் என்பது கனகசபையின் பட்டப் பெயரேயொழிய அவர் என்றுமே சிறுப்பர் உத்தியோகம் பார்த்ததில்லை.

அவருக்கெதுவித தொழிலுமில்லை. வேலை செய்யவேண்டுமென்ற அவசியமும் அவருக்கில்லை. அவருடைய பரம்பரைச் சொத்துகளிலிருந்தும் மனைவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் சீதனக் காணிகளிலிருந்தும் வருகின்ற வருமானத்திலே அவர் சுகசீவியம் நடத்துகின்றார்.

அந்த ஊரிலே உடையார் சின்னத்தம்பி வட்டிப்பணத்திலும், மற்றவர்களை ஏமாற்றி மோசடி செய்தும் பெரும் தொகையான காணிகளை வாங்கி வைத்தார். அவருக்கு பிள்ளை குட்டிகளில்லை. உடையார் இறக்கும் பொழுது முழுக் காணிகளையும் இந்தியாவிலுள்ள சிதம்பரக் கோயிலுக்கு தருமசாதனமாக எழுதிவிட்டார்.

சிருப்பர் கனகசபைக்கும் உடையார் சின்னத்தம்பிக்கும் எதுவித தொடர்புமில்லை. ஆனால் உடையாருடைய அன்பு மனைவி விசாலாட்சிக்கும் சிறப்பர் கனகசபைக்கும் ஏற்பட்ட கள்ள நட்பே, கோயில் காணிகளை மேற்பார்வை செய்யும் பொறுப்பை கனக சபைக்கு கொண்டுவந்து விட்டது.

இந்தியாவிலுள்ள கோயில்களின் பேரில் இலங்கையில் பல இடங்களில் பெரும் தொகையான தர்மசாதனக் காணிகளிருக்கின்றன. இக்காணிகளை சிருப்பர் கனகசபை போன்ற 'பெரிய மனிதர்கள்' மேற்பார்வை செய்து, வருகின்றவருமானத்தில் ஒரு பகுதியை இந்தியாவிலுள்ள கோயில் தர்மகர்த்தாக்களுக்கு அனுப்புகின்றார்கள். மிகுதியைத் தாங்கள் அனுபவிக்கின்றார்கள்.

பனஞ்சோலையைப் பிளந்து செல்லும் ஒற்றையடிப்பாதை வழியே வயலை நோக்கி நடந்துகொண்டிருக்கின்றார் சிருப்பர்.

இந்த பாதை வழியே முன்பு அவர் மிடுக்குடன் செல்வார். அவரைக் கண்டவர்கள் எல்லோரும் தங்கள் தோள்களால் சால்வையை எடுத்துக் கக்கத்துக்குள் வைத்துக்கொண்டு ஒதுங்கி நின்று சிருப்பருக்கு வழிவிட்டு அவர்போன பின்பு தான் செல்வார்கள். ஆனால் இன்று அதே ஒற்றையடிப்பதையில் சிருப்பர் பயந்து பயந்து நடந்துகொண்டிருக்கின்றார்.

அந்த ஊரின் மேற்கெல்லை கோடியில் தான் வயல் வெளியிருக்கின்றது மலைப்பாம்பு போல வளைந்து செல்கின்ற அந்த வயல்வெளி இரண்டு ஊர்களுக்கிடையில் இருக்கின்றது.

வயல்வெளியின் எல்லைக்கோட்டில் பனைமரங்களும் தென்னை மரங்களும் குத்திட்டு நிற்கின்றன.

குறுக்குநெடுக்காகச் செல்கின்ற வரம்புகள் வயல்வெளியைத் துண்டு துண்டாக வெட்டிப் பிளந்திருக்கின்றன.

வயல்வெளியின் மத்தியில் ஒரு பரவைக்குளம். மாரிகாலத்தில் தான் இது நிரம்பி வழிந்து, நெற்பயிர்களுக்கு நீர் பாய்ச்ச வழி செய்யும். வானம்பொய்த்தால் நெற் செய்கையில்லை. வருடத்தில் ஒரே ஒரு போகம் தான் இந்த வயல்களில் நெற் செய்கை

கோடை காலத்தில் சிறுபயிர்கள் செய்வதற்கு உதவுகின்ற பல கிணறுகள் அந்த வயல் வெளியில் சிதறிக் கிடக்கின்றன.

பொழுது சரிந்து கொண்டிருக்கின்றது.

மஞ்சள்நிற மாலை வெய்யில் வயல் வெளியைப் பொன் நிறமாக்கிக் கொண்டிருக்கின்றது

காகக்கூட்டங்கள் மேற்கு நோக்கி வானத்தில் நீந்திச் சென்று கொண்டிருக்கின்றன.

வானத்தின் அடிவயிறு மெதுவாகச் சிவந்துகொண்டிருக்கின்றது.

செழித்து வளர்ந்து முற்றித் தலையைத் தொங்க விட்டுக்கொண்டிருக்கும் நெற்கதிர்கள் பாரம் தாங்காது மென்காற்றில் ஆடி அசைந்து கொண்டிருக்கின்றன.

வயல் வரம்பில் நின்றுகொண்டிருக்கின்றாள் அன்னம். அவளுக்கு இருபது வயதிருக்கும்.

பருவத்தில் பொங்கிப்பூரித்து மதாளித்து வளர்ந்து உழைப்பால் உருண்டு திரண்ட அவளுடைய உடலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒதுக்கி விட்டு மேற்குத் திசையை நோக்கியபடியே அவள் எதையோ எதிர்பார்த்துக் கொண்டு நிற்கின்ருள்.

அவளுடைய கனவு காணும் கண்களில் ஒளி பொங்கிப் பிரவகித்துக் கொண்டிக்கின்றது.

கனவுலகில் சஞ்சரித்துக் கொண்டிருக்கின்ற அவளுடைய செவ்விதழ்கள்



இளம் தென்றல் கட்டித் தழுவி முத்தமிடுகின்றது.

காற்றிலே பறந்து கொண்டிருக்கின்ற தனது சுருண்ட தலைமயிரை மலர்ந்து முறுவலிக்கின்றன.

'உழைப்பில் உறுதியான உடற்கட்டு. ஒளிசுகிம் கூர்மையான கண்கள், சுருண்டு கறுத்த அடர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யான தலைமயிர். வாலிபக் கெம்பீரம். தலை வணங்காத உறுதிமிக்க நடை.'

நல்லதம்பியின் வனப்பான தோற்றம் அன்னத்தின் மனக்கண்ணில் கண்ணாமூச்சி விளையாடிக்கொண்டிருக்கின்றது.

நல்லதம்பி அன்னத்தின் உயிர். அவள் என்றோ தன்னை அவனுக்கு அர்ப்பணித்து விட்டாள்.

நல்லதம்பியின் பெயரைக் கேட்டதும் சாதிவெறியருக்குக் குலைநடுக்கம்.

அந்த ஊரிலுள்ள அடக்கி ஒடுக்கப்பட்ட மக்கள் அவனை தமது உயிராக மதிக்கின்றார்கள்.

நல்லதம்பி நல்ல உழைப்பாளி. தனது இரண்டு கைகளையும் நம்பி உயிர் வாழ்பவன் அவன்.

சிறுவயதிலிருந்து வறுமையிலும் சாதிக் கொடுமையிலும் தானும் தன்னுடைய சமூகத்தவரும் அனுபவித்த துன்ப துயரங்களை நினைத்து அவன் அடிக்கடி எரிமலையாக மாறுவான். இக் கொடுமைகளுக்கு எதிராக அவன் பலதடவைகள் போராடித் தோல்வி கண்டிருக்கின்றான்.

இரண்டு வருடங்களுக்கு முன் தனது சமூகத்தினரைத் திரட்டி அவன் உரிமைப் போராட்டத்தை ஆரம்பித்தான்.

சாதிவெறியர்கள் இந்தப்போராட்டத்தை சாதிக்கலவரமாக மாற்றினார்கள்.

உரிமைக்காகப் போராடிய மக்களின் வயல்களிலுள்ள பயிர்களெல்லாம் சாதிவெறியர்களால் அழித்து நாசமாக்கப்பட்டன.

மண்ணை நம்பி வாழ்ந்த மண்மக்களின் வாழ்க்கையில் வறுமை; வெறுமை.

அநேக வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன.

பலருடைய உயிர்கள் சாதிவெறியர்களின் ரத்தப்பசிக்கு இரையாக்கப்பட்டன.

ஆனல் போராளிகள் நிலைகுலையவில்லை.

நல்லதம்பியை ஒழித்துக்கட்டிவிட்டால் எல்லாம் சரியாகிவிடும் என்று சாதி வெறியர்கள் நினைத்தார்கள். அவனைக் கொல்ல பல தடவைகள் முயன்றார்கள். ஆனல் முடியவில்லை.

நல்லதம்பிமீது கொலையாளியென பொய்க்குற்றம் சாட்டப்பட்டது.

பொலிசார் அவனைக் கைதுசெய்ய முயன்றனர்.

அவன் தலைமறைவாகி விட்டான்.

ஆறு மாதங்களாக தலைமறைவாக இருந்து அவன் போராட்டத்தை நடத்தினன்.

நல்லதம்பி கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் ஒரு வருடத்துக்கு மேலாக இருந்தான்.

அவன் சிறையிலிருந்த காலத்தில் அவனுடைய தகப்பனையும், தம்பியையும், சகோதரியின் கணவனையும் சாதிவெறியர்கள் சுட்டுக் கொன்றார்கள்.

எல்லாத் துன்பத்தையும் அவனுடைய இதயம் சுமந்துகொண்டுதானிருந்தது. ஆனல் அவனுடைய உறுதி தளரவில்லை.

விளக்கமறியலில் இருக்கும் நல்லதம்பி சிறைக் கைதிகளின் உரிமைக்காகப் பல போராட்டங்களை நடத்தினன்.

கைதிகளதும் சிறை ஊழியர்களதும் இதயங்களில் அவன் நிலைத்துவிட்டான்.

உரிமைப்போராட்டப் பாடல்களை நல்லதம்பி உணர்ச்சியுடன் பாடும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழுது கைதிகளின் இதயங்கள் குமுறிக் கொந்தளிக்கும்.

சிறையிலிருந்து வெளிவந்த அவனுடைய தலைமையில் போராட்டத் தீயில் அடக்கி ஒடுக்கப்பட்ட மக்கள் தங்களுடைய உரிமைகளை வென்றெடுத்தார்கள்.

உரிமைப் போராட்டத்தில் நல்லதம்பிக்கு அன்னம் உத்வேகமளித்தது டன் தானும் சேர்ந்து போராடினாள்.

நல்லதம்பியினுடைய வயலுக்கும் வேலுப்பிள்ளையினுடைய வயலுக்குமிடையிலுள்ள பெரிய வரம்பினடியில் மாட்டுக்கு புல்லறுத்துக்கொண்டிருக்கின்றாள் அன்னம்.

புல்லறுத்துக்கொண்டிருக்கும் அவளுடைய மனம் நல்லதம்பியை நினைத்து மயங்கிக்கிடக்கின்றது.

'அன்னம்'

நல்லதம்பியின் குரல் காற்றில் மிதந்து வருகின்றது.

சொப்பனாவஸ்தையிலிருந்த அன்னத்தின் செவிகளில் நல்லதம்பியின் குரல் வந்து விழுகின்றது. அவள் தன்னை மறந்த மோன நிலையிலிருக்கின்றாள்.

'அன்னம்'

மீண்டும் குரல்.

அவள் திடுக்கிடுகின்றாள்.

தன் நிலைக்கு வந்த அவள் அக்குரலைக்கேட்டும் கேளாதவளாகப் பாவனை செய்கின்றாள்.

அவளுடைய செல்லத்தனம் அவனுக்கு நன்றாகத் தெரியும்.

நல்லதம்பி வரம்பில் குந்தி இருக்கின்றான். அவனுடைய கண்களில் குறும்புத்தனம்.

திடீரென அன்னத்தின் காதைப் பிடித்து முறுக்குகின்றான்.

''அம்மா...'

அன்னம் செல்லமாகச் சிணுங்குகின்றாள்.

'கள்ளப்பெட்டை, நான் கூப்பிட்டது உனக்குக் கேட்கவில்லையா?'

'கேட்டால் என்னவாம்?'

'ஏன் பேசாமலிருந்தாய்?'

'பேசாவிட்டால்?'

'இது தான்..'

அவளுடைய கன்னத்தைக்கிள்ளுகின்றான்.

முறுவலித்தபடியே நல்லதம்பியை அவள் ஒரு மாதிரியாகப் பார்க்கின்றாள்.

அவர்களுடைய விழிகள் ஒன்றை ஒன்று கட்டித்தழுவி போதையில் மயங்குகின்றன.

நல்லதம்பியினுடைய கண்களிலிருந்து வந்த ஒளிப்பிரவாகத்துக்கு அன்னத்தால் தாக்குப்பிடிக்க முடியவில்லை.

அவளுடைய முகம்கன்றிச் சிவக்கின்றது. தலை கவிழ்கின்றது.

'கூடிய கெதியிலை உதெல்லாத்துக்கும் வட்டியும் முதலுமாய் கணக்குத் தீத்துத்தாறன்.'

அன்னத்தின் முகத்தை நிமிர்த்தியபடியே நல்லதம்பி கூறுகின்றான்.

'ஓ அப்பிடியும் ஒரு எண்ணம்தான் எங்கை பாப்பம்?'

'இருந்து பாரன்'.

திடீரென அவனுடைய கைவிரலை அவள் கடிக்கின்றள்.

'ஊ...'

நல்லதம்பி சிணுங்குகின்றான்.

இருவரும் சிரிக்கின்றனர்.

'அட, நான் ஒன்டை மறந்திட்டன்.'

'என்ன'

'சிறுப்பன் இப்ப இஞ்சை வருவன் எண்டு அவன்ரை வீட்டிலை வேலை செய்யிற செல்லையா சொல்லிச்சுது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஏனும் இந்தை வாருன்?'

'குத்தகைக் காசு விசயமாய்பேச.

'அவன் ஏன் வீணுப் உலேயிருன்? உதெல்லாம் நடக்கிற விசயமோ?'

'எங்கடை நெல்லே வெட்டவிடாமல் மறிச்சால்?'

'எங்கை ஆளுமென்டால் அவன் மறிச்சுப் பாக்கட்டன் பாப்பம்.'

'அவன் தன்ரை ஆக்களோடை வந்து பொலிசின்ரை உதவியோடை நெல்லே வெட்டினுல் என்ன செய்வியா?'

'அந்த கோயில்காணிக்கை நாங்கள் குடியேறேக்கை அவன் மறிச்சுத்தான் பாத்தவன். கடைசியாய் என்னத்தைச் செய்தான்?'

அது சும்மா கிடந்த காணியள். இது அப்பிடியில்லே.

''அப்பிடியென்டால் மகவிலே அவங்கள் என்னேப்பிணமாக்கிப்போட்டுத்தான் எங்கடை நெல்லே வெட்டவேணும்.

''என்ன, என்ரை ராசாவைத் தொட நான் விட்டிருப்பனே?

உம்மைத் தொடுகின்றவன்ரை கையை இந்தக்கத்தி உடனே துண்டாடும்.''

கோபாவேசமாகக் கூறுகின்ருள் அவள்.

''அங்கேர் சிறுப்பன் வாருன்!''

சிறுப்பர் கனகசபை வந்துகொண்டிருக்கும் திசையைக் காட்டுகின்ருள் அன்னம்.

நல்லதம்பி எழுந்து நிற்கின்ருன்.

நல்லதம்பியினுடைய வயலே நோக்கி வந்துகொண்டிருந்த சிறுப்பர் அவனேக் கண்டதும் வேலுப்பிள்ளேயின் வயல் பக்கம் செல்கின்ருர்.

சிறுப்பர் வருவதைக் கண்ட விவசாயிகள் அனேவரும் நல்லதம்பியிடம் செல்கின்றனர்.

வேறு வழியின்றி சிறுப்பர் கனகசபை நல்லதம்பியின் வயலுக்கு வருகின்ருர். சிறிது தூரத்தில் ஜே. பி. சுந்தரம் வருவதை சிறுப்பர் காண்கின்ருர்.

இரட்டை நாடித்தேகம், நரைத்த தலே, கதர் வேட்டி சால்வை. நெற்றியில் சந்தனப்பொட்டு. ஜே. பி என்ற தோரணையில் நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு அவர் வந்துகொண்டிருக்கின்ருர்.

சுந்தரம் அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களின் சமூகத்தைச் சேர்ந்தவரென்டாலும் அவரிடமிருந்த பணமும் பெரிய மனிதர்களுடன் அவருக்கிருந்த தொடர்புகளும் அவருக்கு ஜே. பி. பட்டத்தைப் பெற்றுக் கொடுத்தன.

முன்னெருகாலத்தில் இரண்டு மூன்று தொழிலாளர்களே வைத்து கள்ளுச்சீவி ஒரு கள்ளுக்கொட்டிலே இந்த ஊரில் நடத்திஞர் சுந்தரம்.

கையில் காசு பிளளத் தொடங்கியவுடன் சில ''பெரிய மனிதர்களேப்'' பிடித்து கள்ளுப் ''பர்மிட்'' எடுத்து யாழ்ப்பாண நகரத்தின் ஒதுக்குப்புறத்தில் ஒரு கள்ளுக்கொட்டிலே நடத்தத் தொடங்கிஞர் அவர்.

இப்பொழுது சுந்தரத்தின் கீழ் பதினேந்து இந்திய சீவல் தொழிலாளர்கள் வேலே செய்கின்ருர்கள்.

இப்பொழுது அவர் பிரபல கொந்துருத்துக்காறராகவும் வந்துவிட்டார்.

அவரிடம் ஒரு புதிய மோட்டாருமிருக்கின்றது.

உரிமைப்போராட்டம் ஆரம்பிக்குமுன் அவருடைய சமூகத்தவர்கள் மத்தியில் சுந்தரத்துக்கு மதிப்பிருந்தது.

போராட்டம் தொடங்கியவுடன் சுந்தரம் யாழ்ப்பாணத்திலுள்ள தனது உறவினரின் வீட்டிற்கு தப்பிச்சென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டார். அங்கிருந்துகொண்டு பெரிய மனிதர்களுடன் சேர்ந்து போராட்டத்தை முறியடிக்க மறைமுகமாக வேலை செய்தார் அவர். அத்துடன் ''சமாதானப்பேச்சுவார்த்தை'' என்று கூறிக்கொண்டு போராடிக் கொண்டிருக்கின்ற இளைஞர்களைக் காட்டிக் கொடுப்பதற்கு பொலீஸ் ஜீப்பிலும் அவர் பலதடவைகள் பவனிவந்திருக்கின்றார்.

வயலை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் சுந்தரம் நல்லதம்பியின் வயலில் விவசாயிகள் கூடி நிற்பதைக் காண்கின்றார்.

நான் இப்ப அங்கை போகவா விடவா?.

'நான் போக, அவங்க ஏதாவது கேவலமாய்பேசினால் ...

'போகாவிட்டால் அந்த சிமுக்கு ரோட்டு கொந்தருத்து வேலை......?

''அவங்கள் இப்ப எல்லாத்தையும் மறந்திருப்பாங்கள். ஒரு மாதிரித் தந்திரமாய் கதைச்சுப் பாப்பம்'',

தயங்கித்தயங்கி சுந்தரம் செல்கின்றார்,

நல்லதம்பி நிற்பது அவருடைய கண்ணில் படுகின்றது.

''இந்த நாசமாய் போவான் தான் எல்லாத்தையும் கெடுக்கின்றான்.

''இவனை மட்டும் தட்டினால் எல்லாம் சரி வரும். என்ரை ஆக்கள் என்னை அப்படிக் கைவிடப் போகினையே? நான் நீனைக்கேல்லை......போய்ப் பாப்பம்.''

சுந்தரம் நல்லதம்பியின் வயலுக்கு செல்கின்றார்.

அவர் வந்துகொண்டிருப்பதைக் கண்ட சிறுப்பருக்கு தென்பு.

''என்ன சங்கதி, இண்டைக்கு இந்தப்பக்கம் வந்திருக்கிறியள்?''

வயல்வரம்பில் வந்து நின்ற சிறுப்பரை நல்லதம்பி கேட்கின்றான்,

கையில் புல்லு அறுக்கும் சத்தியுடன் அன்னம் நிற்பதைக் கண்டவுடனே, சாதிக் கலரத்தின்போது ஒரு நாள் உலக்கையும் கையுமாக அன்னத்தைக் கண்டது சிறுப்பருடைய நினைவுக்கு வருகின்றது.

''இவள் நல்லானையும் மிஞ்சி விடுவள்போலை கிடக்கு. ...'

எப்படி விசயத்தை துவங்குவது என்று தெரியாமல் சிறுப்பர் சிறிது மௌனமாக நிற்கின்றார்.

''என்ன சங்கதி, ஏன் பேசாமல் நிக்கிறாய்!''

''குத்தகை காசு விசயமாய் கதைக்கலாமெண்டு வந்தனான்.''

தயங்கிக்கொண்டு கூறுகின்றார் சிறுப்பர்.

''என்ன குத்தகைக் காசோ?''

நல்லதம்பியின் வார்த்தைகளில் ஏளனம்.

அவனுடன் நிற்கின்ற பண்பர்களின் முகத்தில் வெறுப்பு. கண்களில் கோபத் தீ.

''நீங்கள் செய்யிற வயல் காணியளின் குத்தகை ...''

''இது ஆற்றை காணியள்?''

''சிதம்பரக் கோயில் காணியள் ..

''சிறுப்பர் இழுக்கின்றார்.

சுந்தரம் அந்த இடத்துக்கு வந்துவிட்டார்.

சேர்மன் மார்க்கண்டரும் கிட்டடியில் வந்துகொண்டிருக்கிறார்.

''அது உன்னுடைய வயலோ?''

அன்னம் சீறுகின்றாள்.

''அன்னம் நீ பேசாமலிரு''.

நல்லதம்பி அதட்டுகிறான்.

''வீண் சச்சரவில்லாமல் பிரச்சினையை சமாதானமாய் தீர்ப்பம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்மன் குறுக்கிடுகின்றார்.

''ஓ சாதிக்கலவரத்திலே நீ செய்ததை நாங்கள் மறக்கேல்லே. இப்ப ஆருக்காகப் பேச வந்திருக்கிறாய் எண்டும் எங்களுக்கு தெரியும். இந்த விசயத்திலே நீ தலையிடாதை. போய் வேறை வேலையைப் பார்.''

வேலுப்பிள்ளை சேர்மனை மடக்குகின்றான்.

சேர்மனுக்குக் கோபம் பீறிடுகின்றது.

''தலையிட்டால் என்ன செய்வியல்?''

வீணாய் மரியாதை கெடுவாய்.''

வேலுப்பிள்ளை ஆள்காட்டி விரலைக்காட்டிக்கொண்டு கர்ஜிக்கின்றான்.

''தம்பி வேலுப்பிள்ளை பெரியவையை மதியாமல் பேசாதை.''

சுந்தரம் கூறுகின்றார்.

''ஓ நீரும் மற்றத்தரம் பெரியவையளுக்காகப் பேசவந்திட்டீரோ? இப்ப நீரும் பெரிய மனிதன் தானே?'

சுந்தரத்தைப் பார்த்து நல்லதம்பி கேலியுடன் கேட்டான்

சிறிசு, பெரிசு பிறகு பாப்பம். இப்ப பிரச்சினைக்கு வருவம்.''

சுந்தரம் கதையை மாற்ற முயற்சிக்கின்றார்.

''என்ன பிரச்சினை?''

வேலுப்பிள்ளை வெட்டிக்கேட்கின்றான்.

''குத்தகைக்காசுப் ...''

''இதிலை என்ன பிரச்சினை கிடக்கு?''

''நீங்கள் ஒருதரும் இன்னும் குத்தகைக் காசு குடுக்கெல்லையாம். அது தான் சிறுப்பர் ஐயாவின்ர குத்தகைக் காசைக் குடுத்தால் எல்லாம் தீந்துபோம்.''

''ஏன் இந்த காணியள் அவற்றையோ?''

''வேறை ஆற்றை?''

சிறுப்பர் திருப்பிக் கேட்கின்றார்'

''உன்ரை எண்டதுக்கு என்ன அத்தாட்சி? உன்னட்டை உறுதி கிடக்கோ?''

''இது கோயில் காணியள். இவளவு காலமும் நான் தானே மேல் பார்வை பாத்து வந்தன்.''

''எந்தகோயிலின்ரை காணியள்?''

''ஏன் இந்தியாவிலேயுள்ள சிதம்பரக் கோயிலின்ரை காணியள் தான்.''

''இந்தியாவிலே கோயில், இலங்கையில் காணியள். இந்த காணியளின்ரை குத்தகைக் காசை நீவாங்கி இந்தியாவுக்கு அனுப்புறது சரியோ?''

நல்லதம்பி கேட்டான்.

''ஏன் இதிலே என்ன பிழை?''

''பிழையில்லாட்டி, இலங்கையிலே இருக்கிற கோயில்களுக்கு இந்தியாவிலே ஏதாவது ஒரு துண்டுக்காணியாவது கிடக்கா? இந்தியாவிலே இருந்து இலங்கையிலே உள்ள எந்தக் கோயிலுக்காவது வரியம் வரியம் காசு வருகுதா?''

சிறுப்பருக்கு என்ன பதில் கூறுவதென்றே தெரியவில்லை.

''எங்கடையாக்கள் அந்த கோயில் காணியளுக்கை ஐஞ்சாறு மாதத்துக்கு முந்தி குடியேறினார்கள். எங்கடை தலையை நீயும் உன்ரை ஆக்களும் சீவிப்போட்டியளே?''

சிறுப்பர் வெலவெலத்துப் போய் நிற்கின்றார்.

ஓய் சிறு பர் இந்தக் காணியன் உன்ரையுமில்லை. கோயிலுக்கும் சொந்தமில்லை.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லதம்பி அழுத்திக்கூறுகின்றான்.

"ஏன்?"

"இந்த காணியன் உடையார் சின்னத்தம்பியின்ரை. அவர் ஒரு காலத்திலை கோயிலுக்கெண்டு எழுதி வைச்சது உண்மைதான்."

"இதை நான் தானே மேல் பார்வைபாத்து வாறன்".

"அது சரிதான். ஆனால் இப்ப இந்தக்காணியள் எங்களுக்கு சொந்தம்."

"எப்படி?"

"இந்த காணியளின்ரை பெறுமதிக்கு மேலாலை நாங்கள் குத்தகைக் காசு குடுத்திட்டம். இனி இந்த காணியளிலை உனக்கு எந்த உரிமையுமில்லை. தெரியுதா?.

"தம்பி நல்லதம்பி, கோயில் விசயம் பொல்லாதது. இதிலை ஒரு சதம் எடுத்தாலும் பெரிய பாவம். கடவுள் கோபிப்பார். வீண் குழப்படி செய்யாதை மோனை."

சுந்தரம் குழைந்து பேசுகின்றார்.

"ஓய் சுந்தரம் பாவம் புண்ணியம், கடவுள் கோபிப்பர் எண்டு எங்களுக்குப் போதிக்க உனக்கு என்ன தகுதியிருக்கு?"

கோபத்துடன் கேட்கிறான் நல்லதம்பி.

"ஏன் மோனை கோவிக்கிறாய்?"

"நீ செய்யிறதெல்லாம்சரியோ?"

"ஏன் நான் என்ன பிழை செய்யிறன்?"

"சுந்தரம் எங்களுக்கு ஒண்டும் தெரியாதெண்டு நினையாதை. உன்னட்டை வேலை செய்யிற அந்த இந்தியாக்காறச் சீவல் தொழிலாளியளுக்கு நீ ஒழுங்காய் சம்பளம் குடுக்கிறியா?"

நான் குடுக்கிறேலலை எண்டு உங்களுக்கு எப்பிடித் தெரியும்?"

"எங்களுக்கு எல்லாம் தெரியும். எல்லா சம்பளத்தையும் சேத்து ஒரு வரியத்துக்கு ஒருக்கால் மொத்தமாய் தாறன் எண்டு சொல்லிப்போட்டு, கைச் சிலவுக்கு இரண்டொரு ரூபாயைக் குடுப்பாய் நீ. வரியம் முடிய அவர்கள் காசு கேட்கேக்கை அந்த இந்தியச் சீவல் தொழிலாளியளைகள் ளத்தோணி எண்டு நீ பொலிசிலை புடிச்சுக் குடுத்திருக்கிறாய். இது எங்களுக்கு தெரியாதெண்டு நினையாதை."

சுந்தரம் வாயே திறக்கவில்லை.

"இது மாத்திரமே? நீ யாழ்ப்பாணத்திலை அடிக்கடி "பாட்டியள்" வைக்கிறதும் எங்களுக்கு தெரியும். கொந்துறுத்து வேலைக்க கத்தான் நீ இதை செய்கிறாய். கொந்துறுத்து வேலையை எடுத்து றோட்டுகளுக்கு வெறும்மண்ணைப் போட்டிட்டுஎத்தினை ஆயிரம் ரூபாயை நீ சுருட்டியிருக்கிறாய் எண்டும் தெரியும்."

நல்லதம்பியின் வார்த்தைகள் சுந்தரத்தை நிலைகுலையச் செய்தன.

"சிறுப்பர் ஐயா என்னாலை இதில் ஒண்டும் செய்யேலா. நீங்கள் பட்டபாடு, நான் போறன்.

சுந்தரம் மெல்ல நழுவிச்செல்கிறான்.

' ஏன் போறாய், இன்னும் கொஞ்சம் நிண்டு கேட்டிட்டுப் போவன்"

வேலுப்பிள்ளை கத்துகின்றான்.

"அப்ப, இப்பென்ன சொல்லுறியள்?"

சிறுப்பர் வினவுகின்றார்.

சிறுப்பர், குத்தகைக் காசெண்ட பேச்சுக்கே இடமில்லை. நீ போய் செய்யிறதைச்செய்."

"நீங்கள் எல்லோரும் கோடேற வேண்டி வரும்."

"என்ன வெருட்டிறியா? உதுக்கு நாங்கள் பயப்பிடேல்லை."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஆறுமுகம், நீங்கள் என்ன சொல்லுறியள்?''

சாதிக்கலவரத்தின்போது தன்னுடன் சேர்ந்து நின்ற தனது சமூகத்தைச் சேர்ந்த ஆறுமுகமாக்களைக் கேட்கின்றார் சிருப்பர்.

''நாங்கள் வேறை என்னத்தைச் சொல்ல? நல்லதம்பியாக்கள் சொன்னதைத்தான் நாங்களும் சொல்லுறம்.''

''என்ன?''

எல்லோருக்கும் வியப்பு!

''நீங்களும் அவங்களோடை சேந்து ?

''சிருப்பர், மரியாதையாய் கதை. என்ன அவங்கள் இவங்களெண்டு.. ...

எச்சரிக்கின்றான் நல்லதம்பி.

''சிருப்பர். சாதிக்கலவரத்துக்கு கோயில் காணியளின்ரை குத்தகைக் காசுதான் சிலவளிக்கிறன் எண்டு நீ எங்களுக்கு முந்திச் சொல்லேல்லையா?

பேசாமல் நிற்கின்றார் சிருப்பர்.

'கோயிலைச் சாட்டி நீ பசியாறினதோட எங்கடை காசை வெளிநாட்டுக்கும் அனுப்புறாய். உன்னாலை தான் எங்கடை வயல்களும் அழிஞ்சு நாங்கள் வரியக் கணக்காய் பசிபட்டினியோடை இருந்தம். நீ சுகசீவியம் நடத்திறாய்'.

'நீ என்ன சொல்லுறாய் ஆறுமுகம்?'

தளதளத்த குரலில் கனகசபை கேட்கின்றார்.

'இப்பதான் எங்களுக்கு விசயம் புரிஞ்சுது. நாங்கள் இனி ஒரு சதமும் தரமாட்டம்.'

ஆறுமுகமாக்கள் ஏகோபித்துக் கூறுகின்றார்கள்.

'அப்ப நல்லதம்பியாக்களும் நீங்களும் ஒண்டாய்..'

'சிருப்பர், நீயும் சேர்மன் மார்க்கண்டுவும் ஜே. பி. சுந்தம்போன்ற 'பெரிய மனிசரெல்லாம் ஒண்டாய்ச் சேரலாம். நாங்களும் நல்லதம்பியாக்களும், ஏன் ஒண்டாய்ச் சேரக்குடாதோ?'

'அப்ப உங்கடை சாதி...?'

உன்னைப்போன்றவங்களுக்குத்தான் சாதி. மண்ணையும் எங்கடை கையளையும் நம்பி வாழுற எங்களுக்கு சாதி எண்டு ஒண்டில்லை. நாங்கள் எல்லாம் ஒண்டு.'

அங்கே, இரு திசைகளிலிருந்து ஓடி வந்த இரண்டு நதிகள் சங்கமித்து, புதுச்சக்தி பெற்று வீறுடன் முன் பாய்ந்து கொண்டிருக்கின்றன.

'மார்க்கண்டு, நீ வா அப்பா. உவங்களோடை கதைச்சுப் பிரயோசனமில்லை. நாம் வேறை வழியைப் பாப்பம்.'

மண்மக்கள் தீக்கொழுந்தாக மாறுகின்றார்கள்!

'டே சிருப்பா!'

அவர்களுடைய இடிமுழக்கம் போன்ற குரல்கள் வயல் வெளியில் எதிரொலிக்கின்றன.

சிருப்பரும் மார்க்கண்டரும் விரைவாகச் செல்லப்பார்க்கின்றனர்.

'சிருப்பா நீ என்னடா செய்யப் போறாய்?'

அவர்கள் முழங்குகின்றார்கள்.

சிருப்பராக்கள் ஓட முயல்கின்றார்கள். முடியவில்லை.

'நீ செய்யிறதைச் செய்யடா, நாங்களும் தயாரடா. ※

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திங்கள்
## மூன்றினுள்
# மறந்திடுவாயோ?

புன்னகை சிந்தும் பொன்முகம் கண்டு
பூரித்தேன் நான் சில திங்கள்
என்மக மழலையைப் பிரிந்து கடிதில்
அகன்று விடவே விதி ஆச்சே
சின்ன மகளின் பொக்கை வாயால்
சிந்திய முத்தங்கள் கன்னத்தில் இருந்து
இன்னும் எந்தன் எண்ணத்தில் இனிக்குது
என்சேய் பிரிவெண்ணி மாள்கிறதே மனம்!

சின்னக் கண்கள் சுழன்றிடும் அழகை
என்மனம் தாவி இழுக்குது அங்கே
வண்ணக் கரங்கள் துடித்திடும் வடிவை
எண்ணி என்னில் தொடருது ஏக்கம்.
கண்ணே மணியே, என் மகளே!
காலம் எம்தொடர் பிரித்தது ஏன்?
காவலன் கொடுமைமுன் அறிந் திருந்தால்,
காலம் கடந்துநீ உதித் திருப்பாயோ?

எங்கே போனார் என்தந்தை என்று
உங்கும் குடித்திட மறுத் திடுவாயோ?
சங்கு மழலை மொழி கேட்க
திங்கள் மூன்றில் வந்திடு வேன்
தூங்கி விழித்து எழுந்தது போல்
தாங்கள் யாரோ எனப் பார்ப்பாய்
ஏங்கிச் சாகும் உன் தந்தையை
தங்க மகளே என் உயிரே,
திங்கள் மூன்றினுள் மறந் திடுவாயோ?

(இஃது மூன்று திங்கள் தன் மழலைச் செல்வியைப் பிரிந்திருக்க நேர்ந்த ஒரு தந்தையின் சோகக் குரல்.)

கலேவெல பீ. எம். அன்வர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் கொடி பறந்த ஈழம்

எம். ஏ. இஸார்

உலகத்தில் மொழி ஏற்படுவதற்கு நீண்ட காலத்துக்கு முன்பே இசை எழுந்துவிட்டது என்பது மொழி நூற் புலவர் ஆட்டோ எஸ்பர்சன் என்பவரின் ஆராய்ச்சி. மக்கள் தங்கள் உள்ளங்களில் உந்திய கருத்துக்களைக் கை, கால், உதடுகள், அசைவால் பிறர் அறியச் செய்துவந்தார்கள். பின்னால் ஒருவகை ஒலி மூலம் கருத்துக்களையும் தங்களுக்கு ஏற்பட்ட இன்ப துன்பங்களையும் பிறர்க்கு அறியச் செய்தனர். எனவே தமிழன் நாடகத் தமிழ், இசைத் தமிழ், இயற் தமிழ் என்று தன் மொழியை முத் தமிழாகக் கொண்டான். உலகில் வேறு எந்த இனமும் தம் மொழியை இயல்—இசை—நாடகம் என மூன்றாகப் பகுத்துக் காணவில்லை.

ஈழத்தின் வட பகுதியில் சிங்கை என்ற ஓர் ஊர் இருந்தது. இது பருத்தித் துறைக்கு அருகில் இன்று உள்ள வல்லிபுரம் என்று கூறப்படுகிறது. இங்கு முற்காலத்தில் செய்துங்கவர ராசசிங்கன் ஆட்சிக் காலத்தில் பாணன் ஒருவன் அரச சபையில் யாழ் மீட்டித் திறமையைக் காட்டினான். அந்த இன்ப நாதத்தில் மயங்கிய அரசன் இன்று கரையூர், பாசையூர் என்று அழைக்கப்படும் மண் மேட்டை பரிசாக அளித்தான். அதிலிருந்து பாணனும், அவன் சுற்றத்தார்களும் குடியேறினார்கள். அதனால் அவ்விடம் யாழ்ப்பாணம் என்று அழைக்கப்பட்டது. வெள்ளையர் ஆட்சிக்குப் பின்னும் அவர்கள் கட்டிய கோட்டை கொத்தளங்களுக்கும், நகரத்திற்கும் யாழ்ப்பாணம் என்ற பெயரே அழியாமலிருக்கிறது. இந்த ஆராய்ச்சியை முதலியார் ராசநாயகம் "புராதன யாழ்ப்பாணம்" என்ற நூலில் குறிப்பிட்டிருக்கிறார்.

இலங்கையில் உள்ள திரிகூட பர்வதம் என்னும் மலையுச்சியிலே இருந்த இலங்காபுரிதான் இராவணனுடைய தலைநகரம். அவனது தேசியக் கொடியில் யாழ் உருவம் பொறித்து 2500 ஆண்டுகளுக்கு முன் இருந்த நாடு ஈழம்

இராவணன் ஒரு சிவ பக்தன், இசை வல்லுநன், "இராவணன் மேலது நீறு, வண்ணந் தருவது நீறு" என்று சம்பந்தர் இராவணனைப் போற்றிப் புகழ்கின்றார்.

இராவணன் கயிலையைக் கடந்து அதற்கப்பாலுள்ள நாடுகளை எல்லாம் வெற்றிகொள்ள எண்ணித் தன் விமானத்தில் புறப்பட்டான். விண் முட்ட நிற்கும் கயிலை மலையை அவனால் கடக்க முடியவில்லை. எனவே விமானத்திலிருந்து இறங்கி மலையைத் தகர்த்தெறிந்து வழி செய்ய நினைத்தான். அதுவும் அவனால் முடியவில்லை. கடைசியாக அவன் வழிபடும் சிவனை நினைத்து தன் யாழை மீட்டினான். மதுர இசையினால் வேண்டினான். அவனுக்கு வரம் அருளினார் சிவபெருமான்.

இன்னொரு சமயத்தில் இராவணன் இமய மலையின் கீழ் அகப்பட்டு திக்குமுக்காடினான். அதைவிட்டு அவனுக்கு தப்புவதற்கு வழிகாண முடியவில்லை. மீண்டும் யாழை எடுத்தான். அதிலிருந்து இன்ப நாதம் எழும்பியது. சிவபெருமான் மனமிரங்கி கயிலை மலையினின்று கீழே இறங்கி அவனுக்கு திருவுருவைக் காட்டி அவன் கேட்ட வரங்களும், வாளும் அளித்தார்.

இராவணன் தமிழ் நாட்டை வெற்றிகொள்ள நினைத்தான். வலிமை வாய்ந்த, கடவுள் அருள் பெற்ற இலங்கை வேந்தனை எண்ணித் தமிழ் வேந்தர்கள் கலங்கினார்கள். இதை அறிந்த அகஸ்தியர் இராவணனை அணுகி 'நீ தமிழகத்தை ஆள வேணுமென்று தமிழ் மக்களோடு போரிட்டுப் பல்லாயிரக் கணக்கானோரைக் கொன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குவித்து பாழ்பட்ட பட்டணங்களில் உன் ஆட்சியை நிறுவ விரும்புகிறாயா?' என்று கேட்டதும், இராவணன் உண்மையிலே மனங் கலங்கினான். அகஸ்திய முனிவர் மீண்டும் 'நீ தமிழகத்தை ஆள விரும்பினால், உன் யாழை மீட்டி இசையிலே தமிழனை வென்றுவிட்டால் தமிழ் நாட்டை நீ பெறுவதில் தடையில்லை என்றார்.

பொதிகை மலைச் சாரலிலே இசைப் போட்டி நடப்பதற்கு ஏற்பாடாயிற்று அகஸ்தியர் 'போட்டியில் என்னை மட்டும் நீ வென்றுவிட்டால், அது தமிழனை வெற்றி கொண்டதாகும்' என்று சொல்லி யாழை எடுத்து இசை மீட்டினார். பண்ணொலிப் பிரவாகத்தில் கடும் பாறைகள் நீராகி ஓடின. அப்பொழுது இளங் ஓடும் கற் குழம்பில் தன் யாழைவைந்தார் முனிவர் பாகாய் ஓடிய பாறை உடனே கல்லாகிவிட்டது. அகஸ்தியர் 'இராவணேஸ்வரா இந்த யாழை எடுத்து மீட்டு' என்றார். இசைத்திறன் அத்தனையும் உபயோகித்தும் அவனால் கடைசிவரை யாழை அசைக்கவும் முடியவில்லை. தன் தோல்வியைநினைத்து தலை குனிந்தான் யாருக்கும்தலை வணங்கா இலங்கை வேந்தன். அகஸ்தியர் வேறு யாழை எடுத்து மீட்டினார். கல்லாய் சமைந்த பாறை பாகாய் ஓடியதும் தம் யாழை எடுத்துக்கொண்டார். தமிழகத்தின் இசைச் திறனுக்கு அடிபணிந்தான் இராவணன். அகஸ்திய முனிவருக்கு மரியாதை செலுத்தி தமிழகத்தின் நண்பனாக நாடு திரும்பினான்,

இராவணன் இயற்றிய இசை நூல் ''இராவணியம்'' அவனது யாழ் ''இராவணாஸ்தம்'' என்று வடமொழிப் புலவர் கூறுவர். அவன் மருத்துவ நிபுணன். அவன் இயற்றிய நூல் இன்னும் சிங்கள மொழியில் இருக்கிறது என்ற உண்மைகளை அபிதான சிந்தாமணி இராவணாஸ்தத்தைக் குறிப்பிடுகிறது.

வான்மீகி வட மொழி இராமாயணத்தில் கிஷ்கிந்தா காண்டத்தில் சுக்ரீவன் என்னும் வானரத் தலைவனுடைய அரண்மனையில் எழுந்த இசை இன்னொலியைப் போல இராமன் இதற்கு முன் என்றுமே கேட்டதில்லை என்பதிலிருந்து திராவிடர்களுடைய இசை வான் புகழ் கொண்டது என்பதை வான்மீகியே ஒத்துக்கொள்கிறார்.

இப்படி பல ஆராய்ச்சிகளைக் கொண்ட நூல் தான் ''இசையும் யாழும்'' இதன் ஆசிரியர் நுண்கலைச் செல்வர் சாத்தன்குளம் அ. இராகவன் அவர்கள்.

## தமிழும் சிரஞ்சீவித்துவமும்

தொன்மையான கிரேக்கம், லத்தீன், ஹீப்ரு மற்றும் சம்ஸ்கிருத மொழிகள் காலத்திற்கும் வரலாற்றுப் போர்குகளின தாக்குதல்களுக்கும் ஈடுகொடுக்க இயலாமல் போனபோது தமிழ் மட்டும் எப்படி இன்றும் பரவலான வழக்கில் இருக்கும் மொழியாகத் தழைத்திருக்க முடிந்திருக்கிறது என்பது யாருமே விளக்கமுடியாத புதிராகத் தோன்றலாம்.

ஆனால் தமிழ்மொழி இன்னும் தழைத்திருக்கிறது—அன்றாட நடைமுறைக்கு உகந்ததாகவும், உணர்ச்சிகளுக்கு ஈடுகொடுப்பதாகவும், தத்துவ ஆழம் பொருந்திய உலகளாவிய நோக்குடனும், அதே நேரத்தில் மானுடக் காமத்தின் எல்லாப் பிரிவுகளிடமும் பரிவு கொண்ட அக்கறைப் படைத்ததாகவும், மொழியின் தன்மையில் தோன்றியிருக்கும் அபார கற்பனை வீச்சுடனும், இயற்கையின் உருவகத் தெய்வங்களுடன் இணைந்தே வாழும் கிராமியக் குடிமக்களின் எளிமையான சிந்தனைக்கும் பூரணமாக உகந்ததாக இன்னும் தழைத்திருக்கிறது.'

—டாக்டர் ஆல்பர்ட் பி. ஃபிராங்லின்
(நன்றி 'கணையாழி')



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாறுதல்கள்

அத்தியாயம் 6

இரவின் பயங்கரமோ பகலின் பரபரப்போ இல்லாத காலைப் பொழுது. ஐந்துக்கும் ஐந்தரைக்கும் இடையே நேரம் ஏதாவதாக இருக்கலாம்.

பனியும் புகையும் 'பம்'மென்று கிடக்கிறது வெளியே. வீட்டைச் சுற்றியுள்ள தேயிலைச் செடிகளில்.

ஒரு எட்டு வெளியே வந்தால் தேயிலையில் மேயும் பனிப் படலத்தை கைகளில் அள்ளிக் கொள்ளலாம். இலேசாகத் திறந்து கிடக்கும் கதவின் இடைவிளிம்பில் கோடாக இழைகிறது பனிப்புகை.

கங்காணியார் உடலைச் சிலிர்த்துக் கொண்டார். கூதல் காற்று ஊசியாய்த் துளைத்தது. எலும்பின் குருத்துக்களைத் தொட்டுப் பார்க்கின்றது.

ஒரு துண்டு சவுக்குக்கரியை எடுத்து வாய்க்குள் வீசி, 'நர்நர்' ரென்று மென்று, ஆள் காட்டி விரலை வாய்க்குள் திணித்தார்.

தெற்கு பேஸ்டும் பிரஷ்டமாக சீதை கதவண்டை நின்றாள்.

உள்ளே நிற்கும் பெரிய கங்காணி குளிரில் நடுங்குகின்றார். இவள் கதவடியில் நிற்கின்றாள். குளிராதோ!

வெயில் சுடாது. பனிக்காற்று குளிராது. பசிகூட எடுக்காது. அந்த வயது அப்படி. உடலில் உண்டாகும் உணர்வெல்லாம் ஒன்றே ஒன்றுதான்.

தேயிலை மாற்றை முழங்காலில் வைத்து மடக்கி ஒடித்து அடுப்புக்குள் திணித்துக் கொண்டிருந்தாள் மீனாட்சிக்கிழவி. தேயிலை மாறு 'திகு திகு' என்று பற்றத் தொடங்கியதும் அதன் மேலாக சவுக்குச் சிறுப்களை அடுக்கினாள். 'அய்யா சுடு தண்ணி கேட்பார்' என்ற அவசரம் அவளுக்கு.

''என்னா தண்ணி சுடலியா?''

''சுட்டுறிச்சிங்க ''

பாத்ரூம் பைப் சீறிப் பாய்கின்றது, 'சர்' ரென்று. மகள் முகம் கழுவுகின்றாள். பச்சைத் தண்ணீர் கையில் பட்டால் கங்காணியார் விறைத்துப் போவார். அதுதான் சுடுதண்ணீருக்காகக் காத்துக் கிடக்கின்றார்.

தாவணித்தலைப்பால் முகத்தைத் துடைத்துக் கொண்டு வெளியே வந்தாள் சீதை.

காதோர சுருள் மயிர் ஈர முகத்தில் கோடாகக் கிறிக்கிடந்தது. கழுவி விடப்பட்ட பளிங்குபோல் பளீர் என்று இருக்கின்றது முகம்.

எதிலே குறை என் மகளுக்கு என்று எண்ணிக் கொண்டார். பெருமைப் பட்டுக் கொண்டார்.

அழகுக்கு அழகு உடலுக்கு உடல் என்று எல்லாமே இருக்கிறது.

தெளிவத்தை ஜோசப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடு தண்ணீர் நிறைந்த கைவாளியுடன் பாத்ரூமுள் நுழைந்தவள் முகம் கழுவி முடித்து வெளியே வருவதற்குள் பாவாடை தாவணிக்குள் இருந்தவள் வெள்ளைக் கவுனுக்குள் நுழைந்து கொண்டாள்.

சற்றுமுன் பார்த்த அதே மகளைத் தான் இப்போதும் பார்க்கின்றார். ஆனால் கவுனுக்குள் அவள் சின்னவளாகத் தோன்றுகின்றாள். நம் கண்ணே நம்மை ஏமாற்றுகிறது. மற்றவர்கள் ஏமாற்றக் கேட்கவா வேண்டும்.

மணி ஐந்தே முக்கால். மேசையில இறைந்து கிடந்த புத்தகங்களை அடுக்கி வைக்கின்றாள்; அன்றைக்குத் தேவையானவைகளைப் பிரித்தெடுத்துக் கொண்டு.

தலையைச்சீவி. முடியை முன்னுக்கு முத்துப் பின்னி. முடிந்து முதுகில் தூக்கி வீசிக்கொண்டு அடுப்படிக்கு வருகின்றாள்.

மீனாட்சிக் கிழவி சுட்டு வைத்திருந்த இடியப்பத்தில் ஒன்றை பல்லில் தேய்த்து விட்டு வெளியே வந்தாள். தோட்டத்தில் இருந்து டவுன்பள்ளிக் கூடம் போவதே ஒரு பிரச்சனையான விஷயம்.

சீசன் டிக்கட், டைம் டேபிள்படி புத்தகங்கள், லஞ் பார்சல், ஆகியவைகளை மீண்டும் ஒரு தடவை சரிபார்த்துக் கொண்டவன் "இன்னுந்தான் தேத்தண்ணி ஊத்துறியோ" என்று கத்தினான்.

"இன்னும் பாலு கொண்டாறலை ஆத்தா" என்ற கிழவி அதோ வந்திரிச்சி" என்று சுறு சுறுப்படைகின்றாள்.

கைவாளிப்பாலை ஒரு வெள்ளைத் துணி போட்டு மூடி வலது கையில் பிடித்துக் கொண்டு. இடது கையில் வெண்ணெய்க் குப்பியை ஏந்தியபடி பட்டியில இருந்து வந்து கொண்டிருந்தான் மெய்யப்பக் கிழவன்.

சேத்தண்ணீருக்காக சீதை சத்தம் போட்டது பெரிய கங்காணியார் காதிலும் விழுந்தது.

"இந்தா மீனாட்சி பச்சைப்பாலை ஊத்திக் கொடுக்காதே. கொஞ்ச பாலுஞ் சும் சூடாக்கி ஊத்திக்குடு" என்று குரல் கொடுத்தார்.

"நீ ஊத்து ஆத்தா, தேத்தண்ணி தான் கொதிக்குதே பச்சைப்பாலை ஊத்திக்குடிச்சா என்னவாம்? அப்பா கேட்டா காச்சித்தான் ஊத்தினேன்னு சொல்லிக்கோ மணி ஆறுகுது" என்று கிழவியிடம் ரகசியமாகக் கூறிவிட்டு வாளிப் பாலில் கொஞ்சம்போல் தேனீர்க் கோப்பையில் சாய்த்துக் கொண்டு வெளியே நடந்தாள்.

மார்பிலேந்திய புத்தகங்களுடன் இராமனுக்காக கதவண்டை நிற்கும் சீதையின் முதுகு கங்காணியாருக்குத் தெரிகிறது.

கவுனின் வெள்ளையில் கரு கரு வென்று கை மொத்தம் தொங்கும் சடை இடுப்புக்குக்கீழே நீண்டு முதுகை இரு பாதியாகப் பிரிக்கிறது.

தோளுக்கு மேலாக வெளியே இலேசாக வெள்ச்சம் தெரிகிறது. பறவைகள் இன்னிசை பொழிய பொழுது புலர்கிறது.

இராமன் வந்துவிட்டான். மார்புடன் அணைத்து வைத்திருந்த புத்தகங்களையும் டிபன் பொக்சையும் அவனிடம் கொடுத்துவிட்டு மேசையில் இருந்த ஒரு தடித்த புத்தகத்தை எடுத்து கையில் ஸ்டைலாகப் பிடித்தபடி "வர்றேன்பா" என்று படி இறங்கினான்.

இராமனை எட்டிப்பார்த்த பெரிய கங்காணியார் உதட்டைப் பிதுக்கிக் கொண்டார்.

"என் புள்ளையை சம்பளத்துக்குக் கூட்டிப்போற வேலைக்காரப் பயலாவா தெரியுது .. ப்பூ... கொஞ்சம் இடம் கொடுத்தா மடம் புடுங்குவானுகளே... செருப்பும் ஆளும்... இந்தச் சொகுசெல்லாம் இன்னம் எத்தனை நாளைக்குன்னு பார்க்கிறேன்" என்று பொங்கினார்.

பெரிய கங்காணியின். வீட்டிலிருந்து செங்குத்தாக ஒரு படிக்கட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏறுகிறது. சுமார் இருநூறு படிகள் இருக்கும். மலையை வகிடெடுத்து செருக்கும் அந்த நேரான படிக்கட்டில் நெஞ்சு முட்ட ஏறியதும் ஒரு சிறு மண் ரோட்டுக்குப் போகத்தான் இந்தப் படிக்கட்டு.

படியேறிய களைப்புத்தீர ஒரு பத்து விநாடி அந்த மண்ரோட்டில் நிற்காமல் யாரும் நடந்தது கிடையாது. நடக்கவும் இயலாது. அந்த ஒற்றையடிப் பாதையில் சிறிது நடந்தால் தோட்டத்துப் பாடசாலை. அதிலிருந்து ஒரு கட்டை நடந்தால் பஸ் ஓடும் பெரிய பாதை.

ஏழுக்கு ஐந்து நிமிடம் இருக்கவே பெரிய பாதைக்கு வந்தால்தான் பஸ்ஸைப் பிடிக்கலாம். இல்லை என்றால் அடுத்த பஸ் எட்டே காலுக்குத்தான். அதுவும் கீழே போன பஸ் மேலே வருவதைப்பொறுத்திருக்கிறது அடுத்த பஸ் எட்டே காலுக்கு என்பது.

ஆறுக்காவது வீட்டை விட்டு கிளம்பினால்தான் பஸ் பிடிக்கச் சரிவரும் என்பது சீதைக்குத் தெரியும், ராமனுக்குத் தெரியும், ஏன் பெரிய கங்காணிக்குமே தெரியும்.

வீட்டைத்தாண்டி நேரான குறுக்குப்பாதையில் இருவரும் ஏறுவதை வெளியே வந்து நின்று பார்த்த பெரியவர் பெருமூச்சு விட்டார்.

மெலிந்த தன் கைகளால் இருளைத் துடைத்துக் கொண்டிருக்கின்றாள் காலைக் கன்னி.

அது மிகவும் அமைதியான நேரம். ஒரு நாளின் முழுப் பொழுதிலுமே மிகவும் கவர்ச்சியான நேரம் இந்த அதிகாலைதான், கன்னியரின் பதினாறு பதினேழு போல்.

சந்தடியற்ற, அமைதியான இந்த வேளையில் இளமையின் ஏறுபடியில் இருக்கும் பெண்ணுக்குத் துணையாக அவளைவிட இரண்டு வயது மூத்த ஆண்மகனைப் போகவிட்டது எத்தனை தவறு.

அமைதியான இந்தச்சூழலில் அவர்களுடைய பேச்சுக்கள், எந்தஅளவும் அந்தரங்கமானதாகவும், சக்தி வாய்ந்ததாகவும், இருக்கலாமே!

இத்தனை நாளும் இதே நேரத்தில் தான் இருவரும் நடந்திருக்கின்றனர். சீதை சின்னவளாக இருந்த போது ஒன்பது மணி பஸ்ஸில் போனாள். செருப்பேற ஏற இந்த நேரம்தான். இது எத்தனை பாரதூரமானது என்பது அப்போதெல்லாம் அய்யாவுக்கு தெரியவில்லையோ!

அவருடைய முகத்துக்கு நேரே தான் இத்தனையும் நடந்திருக்கின்றது. மூக்கடியில் நடப்பதைற்றை மூளைக் குறைத்த மூன்றும் நபர் வேண்டியிருந்திருக்கிறது.

அன்று கோவில் மலை கொழுந்து 'றவுண் பிந்திப்போவுது, ஆறு நாள்ல முடிய வேண்டிய மலைக்கு ஏழுநாள் ஆவுது, ஏழாவது நாள் போயாமென்றால் எட்டு நாளாவுது... ரெண்டு நாள் வரை விட்டா கொழுந்து என்னத்துக்காகும்... முத்தெலை முத்தெலைன்னு அவனுக கத்தித் தொலைக்கிறானுக...' என்று சின்னதுரை போட்ட கூச்சல் கண்டக்டர் மேல் விழுந்து கண்ணுடியில் பட்ட ஒளியாய் கங்காணி மேல் வந்து விசிரியடித்தது.

'இந்தப் பழைய மலைச் செக்ரோலை தலையைச் சுத்தி வீசுனத்தான் மனுசனுக்கு திங்கிற சோறு உடல்லே ஒட்டும் என்று முனகிக் கொண்ட பெரிய கங்காணி அடுத்த நாள் அதிகாலையிலேயே மலைக்கு கிளம்பினர்.

முண்டாசை இறுக்கிச் சுற்றி மண்டையை சூடாக்கிக் கொண்டார். உதடுகள் அடித்துக் கொண்டன 'வெட வெட' வென்று.

''பிந்தி வர்ரவுக யாரா இருந்தாலும் வெரட்டுறது வெரட்டுறது தான்'' என்று கருவிக் கொண்டார்.

கோவிலிடம்தான் எல்லோரும் நிரை பிடிக்க வேண்டும். வெள்ளனவே மலைக்கு வந்துவிட்ட! கங்காணியார் கோவிலின் அருகே உள்ள மடுவத்துக்குள் போய் நின்று கொண்டார். பெருமூச்சு கூட எதிரொலிக்கும் அந்த சின்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கர்ம்பிராவின் சூடு அப்போதைய குளி ருக்குச் சுகமாக இருந்தது.

சுவருக்குப் பின்னால் மலைச்சரிவில் பேச்சுக் குரல் கேட்டது. முதல் ஆளாக வந்துவிட்ட இருவர் பேசிக்கொண்டனர்.

சுவர் கண்ணை மறைத்தாலும் காதை மறைக்கவில்லை. மனதை மறைக்கவில்லை. அவருக்குத் தெரிகிறது யார் பேசுவது என்று. அன்று நேற்று கேட்கும் குரல்களா அவை.

''நாமதாண்டி மலைக்கு மொத ஆளு ஒரு சுடு குஞ்சைக்கூட காணம், ..

''அதோ பாரு பெரியாங்காணி மவகோட இப்பத்தான் இசுக்கூலுக்குப் பொவுது .

''மவ மட்டு மா போவுது கூட மறுவன் போவலியா ?

''என்னுது மறுமவனு இது என்னடி யாத்தா புதுக்கதை ?

''ஐயோ ஒன்னுந் தெரியாத தங்கம், என் ஒம்பது மாசத்து சிங்கம்...புதுக் கதையாம்ல்ல புதுக்கதை... தோட்டமே டாம் டாமடிக்குது... ஒனக்கு மட்டுந்தான் அதிசயம். நீந்தான் அரமனையை விட்டு வெளியே வர மாட்டியே ஒனச்கெப்படித் தெரியும...

அதோ பாரேன் ரெண்டு பேரும் போற தினுசை ... என்ன கொழைச்சல், என்ன கும்மாளம்...,

அந்தக் குளிரிலும் கங்காணியாருக்கு வியர்த்துக் கொட்டியது. ரேட்டை எட்டிப் பார்க்கத்தான் பரபரத்தார். தான் அங்கு நிற்பது தெரிந்துவிடக் கூடாதே என்ற பயத்தில் பல்லை கடித்துக்கொண்டு நின்றார்.

''கங்காணியப்பாவுக்குத் தெரியுமாடி ?

''தெரிஞ்சா இதெல்லாம் நடக்குமா? இன்னம் அவனோடயே அனுப்புவாரா? வெளுத்த தெல்லாம் பாலுண்ணு நெனைச்சிக்கிட்டு இருக்குது அந்த மணுசன்''

''நானே கோட நெனச்சேன் அதுக ரெண்டும் இப்படியே போய்க்கினு இருந்தா இதுக்கு என்னதான் முடிவுன்னு .. இப்பத்தானே தெரியுது.



''நெனைக்கிறது என்னத்தை... அந்தப் பொடியன் கூட்டிக்கிட்டுப் போவாட்டி இது இஸ்கூலுக்கே போவா

தாமே.. படிக்கப் போறதுக்கே அவந் தான் வேணு மின்னு . ...'

என்று பேச்சை முறித்துக் கொண்டவள் ''கங்காணிடி... கங்காணி' என்று முனகினாள்.

சில்லரைக் கங்காணிமார் இருவருடன் இன்னும் சில பெண்கள் ஏறி வந்து கொண்டிருந்தனர். ஏறி வந்த பெண்கள் பாதையோரத் தேயிலையிடம் நின்று படங்கு கட்டிக்கொண்டிருந் தனர்.

''ஏய் நீ ரெண்டு பேரும் மேலே வா, நெரை அதா இல்லே'' என்று கங்காணிகளில் ஒருவன் முதலாளாக வந்த பெண்களை மேலே இழுத்தெடுத்தான்.

புலிக்கூண்டில் கிடந்தது போன்ற அவஸ்தையுடன் பெரிய கங்காணி வெளியே வந்தார்.

உடல் வியர்த்துக் கொட்டியது தலை கிர் கிர்ரென்று சுற்றியது. ஓடிப் போய் எங்காவது பச்சைத் தண்ணீரில் விழுந்து எழுந்திருக்க வேண்டும் போல் இருந்தது. அப்படி ஒரு கோரமான உஷ்ணம் உடல் முழுதும் பரவி நின்றது. அவருக்குப் பின்தி மலைக்கு வந்தவர்களைப் பற்றி அவர் எண்ண வில்லை. முந்தி வந்தவர்கள் மூட்டி விட்ட அனல் உள்ளே புகையாய் மண்டிக் கிடப்பதை எண்ணி அழுதார்.

அவரால் அங்கு நிற்க முடியவில்லை குடலைப் பிசைந்தது. சரம் சொட்டச் சொட்ட நிற்கும் தேயிலைகளை நீவி நெரித்துக் கொண்டு இறங்கினார். வேட்டி நனைந்து தொப்பையாகியது.

இப்போது அவருக்கு அவசரமாகத் தேவைப் பட்டது தனிமை. அரசமரத் தடியில் கிடந்த பாறையில் உட்கார்ந்து கொண்டார். அழுகையும் ஆத்திரமுமாக வந்தது. நெஞ்சுக்கு மேல் கோட்டின் ஓரம் உப்பி உப்பி மடிந்தது. அப்படி அடித்துக் கொள்கிறது நெஞ்சு.

''அப்படி இருக்க முடியுமா?''

'ஏன் இருக்க முடியாது. விவரம் தெரியாத வயதில் இருந்தே இருவரையும் எப்படிப் பழக விட்டிருக்கின்றேன். சின்னதில்தான் எப்படியோவென்றாலும் வயதுக்குவந்த பிறகாவது வெட்டி விட்டிருக்க வேண்டும் செய்தேனா...! தொந்தரவில்லாம பள்ளிக்குப் போய் வந்தால் போதும் என்றிருந்தேன்...... அது புதுத் தொந்தரவில் கொண்டு வந்து விட்டிருக்கிறது.

பெண்ணையோ பிள்ளையையோ பெற்றவன் நிம்மதியாக இருக்கவே முடியாதா? பிள்ளைகளின் நோக்கமே பெற்றவர்களை நோகச் செய்வது தானா தங்களுடைய உற்சாகத்தில் பெற்றவர்களின் நோவு தெரிவதில்லையோ...?

கங்காணியார் அமைதியாக அழுதார்.

வாழ்விலே இன்பமும் துன்பமும் பாதி பாதி என்ற தத்துவப்படி இவ் வாழ்வில் ஈடுபட்டு அவர் அனுபவித்த இன்பங்களுக் கெல்லாம் இதோ அழத்

## வாழ்வு

என்னோடு நீ
காதலை மாந்திக்
களித்திருந்தாய்,

என்னோடு நீ
எண்ணங்களாகிக்
கலந்து விட்டாய்,

என்னோடு நீ
ஏக்கங்களாகி
வாழ்ந்திருப்பாய்,

உன்னை என்
மனச் சுடலையில்
புதைத்துள்ளதால்.

மு. கனகராசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்கியிருக்கின்றாரே இது சடு செய்யும்.

ஞானிகள் இங்கேதான் திருப்தி பட்டுக்கொள்ளலாம்,

இன்பத்தின் உச்சத்தைத் தொட்டு விட்டு பிறகு படிப்படியாக இறங்கி மற்றதின் உச்சத்துக்குப் போகாமல் இரண்டையும் ஒரே சீராக ஆக்கிக் கொள்ளுகின்றனர்.

தலைத் துணியை சுழட்டி முகம், கை மார்பு, என்று அழுத்தித் துடைத்துக் கொண்டு எழுந்தார். துணியை டப் டப் பென்று உதறி மீண்டும் தலையில் சுற்றிக் கொண்டார்.

படிக்கட்டில் இரு பெண்கள் மிகவும் சுவாரஸ்யமாகப் பேசிச் சிரித்துக் கொண்டு ஏறினர்.

இருவருடைய கூடைகளும் ஒன்றுடன் ஒன்று மோதி மீள்கின்றன.

"என் பெண்ணைப் பத்தித்தான் பேசிக்கிறாளுகள். அது தான் அத்தனை கும்மாளம்" என்று குமைந்து கொண்டார்.

ஒட்டிக்கொண்ட அட்டை போல் இந்த நினைவு அவரை உறிஞ்சிக் கொண்டே இருந்தது.

இன்றே நிறுத்திவிட வேண்டும் என்று அன்றே நினைத்தார். முடிந்ததா?

சின்னானைக் கண்டு இதைப்பற்றி எப்படிப் பேசுவது! 'பார்ப்போம்' என்று நினைத்துக் கொண்டார்.

அவனை வேண்டுமானால் நிறுத்தி விடலாம் "நீ கூட்டிக் கொண்டு போக வேண்டாம்' என்று. அப்போதும் தோட்டம் பேசத்தான் போகிறது "கங்காணிக்கு விஷயம் தெரிஞ்சிடுச்சி போலிருக்கு அதான் அவனை நிற்பாட்டிட்டார்' என்று.

'போகட்டும் மெதுவாக வெட்டி விட்டுடுவோம் சமயம் பார்த்து' என்று எண்ணிக் கொண்டவர் சமயத்துக்காகக் காத்திருந்தார்.

'நீ கூட்டிக்கிட்டுப் போக வேணும் என்பதற்கு சமயம் வரலாம். பெண்ணிடம் எப்படிப் பேசுவது. மகளின் காதலைப்பற்றி அவளிடம் எப்படி தந்தை பேசுவது. எப்படித் தொடங்குவது எப்படிப் புத்தி கூறுவது.

யோசித்து யோசித்து அவருக்கு மண்டை காய்ந்து விட்டது.

மருந்து குடித்த ஏப்பம் வருவது போல் கசப்பான எண்ணங்கள் அவ்வப்போது மேலே வந்து கொண்டிருந்தன. பல்லைக் கடித்துக் கொண்டு மகளை அனுப்பிக் கொண்டிருந்தார்.

இருவரும் செங்குத்தான குறுக்குப் பாதையில் ஏறுவதை சினிமா வில்லன் போல் பார்த்து பொருமிக் கொண்டிருந்து விட்டு உள்ளே வந்தார்.

அன்றே அந்தப் பெண் சொன்னாளே 'கங்காணியப்பாவுக்குத் தெரிஞ்சா அந்தப் பயகூட அனுப்புவாரா' என்று. நிறுத்தப் போய் அய்யாவுக்கு தெரிஞ்சு போச்சு என்று தோட்டத்தைப் பேச வைத்து இந்தத்தூர் நிகழ்ச்சிக்கு தானே ஒரு சாட்சியாக இருக்கப் பிரியப்படாததால் தான் மூச்சைப் பிடித்துக் கொண்டு மூன்று நாளாக அனுப்பிக் கொண்டிருக்கின்றார்.

அக்கொருவர் இங்கொருவராக இப்போதுதான் ஆள் நடமாட்டம் தெரிகிறது.

பெரட்டுக் களத்தில் கூட்டம் சேருகிறது.

சுட்டுக் கொண்டே உள்ளிறங்கும் தேனீரை 'மடக் மடக்' கென்று குடித்தவர் நங்கென்று கிளாசை மேசை மேல் வைத்து விட்டு ஒரு கையில் செக்றோலும் மறுகையில் பிரம்புமாக லயத்துக் குறுக்கில் நுழைந்தார்.

லயத்தைத் தாண்டி மரப்பாலத்தில் நடக்கும்போது நினைத்துக்கொண்டார் 'பாலம் அந்தப் பைத்தியக்காரக் கிழவி 'பாலாயி' இருந்தாள்னா இன்னேரம் செலாஞ்சாமி, எனபான். அனியாயமா தொரை கார்ல அறைபட்டு செத்துப் போனான்' என்று.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துணிவு



பலப்பிட்டி
அருஸ்

தாமரை மலரின் ஓரிதழில்
தனியே சென்று வண்டமர

ஓரிதழ் ஒடிந்து மடிந்திடவே
உரக்கக் கத்திய தாமரையாள்

ஏசிவண்டைத் துரத்தியதே
எங்கோ வண்டு பறந்ததுவே

தாமரைப் பக்கம் கிட்டிய வண்டுகள்
தவிக்கும் ஒடிந்த தாமரை கண்டே

உண்டு மகிழ தேனில்லை என்று
உணர்ந்து வண்டுகள் அகலத்

தாமரையாளுய காத்திருந்தாள்
தனிமையில் பலநாள் விழித்திருந்தாள்

ஏக்கம் மிகுந்த தாமரையாள்
ஏங்கித் தவித்தாள் கண் கலங்க

வேட்கை மிகுந்த வண்டங்கே
வேறு புது மலர்கள் இன்றி

ஏச்சு வாங்கிய தாமரையாளை
ஏற்க வந்து நோக்கி நிற்க

தாமரை மெல்லெனச் சிரித்து
தன்னிதழ் கொண்டு அன்புடனழைக்க

இதழை ஒடித்த வண்டங்கே வந்து
இணைந்து தேனை யுண்டு மகிழ

அவசர புத்தியால் ஏசிய வண்டை
அன்புடன் அணைத்து முத்தமீந்தாள்.

மலரிதழை ஒடித்த வண்டே வந்து
மலரை ஏற்கத் துணிந்ததே முறைமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனை விளை கிராமம்

**எஸ். எம். ஜே. பைஸ்தீன்**

பனை விளையும் பிரதேசங்களை இலங்கையிலும் காணலாந்தான். பனை விளைச்சலுடன் கூடிய வாழ்க்கை முறையொன்றின் பண்புகளைக் கொண்ட ஒரு மாதிரிக் கிராமத்தை அறிவதற்கு யானையிறவுக்கு அப்பாலுள்ள பரந்த நிலப்பரப்பை நாடிப் பிரயாணத்தை மேற்கொள்ள வேண்டும்.

ஆனால் அவ்வாறு சென்றால் இலக்கிய அந்தஸ்தினை அளிக்கக் கூடிய 'பனை விளை கிராமம்' ஒன்றை அங்கே காண முடியுமா என்ற கேள்வி திருமதி ஹெப்ஸிபா ஜேசுதாசனது 'புத்தம் வீடு' நாவலைப் படித்தபின் என் மனத்துள் எழுந்தது.

இக்கேள்விக்குரிய விடையும் மூடு மந்திரமோ புதிரோ அன்று. நூற்றுக் கணக்கான பனை விளை கிராமங்கள் தத்தமக்குரிய சிறப்பான தனி இயல்புகளோடு இலங்கை மண்ணில் இருக்கத்தாம் செய்கின்றன. என்றாலும் அவற்றின் வாழ்க்கை முறைகள், ஆசாபாசங்கள், பிரச்சினைகள், போன்றவை தகுந்தவாறு முதன்மை கொடுத்து சொற்களில் ஏற்றப்படவில்லை என்றே கூற வேண்டும். அப்படி சொல்லுரு அமைத்தாலும்கூட வாசகர்கள் அவற்றை இனங்கண்டு வரவேற்கவியலுமா என்பது மற்றுமொரு கேள்வியாகும். ஏனெனில் எமது இலங்கை வாசகர்களுக்கு இலங்கை மண்ணிலே உள்ள பனை விளை கிராமம் சுவைக்காது விடலாம். தமிழகத்து வாசகர்களோ ஈழத்தின் பனை விளை கிராமம் ஒன்றிலே அப்படி என்ன விசேஷம் இருந்து விடப்போகிறது. அக்கிராமத்து மக்கள் பேசும் மொழி எமக்குப் புரியவா போகிறது என்று நினைத்தல் கூடும்.

"இக்கதையைப் படிக்கும் போது தென் திருவிதாங்கூர்ப் பகுதியின் திசைச் சொற்களும், வாசகர்களுக்குச் சிறிது சிரமத்தைக் கொடுக்கலாம். ஆனால் அவைதானே இந்த நாவலின் உயிர்த் துடிப்பை நிலைபெறச் செய்கின்றன. அவற்றைச் சிறிது கவனித்துப் படித்தால் நமக்குட் பொருள் விளங்குவதோடு மட்டுமல்ல மிகவும் பழக்கமான சொற்களாகவும் கூடும்" இது புத்தம் வீடு பற்றிப் பிரசுரகர்த்தா விடுத்த வேண்டுகோள். இதை ஒரு எச்சரிக்கை என்று கூறினாலும் தவறாகாது. எனவே எந்த ஒரு வாசகனாயினும் சரியோ-சராசரியான தமிழ் அறிவும் சுவை ரசனையும் இருக்கும் பட்சத்தில் இலக்கியத்தை அனுபவிக்கும் பக்குவத்தைப் பழக்கத்தில் பயிற்றிக் கொள்ளலாம்.

திருமதி ஹெப்ஸிபா ஜேசுதாசனின் 'புத்தம் வீட்'டைத் தமிழ் நாவலின் கனபரிமாணத்தை விரிவாக்கி விட்ட அற்புதமான ஒரு நாவல் என்று கூறுவதற்கில்லை. அது கூறும் கதை பெயரால் மட்டுமே 'புத்தம் வீடு' ஆன ஒரு பழைய வீட்டின் நான்கு சுவர்களுக்குள் ஒடுங்கி விட்ட ஒரு சின்னஞ் சிறு கதை. பனை விளைக் கிராமத்தின் சராசரிப் பெண்ணொருத்தியுடன் இயை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புருத-பெரிய குடும்பப் பெருமையாலேயே தனித்து விடப்பட்ட ''விலி'' யின் கதையே புத்தம் வீடு. அதிலே ஏனைய கதாபாத்திரங்கள் விலியின் பாத்திர அகற்சியிலேயே மறைந்து விடுகின்றன.

இந்நிலையில் புத்தம்வீடு அமைந்துள்ள பனை விளை கிராமம் புத்தம் வீட்டை சுட்டு விரலால் குறித்து எளிதில் இனங்காட்ட உதவும் ஒரு பகைப்புலமாக மட்டுமே காணப்படுகிறது. புத்தம் வீடு அலக்குமுறப் பயன்படுத்தப்பட்ட ஒரு வண்ணக் காட்சித்திரையே பனைவிளை கிராமம்.

இதப்பினும்கூடத் தமிழ் நாவல் முயற்சி அடிப்படையிலே (ஆசிரியையின் முதல் நாவலும் இதுவே) புத்தம் வீட்டுக்கு ஒரு மதிப்பு இருக்கத்தான் செய்கிறது. நாவலுக்குரிய கதையை வழங்குகின்றதான தனித்துவமும். அழகும் மிக்க தமிழ் நடையை மட்டும் தான் இங்கு கருத வில்லை.

''நாகர் கோவில் பகுதியிலே பஸ் போகும் ரோட்டிலிருந்து சிறிது உள்ளே தள்ளி ஒதுங்கி நிற்கும் பனை விளை கிராமத்தை ...... ''த் துணிந்து ஒரு முழு நாவலுக்குரிய களமாக ஜேசுதாசன் கொண்டாரே அதைப் பாராட்டத்தான் வேண்டும்.

பனை யேற்றுக்காலம், அப்போது எடுக்கப்படும் அக்கானி (கருப்பணி) அக்கானி காய்ச்சுதல், கருப்புக்கட்டி செய்தல், (கருப்பட்டி விளைத்தல்) போன்ற பனை விளை கிராம அன்றாட நிகழ்ச்சிகளெவர்க்கும் பழக்கமாகிவிடுகின்றன. அவற்றுக்கெல்லாம் சிகரமாகச் சுவையூட்டுவது பனையேறுவோர் பனைமரத்திலிருந்தவாறு ''கூஉய் கூஉய்'' என்று ஓசைகொடுத்து. அம்மர உச்சிகளில் இருந்தபடியே நடத்தும் ''மகாநாடுகள்.''

சிந்தனைகளின் பதிவேடாகவே இலக்கியம் இருக்கும்போது அப்பதிவேட்டுக் குறிப்புக்களிலே பனைவிளை கிராமத்தைப் பொறித்து வைத்துள்ளமை ஹெப்ஸிபா ஜேசுதாசனது துணிவு கலந்த திறமையாகும்.

ஈழத்து வாழ்க்கை முறைகளின் ஒரு பகுதியே பனைவிளை கிராம வாழ்க்கையும். அதிற் தமிழ் நாட்டின் இணையையும்-சில வேளைகளில் அதனிலுஞ் சிறப்பையும் காணுதல் கூடும். எனவே பல நல்ல இலக்கிய விளைச்சல்களுக்கு இது களமாகுந் தகைமைத்ததாகும். அவ்வாறு களம் அமைக்கவும், அமைத்து எழுதப்பட்டவற்றை இனங்கண்டு ரசிக்கவும் ஏற்ற மனோபாவமும் உருவாக வேண்டும்.

# தமிழும் எழுத்தாளர்களும்.

'...தமிழ் மொழி, தமிழ் இலக்கியம், தமிழ்க்கலாசாரத்தின் தற்காப்பு இன்று படைப்பிலக்கிய எழுத்தாளர்கள் கையில் இருக்கிறது, குறிப்பாக (இந்திய) சுதந்திரத்துக்குப்பின் துவங்கிய எழுத்தாளர்களிடம். இவர்களுடைய நாட்டு மக்களுக்கே இவர்களைப் பற்றி அதிகம் தெரியாதிருந்தும் அறிவு ஜீவிகள் (INTELLECTUALS) என்ற சொல் இவர்களுக்கு எவ்வகையிலும் பொருத்தமானது. இவர்கள் ஐரோப்பா, அமெரிக்கா, தென் அமெரிக்கா ரஷ்யா, ஜப்பான் ஆகிய நாடுகளின் கலாச்சார முன்னேற்றங்களை ஆர்வத்தோடு அறிந்து கொள்கிறார்கள். இவர்கள் எழுதும் வாசகர் சூழாம் சிறிதாயினும் வளர்ந்து வருகிறது; ஆனால் ஜனரஞ்சகத் தன்மைக்காக இவர்கள் தரத்தையும் நிமிர்த்தையும் விட்டுக் கொடுத்து விடுவதில்லை. இவர்களுடைய உண்மையான போட்டி ஆங்கில--மொழி வெகுஜனப் புத்தக பதிப்பும், ஆங்கிலத்தில் இயங்கும் நவீன அச்சு, எலக்ட்ரானிக் சாதனங்களுமே என்பதை இவர்கள் நன்கறிவார்கள் '

—டாக்டர் ஆல்பர்ட் பி ஃபிராங்லின்
(நன்றி 'கணையாழி')

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் பேசும் சிங்களப் படம்

ஏ. ரகுநாதன்

சிங்களத்திலிருந்து தமிழில் டப் செய்யப்பட்டு 'நாலு லட்சம்' என்ற பெயருடன் ஒரு தமிழ்ப் படம் (இலங்கையில் நடந்த ஒரு நிகழ்ச்சியை ஆதாரமாகக் கொண்டது) விரைவில் திரையிடப்படவிருக்கிறது. அதை முழுமனதுடன் வரவேற்கிறேன்.

இலங்கையில் தரமான படம் எடுக்க முடியாதென்று விதண்டாவாதம் பேசும் தன்னம்பிக்கையற்ற கோழைகளுக்குக் காட்டவாவது கனிசமான ஒரு தொகையைப் போட்டு தயாரிக்கப்பட்ட ஒரு சில சிங்களப்படங்களைத் தமிழில் மொழி மாற்றி வெளியிட வேண்டும் என்று பல ஆண்டுகளாக முயன்றவன் நான். நான் இத்துறைக்கு வருவதற்கு முன்னாலேயே 'குசுமலதா' என மொழி மாற்றம் செய்யப்பட்டு தமிழில் ஒரு படம் வந்ததும், அதை இந்தியாவில் வெளியிட்டபோது தியேட்டருக்கு கல்லெறி விழுந்த கதையும் நாம் அறிந்ததே. இருந்தும் கடந்த 5,6 ஆண்டுகளாக இலங்கையின் தலை சிறந்த இயக்குநர்கள் சிலரிடம் நான் இது பற்றிப் பேசியிருக்கிறேன். குறிப்பாக திருவாளர்கள் லெஸ்டர் ஜேம்ஸ்பீரிஸ், திஸ்ஸலி ராஜபக்சா. கே, ஏ. டபிள்யூ. பெரேரா, லெனின் மொராயஸ், எல். எம். பெரேரா மற்றும் பலருடன் பேசியிருக்கிறேன். ஆனால் நான்பேசாத ஒருவர் இப்போ முன் வந்திருக்கிறார். பல வெற்றிப்படங்களின் இயக்குநரும், எடிட்டருமாகிய டைரஸ் தொடவத்தை தான் அவர் அவரின் இத்துணிச்சலை வாழ்த்தி வரவேற்கிறேன். இப்படத்தைத் தமிழகத்திலும் பண்டமாற்றுமுறையில் வெளியிட சகல முயற்சிகளும் எடுக்குமாறும் டைரஸ் தொடவத்தை அவர்களை வேண்டுகிறேன்.

ஒரு வழிப்பாதை வியாபாரம் ஒழிந்து இரு நாடுகளிடையே பரஸ்பரநேசம் மலர்ந்து கலைத்துறையில் ஒரு நல்ல போட்டியை உருவாக்கி, உலகெங்கும் வாழும் தமிழர்களுக்கு தரம் வாய்ந்த படங்களைப் பார்க்க இது ஒரு ஆரம்ப முயற்சியாகத்திகழ வேண்டும்.

மலேசியா, சிங்கப்பூர், முதலிய நாடுகளிலும் இப்படியான ஒரு முயற்சி இருப்பதாக அறிந்தேன். அது உண்மையாயின், தமிழ்ப்படஉலகம் மிகவிரைவில் தரம் வாய்ந்த படங்களைப் போட்டிமனப் பான்மையில் உருவாக்கி உலகப் படங்களுடன் தலை நிமிர்ந்து நிற்கும். அதற்கும் தமிழ்ப்பட உலகின் முன்னோடிகளாகவும், பெரிய சந்தையை ஏற்கெனவே கொண்டவர்களுமாகிய தமிழகத் திரைப்படத் துறையினரே முன்னோடிகளாக நின்று தமது மத்திய அரசைக் கலந்து வெளிநாட்டு தமிழ்ப்படங்களை ஓரளவாவது (பண்டமாற்று முறையிலாவது) தங்கள் நாட்டில் திரையிட ஏற்பாடு செய்ய வேண்டும். இதற்கு தமிழக முதலமைச்சர் மாண்புமிகு கலைஞர் கருணாநிதி அவர்கள் முன்னின்று வழிவகுக்க வேண்டும்,

கால வெள்ளத்திற்கு யாரும் அணை போட முடியாது, அப்படிப்போட முயன்றவர்களின் நிலை யாருக்கும் வர வேண்டாம் என விரும்புகிறேன். வெல்க டைரஸ் தொடவத்தையின் முயற்சி. இதன் பின் ஒரு புதிய திருப்பம் ஏற்படுவதையும் வரவேற்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈழத்துப் புலவர்கள்.

வரத பண்டிதர் (சிவராத்திரி புராணம்), பூலோக சிங்க முதலியார் (திருச்செல்வர் காவியம்), மயில் வாகனப்புலவர்(யாழ்ப்பாண வைபவமாலை), சிற்றம்பலப் புலவர் (சேனாதிராய முதலியாரின் குரு), நெல்லைநாத முதலியார், கணபதி ஐயர் (பல நாடகங்களின் ஆசிரியர்), லோறன்ஸ் புலவர், நமச்சிவாயப் புலவர், கணேசையர், கூழங்கைத் தம்பிரான், பிலிப்பு தெமெல்லோ, கபிரியேல் பச்சாக்கோ, சின்னத் தம்பிப்புலவர், கந்தப் பிள்ளை, தொன் பிலிப்புப் புலவர் (ஞானானந்த புராணம்) எனப் பதினேந்துக்கு மேற்பட்ட புலவர்கள் ஈழத்தவர்களே, இன்று இவர்களைப்பற்றி அனேகருக்குத் தெரியாமலே இருக்கின்றது.

எம். கே. ராஜா

## நடிகரின் நிறை

ஒருவன்: எனக்குச் சினிமாவிலிருக்கும் அறிவு வேறெவர்க்குமே இருக்க முடியாது. எந்தக் கேள்விக்கும் என்னால் பதில் சொல்ல முடியும்.

மற்றவன்: அப்படியானல் இரண்டு முன்னணி தமிழ் நடிகர்களின் நிறை என்ன என்று சொல் பார்ப்போம்?

ஒருவன்: ஒருவர் 242 ருத்தல், மற்றவர் 268 ருத்தல். இது மேக்கப்பின் பிறகு. மேக்கப் இல்லாமல் இருவருமே 175 ருத்தல்தான்.

எஸ். விஸ்வநாதராஜா

---

# அஞ்சலி

## கிழக்கு மாகாண மலர்

'அஞ்சலி' கிழக்கு மாகாண மலர் மிகக் கவர்ச்சிகரமாகத் தயாராகின்றது. கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த பிரபல அறிஞர்களும், எழுத்தாளர்களும், கவிஞர்களு இம்மலரில் எழுதுகின்றார்கள். இது ஒவ்வொரு வீட்டிலும் பாதுகாக்கப்படவேண்டிய பொக்கிஷமாகவிருக்கும். அதிகப் பிரதிகள் தேவையானோர் அறிவிக்க ம்.

ஆ—ர்.

---

198, நீர்கொழும்பு வீதி, வத்தளையிலிருக்கும் ஏ. எம். செல்வராஜாகளால் 79, முதலாம் மகுதி ஒழுங்கை, கொழும்பு-12 ல் இருக்கும் அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேமிப்பு வைப்புப் பணம்?

புத்தியுள்ள பெரும்பாலோர் செய்வதைப்போன்று முதலீடு செய்யுங்கள்.

கடின உழைப்பினுல் பெற்ற உங்கள் சேமிப்புகளை முதலீடு செய்யும் பொழுது, வெறும் வட்டி விகிதத்தினை விடுத்து, பாதுகாப்பு உண்டா என்பதை உறுதி செய்யுங்கள்.

இலங்கையின் மிகப்பெரிய நிதி நிறுவனமான மேர்கண்டைல் கிரெடிட் லிமிட்டெட்டில் உங்கள் சேமிப்புக்களை முதலீடு செய்யுங்கள்.

இது வங்கியைப் போன்று பாதுகாப்பான, உறுதியான ஒரு நிறுவனம்.

மேர்கண்டைல் கிரெடிற் லிமிட்டெட் உங்கள் சேமிப்புக்கு வழங்கும் அனுகூலங்கள் இதோ:-

1. வங்கியைப் போன்று உத்தரவாதமுள்ள பாதுகாப்பு; 3 கோடி ரூபாவுக்கு மேற்பட்ட தொகையை மொத்த இருப்புத் தொகையாகவும், 60 இலட்சம் ரூபாவுக்கும் மேற்பட்ட தொகையை மூலதனமாகவும் ஒதுக்கு நிதியாகவும் கொண்ட மேர்கண்டைல் கிரெடிற் லிமிடெட் மட்டுமே, முதலீட்டாளர்களுக்கு இவ்வுறுதியை வழங்கக்கூடிய நிலையில் உள்ளது.

2 எமது அதிகரிக்கப்பட்ட வட்டி விகிதங்கள் அரசாங்கக் கொள்கைக்கு இயைவானவை, அத்துடன் கவர்ச்சியுள்ளவையுங்கூட!

**8%** காலமுறை வைப்புப் பணம்
3 மாத அறிவித்தலின் மீது வட்டியுடன் மீளப் பெறக்கூடியது.

**12%** தவணைமுறை **13%** வைப்புப் பணம்
2 அல்லது 4 ஆண்டுகளுக்கு நிலையாக்கப்பட்டது; மாத வீதத்தில் வட்டி செலுத்தப்படுவதற்குரியது.

**13%** நிலையான **14%** வைப்புப் பணம்
3 அல்லது 5 ஆண்டுகளுக்கு நிலையாக்கப்பட்டது. முதிர்வடைவதின் மீது வட்டி செலுத்தப்படுவதற்குரியதாகும்.

3. விசேஷ அனுகூலங்கள்:-

- அவசரமாகப்பணம் தேவைப்படும் விண்ணப்பங்கள் சகல வைப்புப்பணத் திட்டங்கள் மீதும் உரிய வட்டியுடன் பரிசீலிக்கப்படும்.
- பண வைப்பாளரின் அல்லது பண வைப்பாளர்களின் பெயரில் வைப்புப்பணம் கூட்டாக இடப்படலாம். அது கூட்டாக அல்லது தனியாக உயிருடன் உள்ளவர்க்கு அல்லது உள்ளவர்களுக்கு அல்லது நியமிக்கப்பட்டவர்க்குத் திருப்பிக் கொடுக்கப்படும்.
- வைப்புப் பணம்மீதான வட்டி, பணவைப்பாளருக்கு அல்லது கூட்டு வைப்பாளர் எவர்க்காயினும் அல்லது நியமிக்கப்பட்ட எவர்க்கும் செலுத்தப் படுவதற்குரியதாகும்.

## மேர்கண்டைல் கிரெடிற் லிமிட்டெட்

'மேர்கன்டைல் ஹவுஸ்' 51-53 இராணிவீதி, கொழும்பு-1

தொலைபேசி: 23283-4-5.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ANJALI NOV. 1971 Registered as a Newspaper in Ceylon No. QB 59/300-3959




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org